பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

அறிமுகவிலை
20/=

புதுமை : 01 | 29 ஒக்டோபர் 2016 | விதி : 20




# காவல்... தாஸன்... சூடு!!



## அவிழத்தொடங்கும் மர்ம முடிச்சுக்கள்



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# அனாரின் கவிதை

என் துக்கத்தின்மீது பொழியும்
அளவு கடந்த
முரட்டுத்தனமான பனிப்
பொழிவை
உன்னில் சுமத்துவதற்கில்லை

தளர்ந்த மூதாட்டியின்
பொறுமையோடு
அதனை அகற்ற முயல்கிறேன்

சூறைக்காற்றினில் மூழும்
காட்டுத் தீ
அடங்காமல் எரிகின்றது,
உடம்பின் புலன்கள்
ஒவ்வொன்றாய்
கருகும் வரை...


மனக்கசப்பின் மௌனம்
குருதி அப்பிய வாள்
வேதனையை விடாமல் கீறிக்
கொண்டேயிருக்கிறது


என்னால் சகித்துக்கொள்ள
முடியும்,
சக்திவாய்ந்த பலவானாய்

முதல் காலையில்
அனைத்துமே உண்மைகளாக
இருந்தன,
அடுத்த காலையில் பொய்த்தன
அனைத்துமே பொய்களாக.

இரண்டின் நடுவிலும்
முழுமையாக இருக்கிறேன் நான்

நீ இரண்டிலிருந்தும் தப்பிச்
செல்கிறாய்.





# தொடர்கதை 20

## ஆறாவடு

சயந்தன்

ஒரு நாளின் காலைச் செய்தியை கொற்றவை இப்படி ஆரம்பித்தார். "வன்னிப் பெருநிலப் பரப்பின் மக்கள் வாழிடங்களை ஆக்கிரமித்து நின்ற சிறிலங்காப் படைகளின் 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கைக்கு எதிராக தேசியத் தலைவரின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை பல முனைகளிலும் இன்று அதிகாலை முதல் நடத்தி வருகிறார்கள்"

பிறகு அன்றைய விசேட ஒலிபரப்பில் "இதோ ஒட்டு சுட்டான் முழுவதுமாக புலிகளிடம் விழுந்து விட்டது என்ற செய்தி வந்திருக்கிறது. மாங்குளத்தைத் தொடர்ந்து கனகராயன் குளத்திலிருந்தும் இராணுவத்தினர் விரட்டியடிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். நெடுங்கேணியில் பல நூற்றுக் கணக்கான படையினர் கொல்லப்பட்டிருக்கின்றனர்" என்று தவபாலன் தொடர்ச்சியாக அறிவித்துக் கொண்டிருந்தார்.

அந்த நேரம் புலிகள் மனிதாபிமானம் சற்றும் இன்றி அரக்கத்தனமான தாக்குதல்களைத் தமது படையினர் மீது நடத்துவதாக சந்திரிகா கொழும்பில் அறிவித்துக் கொண்டிருந்தார்.

எனக்கு இருப்புக் கொள்ளாத அந்தரமாயிருந்தது. அளம்பிலில் என் காலைச் சிதைத்த ஆமிக்காரன் மீது திரும்பத் திரும்ப ஆத்திரம் வந்தது. அது மட்டும் நடந்திருக்கா விட்டால் இந்தச் சண்டைகளில் நானும் ஓர் அணியோடு நின்றிருப்பேன். சண்டைப் போராளியாக இருப்பது எவ்வளவு நல்லது. சனங்களைச் சந்திக்க வேண்டியிருப்பதில்லை. அவர்களின் கேள்விகளுக்குப்-பதில் சொல்ல அல்லாட வேண்டியதில்லை.

இப்பொழுது சனங்களைத் தினமும் சந்திக்க வேண்டியிருக்கிறது. அவர்களை எப்படி அணுகுவது என்று வகுப்புகளில் சொல்லித்தருகிறார்கள். சனங்கள் கேள்வி கேட்கிறார்கள். பல நேரங்களில் பதில் சொல்ல முடிவதில்லை. "மேலிடத்தில இதை பற்றிக் கதைக்கிறோம்" என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நேரு ஐயாவின் ஒவ்வொரு கேள்விக்கும், மரியாதைக்காக வேணும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. கடைசியாக அவரைச் சந்தித்த போது "இந்த வெற்றிகளாலேயே கடைசி வரைக்கும் நாட்டைப் பிடிக்க முடியும் எண்டு நான் நினைக்கேல்ல . இது ஒரு பேரம் பேசுகிற சக்தி. இந்தச் சண்டை முடிஞ்ச உடனை எப்பிடியும் சந்திரிகா பேச்சு வார்த்தைக்கு வருவாள். அதைத் தூக்கி எறியாமல் பேச்சுக்குப் போங்கோ. இறுதி முடிவு சண்டையில வராது. அது மேசையில தான் வரும்" என்று அவர் பெரிய லெக்சர் அடித்தார்.

"அண்ணைக்கு எல்லாம் தெரியும்" என்று மட்டும் சொல்லிவிட்டு நான் வந்துவிட்டேன்.

ஆனால் சந்திரிகா வரவில்லை.

பிறகு ஆனையிறவு விழுந்தது. இப்பொழுதும் சந்திரிகா வரவில்லை. சாவகச்சேரியும் விழுந்து யாழ்ப்பாணத்தைப் போராளிகள் சுற்றி வளைத்து நின்ற போதும் சந்திரிகா வரவில்லை. இந்தியன் நேவி தான் வருமென்றார்கள். யாழ்ப்பாணம் இன்றைக்கோ நாளைக்கோ விழுமென்றிருந்தது. அதற்குள் நாற்பதாயிரம் ஆமிக்காரர்கள் நின்றார்கள். அவர்களை இந்தியன் நேவி வெளியேற்றுமாம் என்று கதை பரவத் தொடங்கியது. அண்ணை என்ன நிலைபாட்டில் இருந்தார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்தியா தங்களோடு உடன்பாட்டுக்கு வராமல் தன் போக்கில் இராணுவத்தை மீட்டால் இந்தியக் கப்பல்களை கரும் புலிகளைக் கொண்டு தாக்கியழிக்க சூசையண்ணை அண்ணையிடம் அனுமதி கேட்டிருந்ததாக எங்களுக்குள் ஒரு கதை உலாவியது.

ஆனால் அதற்கெல்லாம் தேவையேற்படவில்லை. கடைசியாக இந்தியன் நேவியும் வரவில்லை. இயக்கம் தான் சாவகச்சேரியையும் யாழ்ப்பாண முற்றுகையையும் கை விட்டு விட்டு வந்தது. எனக்கெல்லாம் விசர் தான் வந்தது. யாழ்ப்பாணத்தை ஏன் பிடிக்க முடியவில்லை என்பதற்கு எங்களுக்கு வகுப்பில் சொல்லப்பட்ட காரணங்கள் இவை;

1. பிடித்த இடங்களைத் தொடர்ந்தும் தக்க வைக்க போதிய ஆட்பலம் இல்லை.

2. காட்டுச் சூழலில் வெற்றிகரமாகச் சண்டை பிடிக்கும் இயக்கத்திற்கு கட்டடச் சூழலில் சண்டை பிடிக்கின்ற அனுபவம் போதாது.

3. ஆயுத வளப் பற்றாக்குறை.

இவற்றை விடச் சனங்கள் இன்னொரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு திரிந்தனர் - லண்டனிலுள்ள பாலசிங்கத்திற்கு இந்தியாவிடமிருந்து ஒரு பக்ஸ் போனதாம். சண்டையை நிறுத்தச் சொல்லியும் தாங்கள் இலங்கைப் படையினரை வெளியேற்றப் போவதாகவும் அதில் இருந்ததாம். அதனாலேயே இயக்கம் வெளியேறியதாம். இந்தியா கடைசியில் ஏமாத்திப் போட்டுதாம்.

நேரு ஐயா 'டி டே' புத்தகத்தை மொழி பெயர்த்து முடித்திருந்தார். தமிழில் அதற்கு "நோர்மண்டித் தரையிறக்கம்" என்ற பெயரை வைக்கலாம் என்று அவர் அபிப்பிராயப்பட்டார். முதற் தடவையாக இயக்கம் மொழிபெயர்த்த புத்தக மொன்றை நான் முழுவதுமாகப் படித்தேன். முன்பு படியுங்கள் அறியுங்கள் என்றொரு சின்னப் புத்தகம் தனியே இயக்காரர்களுக்கு மட்டும் என்று கிடைத்தது. அதில் இயக்கம் என்ன பிழைகளைச் செய்கிறது என்றும் எதையெல்லாம் செய்யக் கூடாது என்றும் சின்னச் சின்ன துணுக்குகளும் ஜோக்குகளும் வரும். இயக்க வாகனங்களின் ஓவர் ஸ்பீட்டை நக்கலடித்துத் தான் நிறைய ஜோக்குகள் வந்தன. அங்கேயுள்ள றோட்டுக்களுக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாத வேகத்தில் கண்மண் தெரியாமல் இயக்கம் வாகனங்களை ஓட்டியதால் நான்கைந்து விபத்துகளும் சனங்களில் ஒன்றிரண்டு சாவுகளும் நடந்திருந்தன. ஒரு கார்ட்டூன் ஜோக் இப்படி இருந்தது.

விடியற்காலை தூக்கத்தால் எழுந்த சிறுமியொருத்தி "அம்மா கனவில் ஒரு பேய்.. ஊஊ என்று வந்து என்னைப் பிடிச்சது" என்று சொல்லிக் கொண்டே வருகிறாள். திடுக்கிடும் முக பாவனையில் வரையப்பட்டிருந்தது. அம்மா "ஊ... ஊ என்று வந்தால் கட்டாயம் ஊனா வாகனம் தான். பிள்ளை நீ பள்ளிக்கூடம் போகாதை" என்று சொல்லுவாள். போராளிகளின் வாகன இலக்கத்தகடு 'உ' என்ற எழுத்தில் ஆரம்பித்தது. சனங்களிடையே இயக்கத்திற்கு ஊனா வாகனக்காரர் என்றொரு பெயரும் புழக்கத்தில் இருந்தது .

நோர்மண்டி என்பது பிரான்சின் நீளமான கடற்கரை, இரண்டாம் உலகப் போரின் போது பிரான்ஸ் முழுவதுமாக ஜேர்மனியிடம் விழுந்திருந்தது. ஜேர்மனிக்கு எதிராக அமெரிக்கா, பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகளின் படைகளும், பிரான்சின் சுதந்திரப் படைகளும், ஜேர்மனியால் கைப்பற்றப் பட்டிருந்த மற்றைய நாடுகளின் நாடு கடந்த படைகளும், கடல் வழியாகவும், வான் வழியாகவும் பெரும் தரையிறக்க மொன்றை நோர்மண்டியில் நடாத்தினார்கள். ஒரு இரவுக்குள் ஒரு லட்சத்து அறுபதினாயிரம் படையினர் கடல் வழியாக இறக்கப் பட்டனர். ஒரு மாதத்தில் பத்து லட்சம் படையினர் நோர்மண்டி ஊடாகப் பிரான் சுக்குள் நுழைந்தனர். ஜேர்மனியக் கட்டுப் பாட்டுப் பகுதியில் தனியே கடல், ஆகாயவழி விநியோகங்களை மட்டும் நம்பி நிலைகொண்டு அங்கிருந்து ஜேர்மனிக்கெதிரான ஓவர்லோட் நடவடிக்கையை நேசப்படைகள் மேற்கொண்டன. மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர்கள் பாரீஸை விடுவித்தனர்.

(வலிகள் இன்னும்...)



# பாலியாறு நகர்கிறது...

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

எங்களின் நகரம் என்று ஒரு காலம் வர்ணிக்கப்பட்டது மல்லாவி. அது 1990 களின் பிற்பகுதி. அல்லது சந்திரிகா குமாரதுங்கவின் யுத்தகாலம். வன்னியில் சின்னஞ்சிறிய குடியேற்றக் கிராமமாக இருந்த இடம் திடீரென, ஐ.நாவின் கொடி பறக்கும் இடமாகியதென்றால், யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்! ஐ.நாவின் கொடி மட்டுமல்ல, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கொடி தொடக்கம், உலகத்தின் பெரும்பாலான தொண்டு நிறுவனங்களின் கொடிகள் வரையில் ஏராளம் கொடிகள் மல்லாவியில் பறந்தாடின. அவற்றின் அலுவலகங்களும், உலகத்தின் பல இனத்தையும் சேர்ந்த பணியாளர்களுமாக மல்லாவி புதியதொரு தோற்றத்தை எடுத்தது. இதைப்பார்த்த ஒரு நண்பர் சொன்னார், "மல்லாவி இப்போது எங்களின் நகரமாகி விட்டது. உள்ளூர் வீடுகள் எல்லாம் வெளிநாட்டுக் காரர்களால் நிரப்பப்படுகின்றன. சொந்தக் கிராமத்து ஆட்களும் சொந்த நாட்டுக் காரரும் கொட்டில்களிலும், குடிசைகளிலும் உண்டு, குடித்து, உறங்குகிறார்கள். அந்த வீடுகளில் வெளியாட்கள் காலாட்டிக் கொண்டு சொகுசாக இருக்கிறார்கள்" என்று. எல்லாத்துக்கும் காசுதான் காரணம். காசுக்காகவே தங்களுடைய சொந்த வீடுகளை என். ஜீ. ஓக்களுக்குக் கொடுத்து விட்டு எல்லோரும் தோட்டங்களிலும் வயற் காடுகளிலும் உள்ள குடிசைகளில் கிரகப் பிரவேசம் செய்தார்கள்.

## இலங்கையில் ஓர் ஆபிரிக்கா...

மல்லாவியில் இப்படித் திடீரெனத் தொண்டு நிறுவனங்கள் குவியக் காரணம், கிளிநொச்சியை நோக்கிய படையெடுப்பே. இதனால் கிளிநொச்சியில் இயங்கிய தொண்டு நிறுவ்னங்கள் அத்தனையும் இடம்பெயர்ந்து மல்லாவிக்கே சென்றிருந்தன. அப்படிச் சென்ற தொண்டு நிறுவனங்களுக்கு பணிமனைகள் அமைப்பதற்கு இடம் தேவை. ஆனால், அதற்குரியமாதிரி அங்கே வீடுகளோ, பெரிய கட்டடங்களோ இல்லை. குடியேற்றக் கிராமத்தில் பெரிய ஏற்பாடுகளையும் அதிக வசதிகளையும் எதிர்பார்க்க முடியாது. அதுவும் வன்னியில். ஆனால், அதை விட்டாலும் வேறு வழியில்லை. எனவே, இருக்கின்ற வீடுகளை எடுத்து, அவற்றின் பக்கமெல்லாம் பத்திகளை இறக்கிப்பெருப்பித்து, ஒருவாறு தங்களுக்கேற்றமாதிரி வசதிகளைச் செய்து கொண்டார்கள்.

1995 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய படைகள், வன்னியை ஊடறுக்கும் பெரும் சமர்களை செய்து கொண்டிருந்தன. பிறகு 1996 யூலையில் கிளிநொச்சியைக் கைப்பற்றின. படைகளின் வெற்றி, சந்திரிகா அரசாங்கத்தை போருக்கு ஊக்கப்படுத்தியது. தொடர்ந்து ஜெயசிக்குறுவை சந்திரிகா ஆரம்பித்தார். அதுவே மல்லாவியிலும் புதுக்குடியிருப்பிலும் அக்கராயன் ஸ்கந்தபுரத்திலுமாக மூன்று மையங்களை உருவாக்கியது. இதில் புதுக்குடியிருப்பு புலிகளின் மையமாக இருந்தது. மல்லாவி என்.ஜீ.ஓக்களின் மையம். ஸ்கந்தபுரம் சனங்களின் மையம். எல்லா இடங்களிலும் சனங்களும் இருந்தாலும் இந்த மாதிரி ஒரு ஒழுங்குதான் அப்போது வன்னியிலிருந்தது.

நெல் விதைப்புப் போக, புலவுகளில் உழுந்தையும், எள்ளையும் விதைத்தும், அறுத்தும் கொண்டிருந்த சனங்களுக்கு என். ஜீ. ஓக்களும் வெள்ளை, கறுப்பு, பிரவுண் என்று கலர் கலராக மனிதர்களும் ஊருக்குள் வந்தால் எப்பிடியிருக்கும்? கொஞ்சநாள் சனங்களுக்கு வேடிக்கையும் புதினமும். பிறகு எல்லாமே வழமையாகி விட்டன. என்றாலும் பெரும்பாலான வெள்ளையர்கள் மல்லாவியை 'மாலாவி' என்றே சொன்னார்கள். "மாலாவி இல்லை. மல்லாவி" என்று எப்படித்தான் சொல்லிக் கொடுத்தாலும் அவர்கள் மாலாவி என்றே சொல்லித்தொலைத்தார்கள். "மாலாவி என்றொரு நாடு ஆபிரிக்கக்கண்டத்திலிருக்கிறது" என்று கூட ஒரு நண்பர் எடுத்துச் சொல்லிப் பார்த்தார். "ஓ.. அப்படியா.. இதுவும் ஆபிரிக்காதானே" என்றிருக்கிறார் அந்த வெள்ளையர். அவர்களைப் பொறுத்த வரை வெயிலும், வெக்கையும், கறுப்பும் என்றால் ஆபிரிக்காதான். இப்படி ஆயிரம் கூத்துகள்.

## புதிய ஏற்பாடு...


யுத்தம் கடுமையாக நடந்து கொண்டிருந்தது. பொருளாதாரத் தடையால் சனங்கள் சாப்பாட்டுக்கே கஸ்ரப்பட்டார்கள். நிவாரணப் பொருட்கள் மட்டும் தான் வாழ்வாதாரமாக இருந்த நாட்கள் அது. ஆனால், வன்னிக்கு வருகிற பொருட்கள் வன்னியிலுள்ள சனங்களுக்குப் போதாது. உள்ளூரில் விவசாயமும் பெரிய அளவில் கை கொடுக்கவில்லை. உரமும் மருந்தும் தடைசெய்யப்பட்ட பட்டியலில் இருந்ததால், விவசாயத்தைத் தேவையான அளவுக்குச் செய்ய முடியேல்ல. உழுந்தும், நெல்லும் விளைகிற புலவுகளில் பட்டினியும், பஞ்சமும் விளைந்தது. ஒரு கட்டத்தில் சனங்கள், "பொருளாதாரத் தடையை நீக்குங்கள்" என்று சொல்லி, ஐ. நா பணிமனையின் முன்னே அடையாளப் போராட்டத்தை நடத்தத் தொடங்கினார்கள். இந்தப் போராட்டம் 200 நாட்களுக்கும் மேலாகச் சுழற்சி முறையில் நடந்தது. ஆனால், சந்திரிகாவுக்கு சனங்களின் சாப்பாட்டுப் பிரச்சினையை விட, படை நடவடிக்கைதான் முக்கியமாக இருந்தது. சனங்கள் போராட்டம் நடத்திக் களைத்ததுதான் மிச்சம்.

அப்போது எதிர்பாராத விதமாக ஒரு பேச்சுவார்த்தைச் சூழலை உருவாக்கியது நோர்வே அரசு. அதற்காகப் புலிகள் மல்லாவியில் ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்தனர். பொருத்தமான இடத்தில் வீடொன்றை எடுத்து, அதை விரிவாக்கினார்கள். அங்கே தங்குமிடம், தங்குவோருக்குச் சமையற்காரர்கள், காவல் ஏற்பாடுகள், சந்திப்பிடம் எனப் பலவும் ஏற்பாடு செய்யப்பட்டன. பேச்சுகளுக்காக என்று வெளியிலிருந்து வரும் ஹெலிகொப்ரர்கள் இறங்குவதற்கான இடமும் பார்த்து, ஹெலி இறங்குகிற இடத்தில் அடையாளமும் இடப்பட்டாயிற்று. ஏறக்குறைய இனிப்பேச்சுகள் ஆரம்பிக்கப்படுவதற்கான நாள் குறிப்பது மட்டும் தான் பாக்கி என்றிருந்தது. என்ன நடந்ததோ தெரியாது. ஏற்பாடுகள் எல்லாம் குழம்பி விட்டன. பேச்சுகளுக்காகத் தயார்ப்படுத்திய அந்த வீட்டைப் புலிகள் பிறகு தங்களுடைய சந்திப்புகளுக்காகவும் பிறகு போராளிகளை இணைத்துக் கொள்வதற்காகவும் பயன்படுத்தினார்கள். அதாவது சமாதான ஏற்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட ஓரிடம் போருக்காகப் பயன்படுத்தப்பட வேண்டியதாயிற்று.

## வளரும் கிராமமும், நகரும் ஆறும்

இந்த வீட்டிலிருந்து சரியாக நான்கு கிலோ மீற்றர் தொலைவிலிருந்தது, வடகாடு. அங்கேதான் இருந்தது, கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனின் வீடு. ஆனால் ஜெயபாலன் அப்போது அங்கே இருக்கவில்லை. அப்போது அங்கே அவருடைய அம்மாவும், அப்பாவும் இருந்தனர். அருகிலே ஐ.நாவின் துணை நிறுவனமொன்றிருந்தது. வடகாட்டுக்கு மேற்கே இருந்தது வவுனிக்குளம். சோழ மன்னர்கள் ஒரு காலம் கட்டிய குளம் என்று சொல்லப்படும் இந்தக் குளத்தையே, பின்னர் கடந்த நூற்றாண்டில் பெருப்பித்துக்கட்டி, வவுனிக்குளம், மல்லாவி, துணுக்காய் குடியேற்றத் திட்டங்களைச் செய்தது அரசாங்கம். யாழ்ப்பாணத்தவர்களே இந்தப் பகுதிகளில் குடியேறினார்கள். அதிலும் கூடுதலானவர்கள் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள். மல்லாவிக்கு வந்த நெடுந்தீவு வாசிகள், ஊரிலிருந்து மாடுகளையும் ஆடுகளையும் கடல் வழியாக படகுகளில் கொண்டு வந்து சேர்த்தனர். பட்டிகள் பெருகின. காடறியாதவர்களெல்லாம், காட்டில் நம்பர் 01 வேட்டைக்காரரானார்கள். தேன் எடுக்கவும் உடும்பு பிடிக்கவும் பன்றி சுடவும் பழகினார்கள். மான் இறைச்சியும் மரை வத்தலும் யாழ்ப்பாணத்துக்கும், தீவுக்கும் போனது. குடியேறியவர்கள் மல்லாவியிலும், துணுக்காயிலும், வவுனிக்குளத்திலும், ஒட்டங்குளத்திலும் உழுந்து போட்டார்கள். மிளகாய்க் கன்றுகளை நட்டனர். எள் விதைத்தனர். சும்மா சொல்லக்கூடாது, எல்லோருக்கும் கைகுடுத்தது உழுந்தும் எள்ளும். மல்லாவியின் முதலாவது எழுச்சி என்பது உழுந்தினால் உண்டானதே. மல்லாவி, துணுக்காய் என்றால் உழுந்து என்றொரு அடையாளம் ஒரு காலம் இருந்தது. உழுந்தைக்கொள்வனவாகக் கட்டி, மல்லாவியின் அடையாளமாக மாறியது பிள்ளையார் ஸ்ரோர்ஸ்.

ஆனால், எல்லாத்துக்கும் உயிர்நாடி பாலியாறுதான். பாலியாற்றுத் தண்ணீரைத் தேக்கியே வவுனிக்குளம் கட்டப்பட்டது. வவுனிக்குளத்தை வைத்தே மல்லாவி, வவுனிக்குளம், அனிஞ்சியன் குளம், யோகபுரம், ஒட்டங்குளம், துணுக்காய், எள்ளறுத்த காடு, தேறாங்கண்டல் எல்லாம் உருவாகின. இந்தப் பாலியாறு தான் ஜெயபாலனின் முதலாவது காதலி. பாலியாறு நகர்கிறது.. என்று 1968



அங்கும் இங்குமாய்
இடையிடையே வயல் வெளியில்
உழவு நடக்கிறது
இயந்திரங்கள் ஆங்காங்கு
இயங்கு கின்ற ஓசை
இருந்தாலும்
எங்கும் ஒரே அமைதி

ஏது மொரு ஆர்ப்பாட்டம்
இல்லாமல் முன் நோக்கி
பாலி ஆறு நகர்கிறது.
ஆங்காங்கே நாணல்
அடங்காமல் காற்றோடு
இரகசியம் பேசி
ஏதேதோ சலசலக்கும்.
எண்ணற்ற வகைப் பறவை
எழுப்பும் சங்கீதங்கள்.
துள்ளி விழுந்து
'துழும்' என்னும் வரால்மீன்கள்.

என்றாலும் அமைதியை
ஏதோ பராமரிக்கும்
அந்த வளைவை அடுத்து
கருங்கல் மறைப்பில்
அடர்ந்துள்ள நாணல் அருகே
மணற் கரையில் இரு மருங்கும்
ஓங்கி முகடு கட்டி
ஒளி வடிக்கும்
மருத மர நிழலில்
எங்கள் கிராமத்து
எழில் மிகுந்த சிறு பெண்கள்
அக்குவேறு ஆணிவேறாய்
ஊரின் புதினங்கள்
ஒவ்வொன்றாய் ஆராய்ந்து
சிரித்து கேலி செய்து
சினந்து
வாய்ச் சண்டை யிட்டு
துவைத்து
நீராடிக் களிக்கின்றார்.

ஆனாலும்
அமைதியாய்ப்
பாலி ஆறு நகர்கிறது

அந் நாளில்
பண்டார வன்னியனின்
படை நடந்த அடிச் சுவடு
இந்நாளும் இம்மணலில்
இருக்கவே செய்யும்
அவன் தங்கி இளைப்பாறி
தானைத் தலைவருடன்
தாக்கு தலைத் திட்டமிட்டு
புழுதி படிந்திருந்த
கால்கள் கழுவி
கைகளினால் நீரருந்தி
வெள்ளையர்கள் பின் வாங்கும்
வெற்றிகளின் நிம்மதியில்
சற்றே கண்ணயர்ந்த
தரை மீது அதே மருது
இன்றும் நிழல் பரப்பும்
அந்த வளைவுக்கு அப்பால்
அதே மறைப்பில்
இன்னும் குளிக்கின்றார்
எங்களது ஊர்ப் பெண்கள்

ஏது மொரு
ஆர்ப்பாட்டம் இல்லாமல்
பாலி ஆறு நகர்கிறது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# காவல்... காலன்... சூடு!!




புதுவிதி புலனாய்வுக் குழு

## அவிழத்தொடங்கும் மர்ம முடிச்சுக்கள்

இன்னமும் கொக்குவிலில், ஒரு மழை இரவில், பொலிஸாரால் கொல்லப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான சுலக்சன், கஜன் ஆகியோரின் குருதியின் ஈரம் இன்னமும் காயவில்லை. அவர்களின் கொலையால் ஏற்பட்ட அதிர்வலைகள் அடங்கவில்லை. அதேநேரம் பல மர்ம முடிச்சுகளும் இப்போதுதான் மெல்ல மெல்ல அவிழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் வீதியில், ஆளரவமற்ற நள்ளிரவை நெருங்கும் பொழுதில், அதுவும் இடி முழக்கத்தோடு கூடிய மழைக்காலத்தில் இடம்பெற்றமையாலும், பொலிஸார் திட்டமிட்டுப் பல தடயங்களை இரவோடி ரவாக அழித்து விட்டதாலும் பல மர்மங்கள் துலங்காமலே இருக்கின்றன. அந்த மர்ம முடிச்சுக்களை கொஞ்ச மேனும் அவிழ்க்க, சில விடயங்களில் நாங்கள் மற்றைய ஊடகங்கள் நோக்காத சில் கோணங்களில் களமிறங்கினோம். இதனால் சில விடை தெரியாக் கேள்விக ளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட விடைகளை பெற முடிந்தது. இந்த விடைகள் இந்த இரட்டைக் கொலை வழக்கில் முக்கியமான திருப்புமுனைப் புள்ளிகளாகக் கூட அமையலாம். இங்கு சொல்லப்படுகின்ற சம்பவம் பலருக்கு இணையங்களிலும், பத்திரிகைகளிலும் வாசித்து தெரிந்திருப்பினும், அந்தச் சம்பவத்தில் ஒளிந்திருக்கும் சில உண்மைகள் தெரிந்திருக்காது என்பதே எமது ஊகம்.

கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு. நள்ளிரவை எட்டிக் கொண்டிருக்கும் தருணத்தில்தான் அந்தக் கோரம் நிகழ்ந்து முடிந்தது. கொக்குவில் பகுதியில் சம்பவம் நடப்பதற்கு சிலநாள்கள் முன்னதாகவே சந்திக்குச் சந்தி பொலிஸ் குழுக்கள் தீவிர சோதனை நடவடிக்கையில் இறங்கியிருந்தன. சிலகாலமாக காணாமல் போயிருந்த வாள்வெட்டுக் கும்பல்களின் கைவரிசை தொடர்ச்சியாகக் குடாநாட்டில் மீண்டும் அரங்கேறத் தொடங்கியதால், அதைக் கட்டுப்படுத்த அல்லது அந்த வாள்வெட்டுக் கும்பல்களைப் பிடிக்கவே பொலிஸாரின் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கென விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிறி கஜன் அறிவித்திருந்தார்.

வீதியில் போய் வருகின்ற சகல வாகனங்களையும் நிறுத்திய பொலிஸார், அவை எல்லாவற்றையும் சோதனைக்குட்படுத்தவில்லை. தமக்கு சந்தேகமில்லை என்று நினைக்கின்ற வாகனங்களை எந்தவிதக் கேட்டுக் கேள்வியும் இல்லாமல் போகப் பணித்தார்கள். சிலவற்றை மாத்திரம் துருவி துருவிச் சோதித்தார்கள். இது சனநடமாட்டம் அதிகமுள்ள 9 மணிவரை மாத்திரமே. அதற்குப் பிறகு சகல வாகனங்களும் கட்டாய சோதனையின் பின்னே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டன.

### ௨ இடங்களில் மறிப்பு

இந்தச் சமயத்தில் தான் கஜனும், சுலக்சனும் நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு வந்து கொண்டிருந்தார்கள். பகலென்றால் முன்வால் வருபவர்கள் 'லைற்' போட்டுக் காட்டினால் பொலிஸ் நிற்பதை உணர்ந்து குச்சொழுங்கைகளால் வெட்டி ஓடி சென்றிருக்க முடியும். ஆனால் அந்தச் சாமப் பொழுதில் ஆட்கள் வீதியில் பயணிப்பதே குறைவு. அன்றைக்கு மழை விட்டு விட்டு தூறிக் கொண்டிருக்க இடி முழக்கம் வேறு காதைப் பிளந்து கொண்டிருந்தது. இந்த நேரத்தில் வழக்கமாக செல்பவர்கள் கூட மழைக்கு பயந்து வேளைக்கே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். வேகமாக வந்தவர்களைப் பொலிஸார் கொக்குவில் சந்தியில் மறித்தனர். அப்போது தான் அவசரத்தனமான - தவறான - முடிவை இருவரும் எடுத்திருக்க வேண்டும். ஏன் அந்த முடிவை எடுத்தார்கள் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது. மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற சுலக்சனிடம் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட சகல ஆவணங்களும் இருந்திருக்கின்றன. அப்படியானால் பொலிஸார் மறித்தபோது அதனைக் காட்டிவிட்டுச் செல்வதில் சிக்கல் இருக்கப் போவதில்லை. அல்லாது விடின் இருவரும் அல்லது இருவரில் ஒருவர் மதுபானம் அருந்தியிருக்க வேண்டும். (மருத்துவப் பரிசோதனை அறிக்கையில் இருவரும் மது அருந்தியிருந்தார்கள் என தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.)

### உண்மை தெரியவில்லை

"பொலிஸார் மறிக்கும் போது மோட்டார் சைக்கிளை நிறுத்துவதுபோல அதன் வேகத்தைத் தணித்துவிட்டுப் பின்னர் சட்டென அதன் ஆர்முடுகலை ஒரே நொடியில் அதிகரித்துக் கொண்டு அங்கிருந்து தப்பித்தார்கள். பொலிஸார் அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளை நிறுத்துகிறார்கள் என்று ஏமாந்திருந்த கணத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு நழுவியிருந்தார்கள். ஆனால் அவர்களின் கெட்ட காலம் அதற்கு அடுத்த சந்தியிலும் பொலிஸ் குழு நின்றது. அங்கும் முன்னர் பாவித்த அதேயுக்தியைப் பிரயோகித்து தப்ப முனைந்தார்கள். ஏற்கனவே முதலாவது பொலிஸ் குழு இருவர் தப்பித்து வருவதை இரண்டாவது குழுவுக்கு அறிவித்திருந்தது அப்படியிருந்தும் அவர்கள் இரண்டாவது சோதனையில் இருந்தும் நழுவிச் சென்றது பொலிஸாருக்கு ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்தது. சுலக்சனும் கஜனும் பின்னால் பொலிஸ் வருகிறதா எனத் திரும்பிப் பார்த்தபடி தப்பித்துவிட்ட சந்தோசத்தில் சென்றுகொண்டிருந்தபோது தான் திடீரெனத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன." என்று நடந்த சம்பவம் பற்றி பொலிஸ் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் எந்தளவு தூரம் உண்மை உள்ளது என்பது கைது செய்யப்பட்டுள்ள பொலிஸாருக்கு மாத்திரமே தெரியும். எனினும் பொலிஸாரை உச்சிவிட்டு கஜனும், சுலக்சனும் சென்றதுமாத்திரம் உண்மை. ஆனால் அவர்கள் இரு சோதனைக் குழுக்களை ஏமாற்றிவிட்டு சென்றார்களா என்பது குறித்து உறுதியாகத் தெரியவில்லை. ஆயினும் அதற்கு முன்னர் கொக்குவில் பகுதியில் பயணித்தவர்களின் கூற்றுப்படி இரண்டு மூன்று இடங்களில் பொலிஸ் குழுக்கள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதை உறுதிப்படுத்த முடிந்தது.

### சூட்டுச் சத்தமும் பொலிஸ் வருகையும்

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த 2, 3 நிமிடங்களில் அந்த இடத்துக்கு மழைக்கவசம் அணிந்தபடி பொலிஸார் வந்து சேர்ந்துள்ளார்கள். அவர்கள் வந்து சேரும்போது சூட்டுச் சத்தம் கேட்டு அயலவர்களும் வந்துவிட்டிருந்தார்கள். குளப்பிட்டிச் சந்தியை அண்மித்த ஆச்சி கடை என்று அழைக்கப்படும் மரவள்ளிக் கிழங்குப் பொரியல் விற்கும் கடையை ஒட்டிய சிறு ஒழுங்கைக்குள் மோட்டார் சைக்கிள் சரிந்து கிடந்தது. அதன்கைப்பிடி, பெற்றோல் தாங்கி எங்கும் இரத்தம் வழிந்தோடிக்கொண்டிருந்தது. சுலக்சன் பிணமாகக் கிடக்க, கஜன் குற்றுயிரோடு போராடிக்கொண்டிருந்தான். உடனடியாக கஜனையும், சுலக்சனையும் அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பினார்கள்.

துப்பாக்கிச் சூடு கொக்குவில் சந்தைக்கு முன்புறமாகவுள்ள பகுதியில் இருந்தே நடத்தப்பட்டிருக்கிறது. அதில் இருந்து சுமார் 170 மீற்றர்களுக்கு அப்பால்தான் சுலக்சனும் கஜனும் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டில் இருந்து விலகி ஆச்சி கடையோடு மோதி குச்சொழுங்கைக்குள் விழுந்துள்ளது.

கொக்குவில் சந்திக்கும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட இடத்துக்கும் இடையிலான தூரம் வெறும் 280 மீற்றர்களே. இந்த இடைவெளியில் மூன்று பொலிஸ்குழுக்கள் நின்றதென்பது சாத்தியமற்ற ஒன்று. சம்பவம் நடப்பதற்கு முன்னால் பயணித்தவர்கள் தெரிவித்த தகவல்களின் படி இரண்டு மூன்று பொலிஸ் குழுக்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதும், 100 மீற்றருக்கு ஒன்று என்ற அடிப்படையில் மிக நெருக்கமாக அடுத்தடுத்து அவர்கள் நின்றிருக்கவில்லை என்பதே உண்மை. ஆகவே பொலிஸாரை ஏமாற்றி விட்டு சுலக்சனும் கஜனும் தப்பியோடியிருந்தாலும் கூட அவர்கள் ஒரு சோதனைக் குழுவை மாத்திரமே தாண்டியிருக்க வாய்ப்புக்கள் அதிகம்.

### 10 செக்கன் போதுமா?

அதே நேரம் கொக்குவில் சந்தியில் இருந்து 280 மீற்றர் தூரத்துக்கு அவர்கள் மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் பயணித்திருந்தால் 12.6 செக்கனிலும், 90 கிலோமீற்றர் வேகத்தில் பயணித்தால் 11.2 செக்கனிலும், 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணித்தால் 10 செக்கனிலும் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட இடத்தை அடைந்திருக்க முடியும். ஆகவே வெறும் 10 செக்கனுக்கு உட்பட்ட நேரத்தில் கொக்குவில் சந்தியில் நிலைகொண்டிருந்த பொலிஸ் குழு குளப்பிட்டிச் சந்தியை அண்மித்த பகுதியில் நின்றிருந்த அடுத்த பொலிஸ் குழுவுக்கு தொலைபேசி மூலம் அறிவித்து அவர்களைத் தடுத்து நிறுத்தும்படி சொல்லியிருக்க கால அவகாசம் இருந்திருக்குமா என்பது கேள்விக்குறி.

ஒரு தொலைபேசி மூலமோ அல்லது "வோக்கி டோக்கி" மூலமோ அழைப்பை எடுத்து தகவலைச் சொல்லவே 10 செக்கன் போதாது. அதற்கிடையில் துப்பாக்கியை இயங்கு நிலைக்குக் கொண்டு வந்து குறி தவறாமல் சுடுவதென்பது இத்தகைய குறுகிய கால அவகாசத்தில் சாத்தியமற்றதே. ஆகவே பொலிஸார் சொல்வதைப் போல "மாணவர்கள் இருவரும் இரண்டு நிலைகளில் தப்பித்துச் சென்றதால்தான் மூன்றாவது நிலையில் இருந்த பொலிஸ் குழு துப்பாக்கிச் சூடு நடத்தியதென்பதை" ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. ஒரு திட்டமிட்ட நடவடிக்கை மூலமாகத்தான் இப்படி ஒரு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் முன்பகை எதுவும் இருந்திருக்கவில்லை. எனவே கடந்த சில நாட்களுக்கு முன்னர் பொலிஸாரிடம் இருந்து தப்பித்ததாகச் சொல்லப்படும் வாள்வெட்டுக் குழுவிற்கு விரித்த வலையில் மாணவர்கள் விழுந்திருக்க வேண்டும்.

(15 ஆம் பக்கம் பார்க்க...)

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## பாசாங்குக்காரரை எழுப்ப முடியாது

ஒரு கொடுங்கனவைப் போல சுலக்சன், கஜன் என்ற இரு பல்கலைக்கழக மாணவர்களின் மரணம் முடிந்தேறிவிட்டது. பொலிஸாரின் வெறியாட்டத்தால் பறிபோன அவர்களின் சாவுக்கு நீதி கேட்டு, பல்கலை மாணவர்கள் விரிவுரைப் புறக்கணிப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர். இந்தப் புறக்கணிப்பு போர் காலத்தையே மீளவும் நினைவூட்டுகின்றது. அப்போதும் மாணவர்கள் படையினரால் கொல்லப்படும் போது, மாணவர்கள் நீதி கோரி, விரிவுரைகளைப் புறக்கணித்திருந்தனர். ஆனால் எந்தக் கொலைக்கும் கடைசிவரை நீதி கிடைக்க வேயில்லை.

இந்தமுறையும் அதேகதைதான் தொடரும் என்றே தென்னிலங்கை அரசியல்வானத்தில் தென்படும் அறிகுறிகள் கட்டியம் கூறுகின்றன. சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க, "மேல்வெடி வைத்த போதே மாணவர்கள் மீது தவறுதலாக துப்பாக்கிச் சூடு பட்டுவிட்டது" என்று நாடாளுமன்றத்தில் சொல்லியிருந்தார். அந்தளவுக்கு அவரது உலகியல் ஞானம் இருக்கிறது. சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சருக்கே கூடத் துப்பாக்கி எப்படிச் சுட்டால், எப்படிப்படும் என்று தெரிந்திருக்கவில்லை என்பது வேடிக்கைதான். இந்தக் கூற்றை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மறுத்த போது, "எனக்கு சொல்லப்பட்ட தகவலையே இங்கு சொன்னேன்" எனச் சமாளித்துள்ளார் அமைச்சர். யாரோ சொல்லிக் கொடுத்ததையே எந்தவித ஆராய்வுமின்றி, இலங்கையின் உயர்பீடமான நாடாளுமன்றத்தில் ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒப்பித்திருக்கிறார். அவர்களுக்கு பிரச்சினை மேல்வெடியோ, கீழ் வெடியோ அல்ல. என்ன பொய் சொல்லியேனும் மாணவர் கொலைக்கு நீதி கிடைக்காமல் செய்வதுதான். அந்துடன் படுகொலைகளைச் செய்துவிட்டு மேல்வெடி வைத்த போதே தவறுதலாக உயிரிழந்தார்கள் எனக்கூறுவதும் சிங்கள அரசியல்வாதிகளுக்கு புதிதான ஒன்றல்ல.

2013 ஆம் ஆண்டு குடிநீருக்காகப் போராடிய "வெலிவேரிய" மக்களைச் சுட்டுக் கொன்றுவிட்டும், அப்போதைய மஹிந்த அரசு இப்படி "மேல்வெடிக் கதைதான்" சொன்னது. நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லஷ்மணனைக் கொன்றுவிட்டும், துமிந்த சில்வா தரப்பினரும் இதே மேல்வெடி கதையைத்தான் அவிழ்த்துவிட்டார்கள். இப்போது அமைச்சர் சாகல ரட்ணாயக்கவும் தன் பங்குக்கு மேல்வெடிக் கதையை உரைத்திருக்கிறார்.

அமைச்சர் அப்படி என்றால் வடக்கின் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தன் பங்குக்கு இன்னொரு விளையாட்டுக் காட்டியிருக்கிறார். மாணவர்களின் சாவுக்கு நீதி கோரி அவருக்கு அனுப்பட்ட மகஜருக்கான பதிலை தனிச் சிங்களத்தில் அனுப்பி தன் இனவாதத்தைக் காட்டியிருக்கிறார். தமிழ்மொழி தெரிந்த ஆளுநர் என்று வர்ணிக்கப்பட்ட ரெஜினோல்ட் கூரே. சில மாதங்களுக்கு முன்னர் சிங்கள-தமிழ் மாணவர்களுக்கிடையே முறுகல் ஏற்பட்ட போது, காயப்பட்ட சிங்கள மாணவர்களை ஓடோடிச் சென்று, கொழும்பு வைத்தியசாலையில் பார்வையிட்ட வடக்கு ஆளுநர், இப்போது தமிழ் மாணவர் கொலையுண்ட போது, ஏன் என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. அது போதாதென்று தனக்கு அனுப்பட்ட மகஜருக்கு தனிச் சிங்களத்தில் பதில் அனுப்பி மாணவர்களைச் சீண்டியிருக்கிறார். ஆனால் அந்தப் பதில் புரியவில்லை என மாணவர்கள் திருப்பி அனுப்பி பதிலடி கொடுத்திருக்கிறார்கள்.

இவ்வாறு பேரின அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் எப்பாடுபட்டாவது குற்றமிழைத்த பொலிஸாரை காப்பாற்றுவதில் கண்ணாகவே இருக்கிறார்கள். இந்த நிலையில் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணித்துப் போராடுவதால் எந்த மாற்றத்தையும் கொண்டு வர முடியாது. தூங்குபவனைத்தான் தட்டியெழுப்பலாமே தவிர, தூங்குபவன் போல பாசாங்கு பண்ணுபவனை எழுப்பவே முடியாது. எனவே தமது கல்விச் செயற்பாட்டைப் புறக்கணிக்கும் முடிவால், மாணவர்களுக்குத் தான் பாதிப்பு. அது ஒரு போதும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பப் போவதில்லை. எனவே தமது முடிவை மாணவர்கள் மறுபரிசீலனை செய்து, போராட்ட வடிவத்தை மாற்ற வேண்டும். அதற்காக வன்முறையைக் கையில் எடுக்காமல், தமது கல்விக்கும் பாதிப்பு ஏற்படாத வேறுவகை வடிவங்களில், மாணவர்கள் நீதிக்காகப் போராடலாம். நீதி கிடைக்காவிட்டாலும், நீதி கேட்டுப் போராடினார்கள் என்று வரலாறாவது மிஞ்சட்டும்.

●●●

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

யபர்னா புஷ்பராசா
(ஊடகக் கற்கைகள் மாணவி,
யாழ்.பல்கலைக்கழகம்)



## விடியுமா வாழ்வு?

நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையுமாக பெண்கள் அனைவரும் மாற வேண்டும் எனக் கூறி அதனை செய்தும் காட்டியவர் புரட்சிக் கவிஞர் பாரதியார். ஆணுக்கு பெண் சளைத்தவ ளில்லை என்ற தற்போதைய நிலையில் பெண்கள் சாதனைப் பயணத்தைத் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றனர். பெண் சமத்துவம் பற்றியும் பெண் உரிமை பற்றியும், பேசிக் கொண்டிருக்கும் அதே வேளை கணவனால் கைவிடப்பட்டவர் களாகவும் கணவனை இழந்தவர்களாகவும் இருக்கின்ற பெண்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகவே இருக்கின்றது. நமது சமூகத்தின் கட்டமைப்பு ஆண்களை நம்பித்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின் பின் பெண் தலைமைத்துவங்க ளிலான குடும்பங்கள் பெருகிவிட்டன. அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் எண்ணிலடங்காதவை.

"நான் தற்போதுவரை தனியாகத்தான் குடும்பத்தைப் பராமரித்த வருகிறேன். எனது கணவர் என்னை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். எனது வாழ்க்கை கடும் சிரமத்தின் மத்தியில் தான் சென்று கொண்டு இருக்கின்றது. நான் முன்பள்ளி ஆசிரியையாகப் பணிபுரிகின்றேன். இதில் பெரிதாக வரும்படி எதுவும் கிடைக்கவில்லை என்பதால் மாலை நேரங்களிலும் சிறுவர்களுக்கு ரியூசன் வகுப்புக்கள் சொல்லிக் கொடுக்கின்றேன். உப்புத் தண்ணீர்க் கிணறும், ஓலையால் வேய்ந்த வீடும் தான் எனது அடையாளம்" என்று நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் ராதிகா (வயது 46) என்பவர் வேதனையோடு கூறுகின்றார்.

நாவாந்துறைக் கிராமம் யாழ்ப்பாண நகரை அண்மித்த பகுதியாக காணப்பட்டாலும் வாழ்வாதாரத்திலும் சரி, வருமானத்திலும் சரி மிகவும் பின் தங்கிய ஒன்றாகவே காணப்படுகிறது. இங்கு வாழும் மக்களின் பிரதான வாழ்வாதாரம் மீன்பிடித் தொழிலாகும்.

இந்தக் கிராமத்தில் மட்டும் கணவனை இழந்த குடும்பங்கள் 1, 175 உம், காணாமல் போன கணவன்மார்கள் உள்ள குடும்பங்கள் 652 உம், கணவனால் கைவிடப்பட்டவர்களாக 567 குடும்பங்களும் இங்கு உள்ளன. இவ்வாறு பெண்கள் தலை மைத்துவம் வகிக்கும் குடும்பங்கள் பல பிரச்சினைகளுக்கும் சவால்க ளுக்கும் முகங்கொடுத்தும் வருகின்றன.

"என்ர மகளும், அவாவின்ர இரண்டு பிள்ளைகளும் தான் இங்க இருக்கிறம். என்ர மனுசனும் இருக்கிறார். ஆனால் அவருக்கு வயசு போயிட்டு. உடம்பு ஏலாது. அதனால் என்ர மகள் தான் கூலி வேலைக்கு போய் குடும்பத்த காப்பாத்துது. அவாவின்ர மனுசன் குடும்பச் சண்டையில பிரிஞ்சு வேறெங்கோ போயிட்டார். இப்ப மகளுக்குச் சரியான காய்ச்சல். அதனால இப்ப என்ர மனுசன் தான் கடல் தொழிலுக்கு போயிற்றிருக்கிறார்.

நாங்கள் 40 வருசமா இந்த இடத்தில தான் இருக்கிறம். காணி எங்கட தான். ஆனா உறுதி இல்ல அதால வீடு கட்ட ஏலாதாம். 3,140 ரூபா மட்டும் சமுர்த்தி நிவாரணமா கிடைக்கும். வேறொண்டும் இல்ல" என்று அங்கு வாழும் கமலாதேவி என்பவர் கூறுகிறார்.

அதே இடத்தைச் சேர்ந்த பவிதா என்ற பெண் தன் நிலையை இப்படிச் சொன்னார்.

"என்ர கணவருக்கு இறுதிக்கட்டப் போரின் போது இரண்டு காலும் போயிற்று. அதனால அவருக்கு எந்தவொரு வேலையும் செய்ய ஏலாது. நான் தான் தையல் கடை வைச்சு பிழைப்பை நடத்திறன். எனக்கு ஐஞ்சு பிள்ளையள் இருக்கினம். அவையள் படிக்கினம். அந்த தையல் கடை வருமானம் எங்களுக்கு போதாது. அதனால வேறொரு வீடு வாடகைக்கும் பார்க்க ஏலாது. இந்தக்கடைக்கு வாடகை 500 ரூபா தான். அதுவும் என்னால குடுக் கேலாத போது எப்படி 2000 ரூபா, 3000 ரூபா எண்டு குடுத்து ஒரு வாடகை வீடு பார்க்கிறது? சரியான கஷ்டம். அதோட வேற இடத்தில இந்த தொழில் செய்யவும் முடியாது. இது பழகின இடம். இங்கயும் இருக்க இடமும் பத்தாது. மலசல கூட வசதியும் பத்தாது. இக்கட்டான நிலையில் தான் வாழ்க்கை போய்க் கொண்டு இருக்கு" என்கிறார் அவர்.

ஜெகதீஸ்வரி (வயது- 52) என்பவர் தனது குடும்ப நிலைபற்றி,

"2009 இறுதிக்கட்டப் போரில் கணவனை இழந்து வருமானத்திற்கு எந்த வழியும் இல்லை. நான் பலசரக்குக்கடை ஒன்று போட்டு அதன் வருமானத்திலேயே வாழ்க்கை நடத்தி வருகிறேன்" என்று கூறுகிறார்.

இங்கு வாழும் பெரும்பான்மையான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியையே முதன்மையாக எதிர்கொள்கின்றனர். அப்படி இருந்தும், எதிர்நீச்சல் போட்டு வாழ்வில் உயரவே இவர்கள் தினமும் போராடுகின்றனர். எங்களது சமூகம் ஆண்களை மையப்படுத்தியே உருவாக்கப்பட்டுள்ளதனால், பெண்கள் இன்னமும் திக்கற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் கிராமிய மட்டத்தில் இவர்களைப் பலப்படுத்துவதற்காக விழிப்புணர்வுத் திட்டங்களும் அபிவிருத்தி செயற்திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.

"இவ்வாறான பெண் தலைமைத்துவக் குடும்ப அங்கத்தவர்களுக்கு பத்து மாதக் கடன் திட்டம் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் சிறு கைத்தொழில், கோழி வளர்ப்பு, பல் பொருள் வாணிபம் என்று தங்கள் வாழ்வாதாரத்தை அவர்கள் திட்டமிட்டுக் கொள்ளலாம்" என்கிறார் ஒரு அரச அதிகாரி.

ஆண் துணையின்றியும் தங்கள் குடும்பத்தை கரை சேர்க்க வேண்டுமெனப் போராடும் இந்தப் பெண்களின் வாழ்வு எப்போது விடியும்?

# உயிரை மேயும் பொலிஸ் வேலிகள்

வர்சி

ஒரு நாட்டில் சட்டத்தை நிலை நாட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கும் நிறுவனங்கள் நீதித்துறையும்,பொலிஸ் திணைக்களமுமே. ஆனால் அண்மைக் காலத்தில் இலங்கையின் வடமாகாணத் தில் சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய பொலிஸ் திணைக்களம் சட்டத்தை தனது கையில் எடுத்துக் கொண்டு தன்னிச்சை யாக நடந்து கொள்வதை அண்மைக்கால சம்பவங்கள் உணர்த்துகின்றன. அதில் ஒரு வெளிப்பாடுதான் யாழ் பல்கலைக்கழக மாணவர் இருவரது உயிர் பறிப்பு.

அண்மைக்காலமாக பொலிஸாரின் அத்துமீறிய சம்பவங்கள், வடக்கில், குறிப் பாக யாழ்ப்பாணத்தில் அரங்கேறி வருவது கண்கூடு. கடந்த 2011 ஆம் ஆண்டு, சுன்னாகம் பொலிஸாரால் திருட்டு குற்றச் சாட்டு எனத் தெரிவித்து, நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பொலிஸாரினால் மிகவும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டு, இரணைமடுக் குளத்தில் அவரது சடலம் வீசப்பட் டது. அவர் தப்பியோடிவிட்டாரெனத் தெரிவித்து, இரணைமடுக் குளத்தில் தற்கொலை செய்து கொண்டாரெனக் கூறி அந்தச்சடலம் பின்னர்பொலிஸாராலேயே மீட்கப்பட்டிருந்தது. இவ்வளவு நாளும் இருளில் இருந்த இந்தக் கொலை விவ காரம், கொலையுண்டவருடன் பிடிபட்ட மூன்று இளைஞர்களும் நீதிமன்றில் வெளிப்படுத்திய பிறகே வெளிச்சத்திற்கு வந்தது. இதனையடுத்து சுன்னாகத்திற்குப் பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரி உட்பட 9 பொலிஸாரை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும் அவர்கள் தலைமறைவான நிலையில் கொழும்பில் வைத்துக் கைது செய்யப் பட்டு, தற்போது நீதிமன்றில் விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று அண்மையில் கிளிநொச் சியில் தம்மை எதிர்த்து பேசிய பொது மகன் ஒருவரை பிரதான வீதியில் வைத்து மிகவும் மோசமாக இரும்பு சங்கிலியால் இரண்டு பொலிஸார் தாக்கியுள்ளனர். இதனால் அவர் தலையில் பலத்த காயங்க ளுடன் கிளிநொச்சி வைத்தியசாலையிலும், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், திருநகர் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் 6 நாட்களாக அவரைப்பற்றிய எந்தத் தகவலும் தெரியவில்லை. இந்த நிலையில் அவரின் மனைவி யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்த முறைப்பாட்டை அடுத்து, அவர்கள் மேற் கொண்ட துரித நடவடிக்கையால் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். இல்லாவிட்டால் அவரது சடலமும் தற்கொலை செய்து கொண்டாரென தெரிவித்து ஏதேனும் குளத்தில் மீட்கப்பட்டிருக்கும்.

மற்றொரு சம்பவமும் யாழ்ப்பாணத்தி லேயே நடந்தது. ஒரு கடைக்கு சில பொலிஸ்காரர்கள் சென்றனர். கையில் உள்ள காசைக் கொடுத்து 3 சிகரெட் தருமாறு கோரினர். அவர்கள் கொடுத்த காசு ஒரு சிகரெட்டின் பெறுமதிக்குக் கூட வராது. அதனால் சிகரெட் தரமுடியாது என கடைக்காரர் மறுக்கவே, அவர் மீது மோசமாக பொலிஸாரால் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த விவகாரமும் நீதி மன்றத்திற்கு சென்று இறுதியாக 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் பொலிஸாரால் செலுத்தப்பட்டது.

இன்னொரு வெட்கக்கேடான சம்ப வமும் மிக அண்மையில் நடந்தது. யாழ்ப்பாண பொலிஸ் பொறுப்பதிகாரி யாக இருந்தவரும், அவருக்கு உதவியாக இருந்தவரும் கதிர்காமம் சென்ற வேளை மதுபோதையில் பெண்களுடன் உல்லாசமாக, பொலிஸ்விடுதியில்இருந் துள்ளார்கள். கையும் மெய்யுமாக பிடி பட்ட குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரி மட்டக்களப்புக்கும், மற்றையவர் முல்லைத் தீவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்ட தோடு, விடயம் மூடி மறைக்கப்பட்டது.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைப்பது போல, கடந்த வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் அநியாயமாக பொலிஸாரால் கொலை செய்யப்பட்டதும், அதனை மூடி மறைக்க பொலிஸார் மேற்கொண்ட பகீரத முயற்சியும், கொலையை விபத்தாக மாற்ற எடுத்த தில்லாலங் கடி வேலைகளும் பொலிஸின் நீதி நிலை நாட்டல் என்னும் பண்பை சந்தி சிரிக்க வைத்துவிட்டன .அதன்பின்னர் வழக்கை வாபஸ் பெறுமாறும் குடும் பத்திலுள்ளவர்களுக்கு வேலை வாங்கித் தருகிறோம் எனவும் ஆசை வார்த்தைகள் கூட மகனை இழந்த துயரத்தில் இருக் கும் பெற்றோருக்கு கூறப்பட்டுள்ளது.


எப்படியிருக்கிறது இவர்களின் செயற்பாடு. அதிகாரிமுதல் சாதாரண உத்தியோகத்தர் வரை 'சப்போட்' செய்தால் போதும். இதனை அவர்க ளுக்கு செய்தால் எல்லாம் வெற்றிகரமாக நிறை வேறும். அரசின் சம்பளத்துடன் இவர்களுக்கு கிம்பளமும் வேறு.

ஒருவர் குற்றவாளியா? சுற்றவாளியா என்பதனை நீதிமன்றங்களும் பலமுறை விசாரித்தே தமது தீர்ப்பை வழங்குகின் றன. அப்படியிருக்கையில் உங்களுக்கு யாரையா மரணதண்டனை நிறைவேற்ற அதிகாரம் தந்தது?

யாழ்ப்பாணத்தில் பெருந்தொகை கஞ்சாவை பிடிக்கிறீர்கள். ஆனால் அதனைக் கடத்தியவர்களை பெரும்பா லும் பிடித்ததில்லை. கேட்டால் சந்தேக நபர்கள் தப்பிவிட்டார்கள் என்கிறீர்கள். அப்படியென்றால் இதில் உள்ள மர்மம் தான் என்ன? ஒருமுறை, இரண்டுமுறை அல்ல பலமுறை இதைத்தானே சொல் கிறீர்கள்.

இறுதியாக யாழ்ப்பாணத்தில் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வரும் அதிக முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிரானதாகவே உள்ளதாக சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

சட்டம் போட்டு தடுக்க வேண்டிய கூட்டமே குற்றங்களைச் செய்தால் அப் பாவி மக்கள் எங்கே போவது நீதிக்காக?








உமா சந்தோஷ்

11

## அந்தக் காலத்துச் சேட்டைகள்

# 'மைனர் மயிலன்'

"அங்கிளுக்கு எப்பிடி இருக்கு?" ஸ்ரேல்லா அரியகுட்டியற்றை வாட்டுக்குப் பொறுப்பான நேர்ஸைப் பார்த்துக் கேட்டாள். "சுகர் கொன்றோலா இருக்கு. பிரசர் தான் கொஞ்சம் கூட, மற்றும்படி இரண்டொரு நாளிலை வீட்டுக்குப் போகலா மெண்டு, டொக்டர் சொன்னவர்" எண்டு மறுமொழி சொன்னாள் அந்த நேர்ஸ். கொஞ்ச நேரம் இருந்திட்டு மற்ற நாள் டியூட்டிக்கு வரேக்கை பாக்கிறதாச் சொல் லிப் போட்டு ஸ்ரெல்லா போயிட் டாள். தங்கமணி இனி வரமாட்டாள்.

மைனர் தான் அரியகுட்டியரைப் பாக்கவேணும். "இனி வாட்டிலை இரவுக்கு நிக்கத் தேவையில்லை" எண்டு வாட் நேர்ஸ் சொன்னவ. அண்டு பின்னேரம் கடைசி பஸ்ஸிலை ஊருக்கு வெளிக்கிட்டிட்டான் மைனர். போற வழியிலை ஒரு அரையும், கொத்தும் வாங்கிக் கொண்டு பஸ் ஏறினான்.

பஸ்ஸாலை இறங்கி நேரை அவன்ரை கூட்டாளி லங்கயனிட்டைப் போய், அவனையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போனான். இக்கட்டான நிலைவாற நேரமெல்லாம் லங்கையன் தான் மைனருக்கு மந்திர ஆலோசனை தாறவன். அண்டு இரவு முழுக்க மைனரும், லங்கையனும் நித்திரை கொள்ளேல்லை. அலுமாரி எல்லாம் கிளறி அரியகுட்டியற்றை உறுதியெல்லாத்தையும் வெளியிலை எடுத்தான். உடுப்புக்கு அடியிலை வைச்சிருந்த ஒரு பொட்டலத்துக்கை தாள் காசு இரண்டாயிரத்தையும், பழனி விபூதிச் சரையளையும் வெளியிலை எடுத்தான். தான் கொழும்பிலை இருந்து கொண்டுவந்த காசோடை அதையும் சேர்த்துச் செலவுக்கு வச்சுக் கொண்டான். வாங்கின அரை கொஞ்சங் கொஞ்சமாக உள்ளை போகப்போக மைனர் லங்கையனைக் கட்டிப்பிடிச்சு அழத் தொடங் கீட்டான். லங்கையனுக்கு வெறிகுறைவெண்டதாலை மைனரை சமாதானப்படுத்தப் பெரியபாடுபட்டான் அவன். கொண்டு வந்த கொத்து ரொட்டியை அவிட்டுத் தின்னேக்கை மணி ஒண்டாச்சுது. லங்கையன்ரை புத்திப்படி காலை ஆறு மணிக்கெல்லாம் லோயற்றை வீட்டை போயாச்சு. வீடு, காணி எல்லாத் தின்ரை உறுதியளையும் அவரிட்டைக்குடுத்து தன்ரைபேரிலை மாத்தி எழுதிற காரியத்தை லோயறிட்டைச் சொன்னான் மைனர். அங்கையிருந்து தங்கமணியிட்டைப் போய் 'பாங்க்' புத்தகத்தையும் வாங்கி தன்ரை பேரையும் ஜொயின்ற் ஆக்கிற கைங்கரியத்துக்குரிய வேலையையும் லங்கயன் சொன்னபடி செய்து போட்டான். லங்கயன்ரை பொக்கற்றுக்கை இரு நூறைத்தள்ளி அவனை மெல்லக் கழட்டி விட்டிட்டு ஆஸ்பத்திரிக்குப் போனான் மைனர்.

வாசலிலை இருந்த தோடம்பழக் காரனிட்டை நாலு தோடம்பழத்தை வாங்கிக் கொண்டு, வாட்டுக்குப் போனான். அரியகுட்டியர் நல்ல நித்திரை. மைனருக்கு இராத்திரி அடிச்ச தண்ணிக்குக் கொத்துப்பத்தேல்லை. நல்லா பசிச்சுது. நேரை கன்ரீனுக்குப் போய் ஒரு முட்டை ரொட்டியும் பிளேன்ரீயும் அடிச்சான். கொஞ்சம் ஆசுவாசமாயிருந்திது. வாற வழியிலை ஸ்ரெல்லாவை எட்டிப் பார்த்தான். அவள் இருக்கேல்லை. மேசை வெறுமனை கிடந்திது. நேர வாட்டுக்குப் போனான்.

வாட்டிலை அப்பதான் அரியகுட்டியர் முழிச்சுப்பார்த்தார். தோடம்பழத்தை உரிச்சு அரியகுட்டியற்றை வாய்க்குக் கிட்டக் கொண்டுபோனான். அரியகுட்டி யற்றை கண்கலங்கிக் கிடந்தது. "அப்பு கவலைப்படாதையெணை. நானிருக் கிறன். ஒண்டுக்கும் யோசிக்கப்படாது. என்ன?" அவரும் தலையாட்டினார்.

மெல்ல உறுதி எழுதிற கதையையும் அரியகுட்டியருக்கு நோகாமல் சொன்னான் மைனர். "துண்டு வெட்டிக் கொண்டு போய்ப்பாப்பம்" அரியகுட்டியர் குடுத்தகிறீன் சிக்னலாலை மைனர் கரைஞ்சு போனான். அண்டைக்கு முழுக்க ஒரு இடமும் போகேல்லை அரியகுட்டிய ரோடையே இருந்தான்.

பின்னேரம் ஏழுமணியிருக்கும், மைனர் வீட்டைபோறதுக்காக ஆஸ்பத்திரி பெரிய கேற்றடிக்கு வந்தநேரம் ஸ்ரெல்லா உள்ளவாறது தெரிஞ்சிது.

"என்ன நைற் டியூட்டியே? இப்ப வாறியள்" மைனர் கேட்டான். "இல்லை. இண்டைக்கு காப் டே. இப்பதான் முடிஞ்சுது. ஓடிப்போனன்.. கடைசி பஸ் இண்டைக் குக் கான்சலாம். பழுதெண்டு சொன்னவை" காய்ஞ்ச முகத்தோடை ஸ்ரெல்லா மறுமொழி சொன்னாள்.

மைனர் கொஞ்ச நேரம் யோசிச்சான். "ஸ்ரெல்லா! நீர் குறையா விளங்காட்டில் ஒண்டு சொல்லுறன்" என்ன எண்டதைப் போல ஸ்ரெல்லா மைனரை பாக்க, "உங்களுக்கு ஆச்சேபனை இல்லாட்டி, என்னோடை வரலாம் எங்கடை வீட்டை நிண்டிட்டு காலமை நான் வரேக்கை நீரும் வரலாம்" ஸ்ரெல்லா பாத்த பார்வையிலை மைனருக்கு நடுங்கத் தொடங்கீட்டுது. "நான் ஏதேன்.. தப்பா" மைனர் முடிக்கிறதுக்கு ள்ளை ஸ்ரெல்லா குறுக்கிட்டாள்.

"ஒரு தப்புமில்லை" "அப்ப ஏன்? என்னோடை வரப் பயப்பிடுறளோ?" மைனர் கேட்டான். "நானாவது பயப்பிடுறுவதாவது" அது ஸ்ரெல்லா சொன்னது. "அப்ப என்ன யோசினை" மைனர் கேட்டான். "நாளைக்கு மதியந்தான் டியூட்டி, அவ்வளவு நேரம் அங்கை நிக்கிறதைப் பற்றித்தான் யோசிக்கிறன். உங்களை ஏன் தொல்லைப் படுத்துவானெண்டு" ஸ்ரெல்லா சொல்லச்சொல்ல உயர உயரப் போய்க் கொண்டி ருந்தான் மைனர்.

நாலைஞ்சு வருஷத்திக்கு முதல் தங்கமணி வீட்டு விசேஷமொண்டுக்கு ஸ்ரெல்லா வந்திருந்தவள். திடீரெண்டு அவளைக் கண்டு மைனர் விறைச்சுப் போனான்.

(சேட்டைகள் தொடரும்...)




**ஆதிபார்த்திபன்**

நாங்க இடம்பெயர்ந்து வன்னிக்குப் போன காலமெண்டு நினைக்கிறன். நான் அப்ப சின்னப் பெடியன், எங்கட அண்ணாவுக்கு இருபது வயசிருக்கும், பயணக்களைப்பில நானும் அப்பாவும், அம்மாவும், தங்கச்சியும், பெரியம்மா வீட்டு முன் விறாந்தையில இருந்தம். அப்ப தான் எனக்கு நினைவு தெரிஞ்சு அண்ணாவ பாக்கிற முதல்தரம். அவன் ஒரு சதுரத்துண்டு கேக் வாங்கி எனக்கும், தங்கச்சிக்கும் வெட்டித்தந்தான். நாங்க அண்டைக்கு அத தேத் தண்ணியோட சாப்பிட்டம். கொஞ்சம் பசி தீர்ந்தமாதிரி இருந்திச்சு. அண்ணா கொஞ்சம் கறுப்பன், சிரிச்சுக்களைச்ச முகம். எப்பவும் வியர்வைய ஒட்டி வச்சது போல. சூரியகாந்தி பயிரிடுறதெண்டா அவனுக்கு ரொம்பப்பிரியம். போட்டோக் கிராபரை கூட்டியந்து அந்த சூரியகாந்திக்கு பக்கத்தில நிண்டு விதம் விதமான போட்டோக்கள எடுத்து, போட்டோக் களுக்கு பக்கத்தில காதல் கவிதை எழுதி ஒட்டுறது அவனுக்கு பிடிச்ச விசயம்.

“இந்தச் சூரியகாந்திகள் அழகானவை
ஆனால் மணமற்றவை
அதே போல் நீயும் அழகான நீ
ஆனால் இதயமற்ற நீ”

அவனின்ட சூரியகாந்தி பிளஸ் காதல் கவிதையில் என்ர மனசில இப்பவும் நிக்கிற ஒண்டு. படிப்பில பெருசா ஆர்வமில்ல. கிட்டத்தட்ட ஒரு கலைஞனா உருவாக வேண்டியவன். ஒரு நாள் அண்ணா வந்து சொன்னான் “சண்டையில செத்த நிறய ஆமிக்காரரிண்ட பொடிய கொண்டந்து போட்டிருக்காம். நான் தம்பிய கூட்டிகொண்டு போய் பாத்திட்டு வரட்டே” எண்டான்.

அம்மா, “வேணாம் அவன் பயந்திடு வான் நீ மட்டும் போய் பாத்திட்டு வா” எண்டிட்டா.

எனக்கோ ஆர்வத்த அடக்க முடியேல. எங்கட சின்ன வயசில ‘பொடி’ பாக்கிறதெண்டா ஏதோ கண்காட்சி பாக்கிறமாதிரி சந்தோசம்.

ஒரு ஆமிக்காரன் சாகிறதயும் நாங்க விரும்பினம் கொண்டாடினம்.

பழிவாங்குதல் என்பது பரிசுத்த உணர்வு என்டுதான் எங்கட பிஞ்சு மனங்களில் சிந்திக்கப்பழகினம்

நான் சரியா அடம்பிடிச்சதால, அம்மா, என்னை அண்ணாவோட போகவிட்டிட்டா, ஒரு பெரியவெளி. நிறைய உடல்கள், தலைக்குள்ள இருந்து நுரை வெளியால வந்தது போல சிலது, வயிற்றுக்க இருந்து சளிபோன்ற திரவமும் நரம்புகளும் தொங்கிய உடம்புகள். முகம் சிதைந்து பற்கள் மூக்கில் குத்தி வெளித்தள்ளி... இதைவிட ஊன் மணம் ஏதோ செய்தது, கூடவே மூத்திர மணமும், ஒரு வித வாந்தி உணர்வு.

“அண்ணா போவம் எனக்கு ஏதோ செய்யுது”

என்னை புரிஞ்சுகொண்டவனா, “சரி போவம் வா”

அண்டைக்கு இரவு புல்லா அந்த வேப்பமரத்த சுத்தியிருந்து எல்லாரும் இதப்பற்றித்தான் கதைச்சினம்.

“எனக்கு இரவு புல்லா பேய்க்கனவு”

கொஞ்சநாள் கழிச்சு, அண்ணா, வீட்டில ஏதோ சாப்பாட்டுப் பிரச்சனைக்கு சண்ட பிடிச்சிட்டு வீட்டை விட்டுப் போயிட்டானாம். எங்க போயிட்டானென்டு தேடோணுமெண்ட அவசியமில்லை, வீட்டில பிரச்சனையோ, இல்லாட்டி எங்கட சந்தில தினமும் இரவு திரை வச்சு போடுற “ஓயாத அலைகள்” படத்த பாக்கிற கூட்டத்தில இருந்து அடுத்த நாள் காலம ஒராளாவது காணாமல் போறது வழமை தான். பெரியப்பாவும் பெரியம்மாவும் அடிச்சுப்பிடிச்சு எங்கட ஏரியாக்கு பொறுப்பான காம்பில போய்க் கேட்டினம், அண்ணாவ ஏதோ பெரிய காம்புக்கு அனுப்பியாச்சாம். ஒரு கிழமையா அவ அலையாத இடமில்ல. ஆனா அண்ணா காம்ப் காம்ப், ஆக மாறியே காணாமல் போயிட்டான். எங்கட பக்கத்துவீட்டில முன்வீட்டில எண்டு பாத்தா ஒரு குடும்பத்தில அஞ்சு, நாலு பிள்ளைகள் எண்டு அனுப்பிட்டு பெருமயா சொல்லிட்டிருக்கிற குடும்பங்களும் இருக்கத்தான் செய்தது. ஆனா எங்கட பெரியம்மாவால அவ்வளவா பெருமைப் பட முடியேல்ல, காரணம் பக்கத்து வீட்டுப் பவளமக்கா, அவாட மூத்தமகன் இயக்கத் துல ஏதோ பெரிய பதவியாம் எழிலன் எண்டு கேட்டா சொல்லுவினமாம். அவங்கட வீட்டில நாலு பிள்ளையள். அண்ணனுக்கு பிறகு ஒரு தம்பி அவருக்கு பிறகு இரண்டு தங்கச்சி, அப்ப இந்திய ராணுவம் இருந்த காலமாம். யாரோ தலையாட்டி காட்டிக்குடுத்ததால எழிலன்ர தம்பியெண்டு, அந்த பதினாறு வயதுப் பெடியன, பவளமக்காட இரண்டாவது மகன கிளிநொச்சி சந்தையில புடிச்சிட்டாங்களாம்.

“உன்ர அண்ணை தானே அவன்”

‘ஓம்’

“அவனுக்கு ஒண்டும் தெரியாது அவனை விட்டிடுங்கோ” எண்டு அழுதிருக்கிறா பவளமக்கா...

மாக்கெட்டில நிறையபேர கைய பின்னால கட்டிட்டு முட்டுக்காலில நிக்க வச்சிருக்கிறாங்கள். எல்லாரும் அவன்ர தம்பி இவன்ர மச்சான் அவன்ர கூட்டாளி யெண்டு அடையாளப்படுத்தப்பட்டவர்கள்.

“போய் இரு அவங்களோட”

“அம்மா எனக்கு பயமா இருக்கம்மா அம்மா கையவிட்டிடாத அம்மா நடுங்குது”

“அவனுக்கு ஒன்டும் தெரியாது...”

“அம்மா வாறவருசம் நான் வளந்திடுவன் தானே. எனக்கொரு சாலி மோட்டர்சைக்கிள் வாங்கித்தா பிறகு நான் உன்ன மோட்டர்சைக்கிள்ள வச்சு சந்தைக்குக் கூட்டிட்டு வருவன்” எண்டு அடிக்கடி சொல்லுவானாம்.

அவனையும் அந்தக் கூட்டத்தில போய் இருக்கச் சொன்னாங்கள்

அந்த தலையாட்டி பக்கத்தில நிண்டு “சும்மா விசாரணை தான் பவளமக்கா விட்டிடுவாங்க. பொடியன பயப்படாம போகச்சொல்லுங்கோ”

தலையாட்டி ரொம்பத்தெரிஞ்சவன் பக்கத்துதெரு தான்.

பவளமக்காவுக்கு கண்ணீர தவிர சொல்ல ஏதும் இருக்கேல.

“தம்பி பயப்படாதயடா...”

பெடியன் பவளமக்காவ திரும்பி திரும்பி பாத்துக்கொண்டே மெதுவா நடந்துபோய் அந்தக் கூட்டத்தில இருந்தானாம்.

“விசாரிச்சிட்டு விட்டிடுவாங்கள்” பவளமக்கா தனக்குள்ளயே பலமுறை சொல்லிப்பாத்திருக்கிறா. அவன் கேட்ட சாலி மோட்டார்சைக்கிள இனிமேலும் தள்ளிப்போடாம வாங்கிக்குடுக்கோணும் இப்படிக்கூட ஒரு வித்தியாசமான உணர்வு அந்த நேரத்தில அந்த தாய்க்கு ஏற்பட்டது அதிசயம் தான்

“டப் டப் டப் டப்” எண்டு சத்தம், பவளமக்கா கண்ண மூடிட்டா, எல்லா விசாரணையும் முடிஞ்சுபோச்சு...”

மகன் சத்தத்தில பயந்து மயங்கிப் போட்டான் எண்டுதான் பவளமக்கா நம்பிக்கொண்டிருக்கிறா இண்டைக்கு வரைக்கும். பைத்தியக்காரி. ஓம் எல்லாரும் அப்பிடித்தான் சொல்லினம். பைத்தியம் பிடிச்சிட்டிதாம் அவாவுக்கு. பெரியம்மா வுக்கு அதேபயமாக் கூட இருக்கலாம். ஆனா காலம் வேகமா போயிட்டு. இப்ப எல்லாம் பெரியம்மா ஒரு முழுமையான போராளியின்ர தாய் என்ற வீரப்பெண்ணா வலம்வரத் தொடங்கிட்டா. அவாவிட்ட கூட நிறைய சுதந்திர உணர்வு வாசகங்கள் அடிக்கடி உணர்ச்சிகரமா வெளிப்படும்.

ஒருநாள் அண்ணா வீட்டுக்கு வந்தான்.

அவனோட ரெண்டு பேர். கழுத்தில சின்ன சென்ட் போத்தல் மாதி ஒரு குப்பி, கம்பீரமான சீருடை, தாடி கொஞ்சம் அரும்பியிருந்தது. நான் அண்ணாவோட கொஞ்சம் நெருக்கம் காட்டத்தயங்கி நிண்டன். அண்ணா என்ன கூப்பிட்டு கையில ஒரு விளையாட்டு துவக்க தந்தான். இப்ப அண்ணாவோட ஒரு நெருக்கம் ஏற்பட்டதை போல நினைச்சன்.

அண்டைக்கு வீட்டில விருந்துதான். கோழிக்கறி சமைச்சா பெரியம்மா. நான் அண்ணாக்கு பக்கத்தில இருந்து சாப்பிட்டன். அண்டைக்கு பின்னேரம் மட்டும் பெரிய விழா மாதிரி எல்லாரும் கொண்டாடினம்.

ஆனா இரவு புல்லா பெரியம்மா அழுது கொண்டேயிருந்தா.

அதுக்கு பிறகு ஒரு கிழமை இருக்கும். வீட்டுக்கு நிறயபேர் வந்திச்சினம். வீட்டு வாசலில அண்ணாண்ட பேரில பெரிய ‘பானர்’ எல்லாம் கட்டிச்சினம். கறுப்புடுப்பு போட்டவ, வரியுடுப்பு போட்டவ எண்டு நிறயபேர். பிறகு ஒரு கண்ணாடிப் பெட்டியில எதயோ கொண்டு வந்து வச்சினம். வெள்ளத் துணியால மூடியிருந்த உடம்பு மட்டும் தான் தெரிஞ்சுது. அது தான் அண்ணாவாம்.

எல்லாம் கூட்டமா நிண்டு அழுதிச்சி னம். கனபேர் அழவேயில்ல.

பெரியம்மாவும் அழேல. அவா வீரப் பெண் அழமாட்டா.

என்னை கிட்ட விடேல, நானும் கிட்ட போய் பாக்கேல. ஆக்களுக்குள்ளால எட்டியெட்டிப் பார்த்து களைச்சுப்போய் வந்து ஒரு வரியுடுப்பு போட்ட அண்ணா வுக்கு பக்கத்தில வந்து இருந்தன்.

அவர் அண்டைக்கு அண்ணாவோட வந்தவர் தான். அவர் அழுதிருக்கிறார் போல, கையில துவக்கு. என்னைப்பாத்து அந்த துவக்க காட்டினார். “இந்த துவக்கு உன்ர அண்ணா வச்சிருந்த துவக்கு தான்” நான் அத பாத்தன்.அண்ணா போன தடவ வரும்போது எவ்வளவோ மாறியிருந்தான். அவன் நிறய விசயங்கள தெரிஞ்சிருந்தான். நிறைய பொறுப்புள்ளவன் போல நடந்து கொண்டான்.

“ஓம் அண்ணாண்ட துவக்கு”

நான் அத தொட்டுப்பாத்தன்

“அண்ணா செத்துட்டான்”

உங்களுக்கு பக்கத்தில இருந்து சாப்பிடும் போது, உங்கட சாப்பாட்டில முட்டை முடிஞ்சுதெண்டா தன்ர முட்டையில பாதிய எடுத்து உங்கட கோப்பையில நீங்க எதிர்பாராத நேரம் வச்சிட்டு திரும்பி எதுவும் தெரியாதது போலத் திரும்பி இருக்கிற உங்கட அண்ணா செத்துப்போனா நீங்க அழாம இருக்கிறது விசித்திரம் தான்.

எனக்கு நெஞ்சு கவ்விக்கொண்டது போல உணர்வு. அத சொல்லத்தெரியேல

“அண்ணா செத்திட்டான்”

அவன்ர துவக்கின்ட குழாய்களுக்குள் ளாக நான் என்ர ஒரு கண்ணை விட்டு பார்த்தன். எந்தவொரு வெளிச்சமும் தெரியேல எல்லாமே இருட்டா இருந்திச்சு. எல்லாம் இருட்டு...



# போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி

## யாழ்.மக்களுக்கு கிடைத்த கொடை

(யாழ் போதனா வைத்தியசாலைக்கு பணிப்பாளராக வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் பொறுப்பேற்று கடந்த 14.10.2016 ஓராண்டு பூர்த்தியாகி யுள்ளது. இந்த நிலையில் கடந்த ஒரு வருட காலத்தில் புதிய பணிப்பாளரின் சேவையால் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி இக்கட்டுரை பேச முனைகின்றது)

அருட்பிரசாகம் சகாதேவன்
[திருநல்லூர்]

யாழ் போதனா வைத்தியசாலையின் இன்றுள்ள பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் போதனா வைத்தியசாலையினை அனைவருக்கும் முன்மாதிரியாவே நிருவகிக்கின்றார். நோயாளருக்கு ஆற்றும் பணியை கடவுளுக்குச் செய்யும் பணியாகவே கருதுகின்றார்.

தலைநகர் கொழும்பிலிருந்து 410 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள யாழ் போதனா வைத்தியசாலையானது. இலங்கையிலுள்ள சிறந்த வசதிகளைக் கொண்ட வைத்திய சாலைகளில் ஒன்றாகும். இதனை முன்னோர் 'தரும ஆசுப்பத்திரி' என்று சொல்வார்கள்.

இன்று 70 இற்கும் மேற்பட்ட துறைசார் நிபுணத்துவமுடைய விசேட வைத்திய நிபுணர்கள் இங்கு கடமையாற்றுகின்றனர். பல்வேறு துறைகளிலும் நிபுணத்துவ முடைய விசேட வைத்திய நிபுணர்கள் கடமையாற்றுகின்ற வட மாகாணத்தில் உள்ள ஒரேயொரு வைத்தியசாலையும் இதுவேயாகும். போதனா வைத்திய சாலையானது 6 இலட்சத்துக்கும் அதிகமான யாழ்ப்பாண மக்களின் பிரதான மருத்துவத் தேவையை நிறைவேற்றுகின்றது. அத்துடன் வட மாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்தும், கிழக்கு மாகாணத்திலிருந்தும் மேலதிக சிகிச்சைகளைப் பெறுவதற்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்கள் வருகின்றார்கள். குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் இருந்து இதயநோயாளிகள் 'அன்ஜியோகிராம்' பரிசோதனைக்காக இங்கு வருகின்றார்கள்.

போதனா வைத்தியசாலையில் இருந்து கொழும்பு, கண்டி முதலான வைத்திய சாலைகளுக்கு மேலதிக சிகிச்சைகளுக்காகவும், எம்.ஆர்.ஐ. ஸ்கான் போன்ற வைத்திய பரிசோதனைகளுக்காகவும் நோயாளர்கள் அனுப்பப்படுகின்றனர்.

### யாழில் ஏற்படும் மாற்றம் எங்கும் எதிரொலிக்கும்

வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் (14.10.2015) யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிப்பாளராகக் கடமையைப் பொறுப்பேற்றார். மருத்துவ நிருவாகத்துறையில் விசேட நிபுணத்துவ பட்டப்படிப்பை நிறைவு செய்த போது, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகச் செல்வதற்கும், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளராக வருதற்கும் இவருக்கு வாய்ப்பு இருந்தது. இந் நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையையே தேர்ந்தெடுத்திருந்தார். இதற்குப் பிரதான காரணம் "யாழ்ப்பாணத்தில் ஏற்படுகின்ற மாற்றம் - ஏனைய பிராந்திய வைத்தியசாலைகளிலும் ஏற்படும் என்ற காரணத்தினால்" என்கின்றார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 1800 இற்கும் அதிகமானவர்கள் கடமை புரிகின்றனர். 1200 இற்கும் அதிகமானவர்கள் விடுதிகளில் இருந்து சிகிச்சை பெறுகின்றார்கள். நாளும் வெளிநோயாளர் பிரிவுக்கு ஏறத்தாழ 1000 பேரும், கிளினிக் பகுதிக்கு ஏறத்தாழ 2500 பேரும், சிகிச்சைக்காக வருகின்றார்கள். வைத்தியசாலையில் ஒரு நாளைக்கு 8000 இற்கும் அதிகமானவர்கள் ஒன்று கூடுகின்றனர். எனவே இந்த வைத்தியசாலையில் ஏற்படும் மாற்றம் சமூகத்திலும் ஏனைய நிறுவனங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். இங்கு வருபவர்கள் நல்ல விடயங்களை, சமூக விழுமியங்களைக் கற்றுச் செல்ல வேண்டும் என்கின்றார் வைத்தியசாலைப் பணிப்பாளர்.

### தாதியர் ஆளணியை உயர்த்தியவர்

யாழ்.போதனா வைத்தியசாலையானது பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கினாலும், பிரதான குறைபாடாக தாதியர் பற்றாக் குறையே காணப்படுகின்றது.

"இங்கு 2500 தாதியருக்கு தேவையிருந்த போதும் இங்கு 400 வரையான தாதியர்களே பணிபுரிகின்றனர். வைத்தியசேவையை மேம்படுத்த இதுவே பிரதான தடையாக உள்ளது என்றும் 407 ஆக இருந்த தாதிய ஆளணியை கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் 607 ஆக அதிகரிக்க முடிந்தது என்றும் குறிப்பிடும் பணிப்பாளர், இவ் வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப் படாது உள்ளதாகத் தெரிவிக்கின்றார்.

வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் வைத்தியசாலை பணிப்பாளராக் கடமையைப் பொறுப்பேற்றதும் வைத்திய சாலை புறக்கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்திய அதேவேளை வைத்தியசாலை உத்தியோகத்தர்களின் மனங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினார். தவறு செய்பவர்கள் திருந்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். பணிப்பாளரின் நல்நோக்கத்தையும், நோயாளிகளிடத்தில் கொண்ட கரிசனையையும் உணர்ந்த ஊழியர்கள் இவரைப் பின்பற்றுவதையும் பாராட்டுவதையும் காணமுடிகின்றது.

"வைத்தியசாலையானது நோயாளர்களுக்கானது, வைத்தியசாலை அங்கு பணிபுரியும் வைத்தியர்களுக்கானதோ அல்லது ஊழியர்களுக்கானதோ அல்ல. நாம் நோயாளர்களுக்குச் சேவை புரிவதற்காக வந்துள்ளோம், பொதுமக்களது வரிப் பணத்தில் அரசாங்கம் எமக்கு ஊதியம் தருகிறது. பொதுமக்களை கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடாத்த வேண்டியது ஒவ்வொரு அரச ஊழியரதும் கடமை. குறிப்பாக சுகாதார சேவையில் உள்ளோர் இதனை ஒரு புனிதமிக்க தெய்வீகப் பணியாகக் கருதிச் செயற்பட வேண்டும். இதனை அனைவரும் உணரும் நிலையில் வைத்தியசேவை என்பது உன்னத நிலையை அடையும்" என்று குறிப்பிடுகின்றார் பணிப்பாளர்.

### பார்வையாளர் மீதும் கரிசனை

வைத்தியசாலையை இந்த உன்னத நிலையை நோக்கி கொண்டு செல்வதற்காக இரவு பகல் பராது பணிப்பாளர் கடமை புரிவதை அவதானிக்க முடிவதாக ஊழியர்களும் பொதுமக்களும் நன்றியுடன் தெரிவிக்கின்றனர்.

இவர் வைத்தியசாலைப் பணிப்பாளராகக் கடந்த ஆண்டு பதவிக்கு வந்த போது வைத்தியசாலையில் சிறிய விடயங்களில் அதிக கவனம் செலுத்தியிருந்தார். முன்னர் வைத்தியசாலைக்கு வரும் பொதுமக்களைக் கைதிகளைப் போன்று நடத்தியிருந்தனர். நோயாளர்களைப் பார்வையிட வரும் குடும்ப அங்கத்தவர்களும் உறவினர்களும் பார்வையாளர் நேரம் வரும்வரை தெருவிலே வெயிலில் காத்திருப்பதை இப்போதும் பொதுமக்கள் நினைவிற் கொள்கின்றனர். பொதுமக்களை வைத்தியசாலைக்குள் அழைத்து பொதுமக்கள் காத்திருக்கும் இடத்தினை ஏற்படுத்தி பார்வையாளர் நேரம் வரும் வரை அமர்ந்திருப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்.

பொதுமக்களை அறிவூட்டும் பதாகைகளை உரிய இடங்களில் பொருத்த ஏற்பாடு செய்தார். பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு பல இடங்களில் வைத்தியசேவையை மேம்படுத்தும் ஆலோசனைப் பெட்டிகளை அமைத்ததுடன் பொதுமக்கள், நோயாளிகள் தங்களது முறைப்பாடுகளை நேரடியாகத் தன்னிடம் தெரிவிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கியிருந்தார்.

பொதுமக்கள் மட்டுமன்றி வைத்திய சாலை ஊழியர்களும் தங்களது முறைப்பாடுகளை நேரடியாகத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

"அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்ளவும்" என்ற வாசகத்தை பணிகளைப் பொறுப்பேற்ற ஆரம்ப நாள்களிலே அனைத்து விடுதிகளிலும், கிளினிக் பகுதிகளிலும் வைத்திய சாலை உத்தியோகத்தர்களுக்கு நினைவூட்டத்தக்க வகையில் சுவர்களில் தொங்க விட ஏற்பாடு செய்ததை அவதானிக்க முடிந்தது.

பொதுமக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயத்தை ஊடகங்கள் வாயிலாகவும் வைத்தியசாலையில் காட்சிப்படுத்தியும் பொதுமக்களை அறிவூட்டுதல் இன்றியமையாதது என்று கருதிச் செயற்பட்டார். "பொது இடங்களில் நாகரீகமாகவும், பண்பாகவும் ஆசனத்தில் அமர்தல், பொது இடங்களில் துப்புதல் தவிர்க்க, வைத்தியசாலையில் வெற்றிலை பாக்கு போதைப்பொருள் தடை செய்யப் பட்டுள்ளமை, நடைபாதையில், மின் உயர்த்தியில் நோயாளருக்கு முன்னுரிமை கொடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு நினைவூட்டல் சாதாரணமானதாக இருக்கலாம். ஆனால் இவ் விடயமே ஆரோக்கியமான பண்பாடுள்ள சமுதாயத்திற்கு இன்றியமையாதது" என்கின்றார் வைத்திய கலாநிதி சத்திய மூர்த்தி.

(17 ஆம் பக்கம் பார்க்க...)



# வாரச்சக்கரம்

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் இருவரின் படுகொலையினைத் தொடர்ந்து. யாழ் நகரம் மாணத்தின் வாசனை பிடிக்கப்பட்டு, அச்சமும் பீதியும் உறைந்து போயுள்ளது. அதனை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், அவர்களின் படுகொலையினை நினைவு கூரும் முகமாக இந்த வாரச் சக்கரத்தை அவர்களுக்கு நாம் அர்ப்பணித்துள்ளோம்.



கிழக்குப் பல்கலைக்கழகத்தில்



சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில்



செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஹர்த்தாலின் போது



ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற கஜனின் இறுதிச் சடங்கு



திங்கட் கிழமை இடம்பெற்ற சுலக்சனின் இறுதிச் சடங்கு

## வாரப்பலன்

**மேடம்**
மானிட சேவை. இல்லச் சிறப்பு. கடந்ததை எண்ணி வருந்துதல்.

**ரிஷபம்**
பாராட்டு. வெகுமதி. பிரயாணம். தெய்வ சிந்தனை. ஈகை நாட்டம்.

**மிதுனம்**
நடைக் கஷ்டம். காரிய மேன்மை. தலயாத்திரை. தர்ம சிந்தனை. நல்வழி கிட்டும்.

**கடகம்**
பண வரவு. பாராட்டு. பிணி நீக்கம். புதுமை படைப்பு. தனி யாத்திரை.

**சிம்மம்**
வீரமிகுதி. தேடல். கலையார்வம். காரியக் கேடு. மதியுரை. மானிட நேயம்.

**கன்னி**
ஈகைச் சிறப்பு. பிறரை எண்ணிக் கவலை. பாவப் பிரிவு. பணிச் சேர்க்கை. பெருமை.

**துலாம்**
புராதனப் பொருள் சேர்க்கை. வெறுமை உணர்வு. வான் பயன். வணிகம் தடைப்படல்.

**விருச்சிகம்**
மாட்சிமை. மக்கள் புகழ். கல்விச் சிறப்பு. காரிய மேன்மை. உறவுச் செலவு.

**தனுசு**
பணப் பரிமாற்றம். தாகமிகுதி. வலு விழப்பு. வான் பயன். பயிர் பலிதம்.


**மகரம்**
வாகன விருத்தி. மதி கேட்டல். நிலை மாற்றம். தயவு. தானிய விருத்தி.

**கும்பம்**
உண்மை நிலை. கலங்கா நிலை. வாணிப நேயம். பணி முடக்கம். பிரயாணம்.

**மீனம்**
பெருமை. தெய்வ சிந்தனை. கலை வேட்கை. வாய்மை. உறவால் பெருமை.

கச்சேரிக்கு முன்னர் இடம்பெற்ற கவனயீர்ப்பு







# யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்

இயற்கை எழில் கொஞ்சும் பொன்னாடாம், ஈழத்தின் தலையாய் விளங்கும் யாழ்.குடாநாட்டை அணி செய்யும் தீவுக்கூட்டத்தின் திலகமென திகழ்வது 'லைடன்' ஊர்காவற்துறை தீவாகும். இங்குள்ள கிராமங்களுள் அழகும், அமைதியும், ஆழ்ந்த இறை விசுவாசமும் நிறைந்து, சீர் பெற்றுப் புகழ் பரப்பும் பெருமை வாய்ந்த பழம்பெரும் கிராமம் கரம்பொன் என்றால் மிகையாகாது.

அத்தகைய கரம்பொன் கிராமத்தின் கண்ணாக விளங்கும் யா/ கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம் 1916 ஆம் ஆண்டு கரம்பொன் புனித செபஸ்ரியார் ஆலயத்திற்கு மேற்கே திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு, திருவாளர் வைரவநாதன் பேர்டினற் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். 1926 ஆம் ஆண்டு தூய்மை, தாழ்மை, அன்பு, இரக்கம் ஆகிய பண்புகளைக் கொண்ட புனித சின்ன திரேசாவின் பெயர் கொண்டு, சிறிய புஸ்ப மகளிர் ஆங்கிலப் பாடசாலை எனப் பெயர் சூட்டப்பட்டது.

1942 ஆம் ஆண்டு அரசினால் றோமன் கத்தோலிக்கப் பெண்கள் ஆங்கில பாடசாலை எனப் பெயர் சூட்டப்பட்டு தீவுப்பகுதியில் பெண்களுக்கான முதல் ஆங்கிலப் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டு, 1947 ஆம் ஆண்டு மூன்றாம் தரப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1949 ஆம் ஆண்டு பாலக்காட்டுச் சந்தியில், யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ஆங்கில பாடசாலை என்னும் பெயரில் புதிய பாடசாலை அமைக்கப்பட்டு, இடமாற்றம் செய்யப்பட்டது. 1952 இல் முதன் முதலில் பாடசாலை மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. 1961 ஆம் ஆண்டு பாடசாலை அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு அருட்சகோதரிகளே அதிபராகக் கடமையேற்க வேண்டும் என்ற உடன்பாடும் ஏற்படுத்தப்பட்டது.

1971 ஆம் ஆண்டு செபஸ்ரியார் ஆலயத்திற்கு அருகாமையில் இயங்கி வந்த ஆரம்பக்கல்விப் பாடசாலை யா/ கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலய பாடசாலையுடன் இணைக்கப்பட்டு, தரம் 1 தொடக்கம் 13 வரை இணைந்து நடைபெறும் பாடசாலையாக 1, தரத்திற்கு உயர்த்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு துரதிர்ஷ்டவசமாக இடப்பெயர்வுக்கு உள்ளாகியது. 1996 ஆம் ஆண்டு மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. இப் பாடசாலை தீவக வலயத்தில் தனக்கெனத் தனித்துவமான அடையாளத்தைத் தடம் பதித்ததோடு, தேசியம் வரை தனது பெயரை நிலைநாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்வியில் சிகரம் தொட்டு நிற்கும் பாடசாலை 'பிறரன்பும் தியாகமும்' என்ற விருதுவாக்கைத் தாண்டி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தொடர்ந்தும் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என்றால் மிகையாகாது.

## சாதனைகள்



★ 2015 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவிகள் 8 A,B, 8 A,C பெற்றுக்கொண்டமை.

★ தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் 2015 இல் நான்கு பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றதுடன் 70 புள்ளிகளுக்கு சகல மாணவர்களும் பெற்றுக்கொண்டனர்.

★ 2016 ஆம் ஆண்டு தேசிய உடற்பயிற்சிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றதுடன் சிறந்த அணித்தலைவர் என்ற பரிசினையும் எமது பாடசாலை உடற்பயிற்சி அணித்தலைவர் பெற்றுக் கொண்டார்.

★ 2016 வட மாகாணமட்ட சக்தி வளப் போட்டியில் கனிஷ்ட இடைநிலைப் பிரிவு கண்காட்சிப் போட்டியில் தரம் - 09 மாணவி வி. கெவினா 2ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் digital சுவரொட்டிப் போட்டியில் தரம் 08 மாணவி அ. மெரின்றா 2 ஆம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார்.

★ 2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசிலில் 3 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்திபெற்றதுடன் அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளதுடன் 100% சித்தியடைந்துள்ளனர்.

★ ஆரம்பப்பிரிவுச் "செயற்பாட்டு மகிழ்வோம்", விரைவுகணிதம், வினாவிடைப்போட்டி என்பவற்றிலும் கோட்ட, வலய இடங்களைப் பெற்றதோடு, வினாவிடைப்போட்டி மாணவர்கள் மாகாணப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

★ தமிழ்த் தினப் போட்டிகள், ஆங்கிலத் தினப் போட்டிகள், சித்திரப் போட்டி, விளையாட்டுப் போட்டி, ஒலிம்பியாட் போட்டி, சமூகவிஞ்ஞான போட்டி என்பவற்றில் கோட்ட, வலய மட்டங்களில் இடங்களைப் பெற்றுள்ளனர்.

### அதிபர்கள் வரிசையில்....

1916 - 1926
திருவாளர் வைரவநாதன் பேடினண்ட்
1926 - 1946
அருட்சகோதரி மரியா
1946 - 1955
அருட்சகோதரி லூட்ஸ்
1955 - 1967
அருட்சகோதரி லூசில்லா
1967 - 1969
அருட்சகோதரி கொலற்
1969 - 1980
அருட்சகோதரி கார்மலிற்றா
1980 - 1980
அருட்சகோதரி பொனவெஞ்சர்
1980 - 1989
அருட்சகோதரி லீனா
1989 - 1995
அருட்சகோதரி பாஸ்கால்
1995 - 2000
அருட்சகோதரி கலிஸ்ரா பிரான்சிஸ்
2000 - 2008
அருட் சகோதரி தயாநாயகி செபமாலை
2008 - 2016
அருட்சகோதரி சகாயநாயகி வஸ்தியாம்பிள்ளை
2016 - இன்று வரை
றோசாறி செபஸ்ரியன்

## சவால்கள்

★ மாணவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கான நிதித் தட்டுப்பாடு.

★ பாடசாலைக்கான விளையாட்டு மைதானம் இன்மை.

★ ஆசிரியர்கள், மாணவர்களுக்கான போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைகள்.

★ பாடசாலையில் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான இடப்பற்றாக்குறை.










## உலகில் மிகச் சிறந்த புத்திசாலி



## கருவறை

பாக்டீரியா'வோட படம் வரைய சொன்னா வெள்ளை பேப்பரை கட்டி கொடுத்திருக்கியே... ஏன்?



விவரம் புரியாம பேசாதீங்க TEACHER, இது கண்ணுக்கு தெரியாத 'பாக்டீரியா'

பிறர் ரத்தத்தை உறிஞ்சி வாழ்பவன்...
கடைசியில் ரத்தம் கக்கி சாவான்...



உதாரணம் "கொசு"

## சுவரில் கொய்தவை

**Nirojh Midhun**

குரங்கில் இருந்து வந்திருப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அநேகமாக குரங்கு இனத்தில் இருந்து அடித்துத் துரத்தப்பட்டு வந்திருப்பான் மனிதன்!

**Rajh Selvapathi**

டேய்! யாராவது நியூயோர்க்குடன் கிளிநொச்சியை இணைத்து இரட்டை நகரமாக்குங்கள்.
இரட்டை நகர் கொடுமை தாங்க முடியாது போலக்கிடக்கே?

**ம. தியாக சீலன்**

#படித்ததில்#
வீடுகட்ட ஆசைப்பட்டு கடனை வாங்கி ஒவ்வொரு மாதமும் பல ஆசைகளை தியாகம் செய்யும் மடத்தனத்திற்கு பெயர்தான் #லோன்#

**Bharathi Raja**

பணம் மட்டும் கண்டுபிடிக்காமல், முந்தைய காலமுறை போல் பண்டமாற்றுமுறை இருந்தால் உலகின் மிகப்பெரிய பணக்காரன் விவசாயி.

வாய் எதுக்கும்மா??
பேசுறதுக்கு டா தங்கம்



வாம்மா... வந்து எங்க மிஸ் கிட்ட நல்லா சொல்லும்மா... எப்பப் பாரு, க்ளாஸ்ல பேசாத பேசாதனு திட்றாங்க...

## மானிடம் எங்கே செல்கின்றது....

கடந்தவாரம் அரங்கேறிய சம்பவங்கள், நின்று, நிதானித்து சிந்திக்க சொல்கின்றன.

உணவுக்காய் யாசித்துக் கடை வாயிலில் காத்திருந்த இயலாத முதியவர் மீது நீர் ஊற்றுகின்றோம்.

சட்டத்தை காக்கின்றோம்(?) என்று சாக்கடைத்தனங்கள் செய்யும் போக்கிலிகளின் போக்கறுந்த தனத்தால் இரு இளம் உயிர்கள் பலியெடுக்கப் பட்டிருக்கின்றன.

எத்தனையோ கொலைகளை, கொள்ளைகளை, சமூக விரோதச் செயல்களை கட்டுப்படுத்த ஆக்கபூர்வமாய் விளையாது அப்பாவிகளின் மீது சகட்டு மேனிக்கு சன்னத்தை பாயச்செய்த அவர்கள் நிஜ கோழைகளே: (மானுடம் மெல்ல சாக


Hallock Gananathan UShanthan

## இந்தவார மீம்ஸ் (Meme)


இன்றைய சூழ்நிலையில் தீபாவளிக்கு ஆகுற செலவ பார்த்தால்...



அன்றைக்கு நரகாசூரனை கொல்லாம மன்னிச்சி விட்டு இருக்கலாம்யா...



தன் கணவர் தீபக்
பாகாவை நாயகனாக்கிப்
பார்க்க பல முயற்சிகள் எடுத்தார்
சிம்ரன். அவரோ வில்லன் ஆகிவிட்டார்.
'ஜோக்கர்' குரு சோமசுந்தரம் நாயகனாக
நடிக்கும் 'ஓடு ராஜா ஓடு' படத்தில் தீபக்
பாகாதான் வில்லன். நடிகை லக்ஷ்மி பிரியா
நாயகியாக நடிக்க, இரட்டை இயக்குனர்கள்
நிஷாந்த்-ஷங்கர் இயக்குகிறார்கள்.
இந்தப் படத்திற்குப் பிறகு, தீபக்கை
கதாநாயகனாக்கி ஒரு படத்தைத்
தயாரிக்க இருக்கிறாராம் சிம்ரன்.





தெ...
'ரீமே...
ஆகி...
'இறு...
தெலு...
வெங்கி...
நடித்த '...
அடுத்த ந...
நடிக்கத் ...
தெரிவித்...
தெலுங்கி...
வரவேற்...
அவரை...
இருக்கி...

விஜயகாந்தின் மகன் சண்முகப்...
ஆனதால், வேறு சில கதைகளை...
இயக்குனர் பசீர் இயக்கத்தில் நடி...
இரு மொழிகளிலும் உரு...
ஒரு கெ...



சிவா
இயக்கத்தில்
அஜித் நடித்து வரும்
படத்தின் வில்லனாக விவேக்
ஒபராய் ஒப்பந்தம் செய்யப்பட்
டுள் ளார். 'வீரம்', 'வேதாளம்'
படக் கூட்ட ணியான அஜித் -
சிவா இருவரும் மீண்டும் ஒரு படத்தில்
இணைந்து பணியாற்றி இருக்கிறார்கள்.
சத்யஜோதி நிறுவனம் தயாரித்து வரும்
இப்படத்தில் காஜல் அகர்வால், அக்'ஷரா
ஹாசன் உள்ளிட்ட பலர் நடித்து
வருகிறார்கள். வெற்றி ஒளிப்பதிவு
செய்து வரும் இப்படத்துக்கு
அனிருத் இசையமைத்து
வருகிறார்.

சினிமா கலைஞர்களுக்கான கேரள அரசு விருது வழங்கும் விழா பாலக்காட்டில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது. விழாவில் கேரள மாநில முதல்வர் பினரயிவிஜயன் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். விழாவில் துல்கர் சல்மான், பார்வதி நடிப்பில் வெளியான சார்லி படத்திற்கு பல விருதுகள் கிடைத்தன. மார்ட்டின் பிரக்காட் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியான சார்லி படத்தில் சிறப் பாக நடித்த தால் சிறந்த நடிகருக்கான விருது துல்கர் சல்மானுக்கு வழங்கப்பட்டது. சிறந்த நடிகைக்கான விருது சார்லி படத்திற்காக பார்வதிக்கும் கிடைத்தது.





'கோடிட்ட
இடங்களை
நிரப்புக' என்ற தன்
படத்தின் தலைப்பை அறிவித்த
பார்த்திபன், மற்ற விபரங்களை
அறிவிக்கவில்லை. தற்போது தன்
குருநாதர் பாக்யராஜின் மகன்
சாந்தனுவை இந்தப் படத்திற்காக
ஒப்பந்தம் செய்துவிட்டார்.
படத்தில் மோகினி என்ற
மலையாளி கதாபாத்திரம்
இருப்பதால், மலையாள
நடிகை பார்வதி
நாயரை ஹீரோயின்
ஆக்கியிருக்கிறார்.



தெலுங்கின் 'ரீமேக் ராஜா' ஆகிவிட்டார் வெங்கடேஷ். 'இறுதிச்சுற்று' படத்தின் தெலுங்கு ரீமேக்கில் நடித்து வரும் வெங்கி, அமிதாப் பச்சன், டாப்ஸி நடித்த 'பிங்க்' படத்தைப் பார்த்த அடுத்த நாளே அதன் ரீமேக்கில் நடிக்கத் தன் விருப்பத்தை தெரிவித்திருக்கிறார். தெலுங்கிலும் டாப்ஸிக்கு வரவேற்பு இருப்பதால் அவரையே நாயகியாக்க இருக்கிறார்களாம்.



தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையினால் பெற்றோர்களுக்கு இடையிலான போட்டி மனப்பான்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பூவன் மீடியாவினால் அவனைப்பார் எனும் நனோ படம் வெளியிடப்பட்டு பலரது பாராட்டுக்களையும் வரவேற்பினையும் பெற்றுக் கொண்டுள்ளது.

சண்முகப்பாண்டியனின் 'தமிழன் என்று சொல்' படம் டிராப் கதைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார். இப்போது, தெலுங்கு த்தில் நடிக்க 'ஓகே' சொல்லியிருக்கிறார். தமிழ், தெலுங்கு என ிலும் உருவாகும் இந்தப் படத்தில் விஜயகாந்துக்கும் ஒரு கெஸ்ட் ரோல் இருக்கிறதாம்.



தமிழில் மட்டுமல்ல இந்தி, மலையாளத்திலும் நடிக்கத் தொடங்கி விட்டார் ஐஸ்வர்யா ராஜேஷ், மலையாளத்தில் நிவின் பாலி நடிக்கும் படத்தில் கதாநாயகி இவர்தான். தவிர, சத்யன் அந்திக்காடு இயக்கும் படத்தில் துல்கர் சல்மானுக்கும் ஜோடியாகி இருக்கிறார்.





Movieman media நிறுவனத்தின் தயாரிப்பிலும் மிதுனாவின் இயக்கத்திலும் சசிகரனின் ஒளித்தொகுப்பு படத் தொகுப்பிலும் உருவாகி தற்போது வெளியீட்டுக்கு தயார் நிலையில் உள்ள 'புழுதி' குறும்படத்தின் முன்னோட்டம் வெகு விரைவில் வெளியிடப் படவுள்ளதாக படக் குழு வினர் தெரிவித்துள்ளனர்.



# புதினப்பூங்கா

ராஜேஷ் மணாளன்

## பாரதி கண்ட புதுமைப் பெண்



அந்தரத்தில் பறந்து பறந்து வேலை செய்பவர்கள் அவர்கள். பயணிகளை குறுக்கும் நெடுக்குமாக நடந்து அன்போடு கவனிப்பவர்கள். சிறு சிறு தேவைகளை உடனுக்குடன் செய்து முடிப்பவர்கள். இவர்கள்தான் விமானப் பணிப் பெண்கள். இப்படியான ஒருவர் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவரைப் பார்த்து ஆண் பயணி ஒருவர் நாகரீகமற்ற முறையில் பேசியதால் விமானத்திலிருந்து இறக்கி விடப்பட்டுள்ளார்.

அட இதென்ன அதிசயம் என்று ஒரு சாரார் வாதாடக் கூடும். முதலில் நடந்த சம்பவத்தை அறிய வேண்டாமா? அமெரிக்க விமான நிலையமொன்றில் அலஸ்கா ஏயர்லைனில் விமானமொன்று புறப்படத் தயாராக இருந்த சமயமே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பறக்கும் விமானம் நடுவழியில் ஏதாவது அசம்பாவிதத்தைச் சந்தித்தால், எப்படி நடந்து கொள்வது, உயிர்காக்கும் அங்கியை எப்படி அணிந்து கொள்வது என்பதையெல்லாம் ஒரு விமானப் பணிப் பெண் பயணிகளுக்குச் செய்து காட்டுவது வழமை. (நவீன விமானங்களில் இந்த வழக்கொழிந்து, எல்லாவற்றையும் இருக்கையின் முன்னுள்ள தொலைக்காட்சிப் பெட்டியில் காண்பித்து வருகின்றார்கள்.) இப்படி இந்தப் பெண் அங்கியை அணிந்து காண்பித்த சமயம், ஒரு ஆண் பயணி அநாகரீகமான வார்த்தைகளை அந்தப் பெண்ணை நோக்கி வீசியுள்ளார். அவள் தன் சகாக்களிடம் இதை உடனே முறையிட்டாள்.

விளைவு, கைப்பொதியை எடுத்துக் கொண்டு விமானத்திலிருந்து இறங்கும்படி பணிக்கப்பட்டுள்ளார் அந்தப் பயணி. அவரை இறக்கி விட்டு, விமானம் புறப்பட்டுப் போய்விட்டது.

முகநூலில் இந்தச் சம்பவத்தை ஒரு பயணி பதிவேற்ற, அதற்கு 9000 லைக்குகள் கிடைத்திருக்கின்றதாம். பாரதி கண்ட புதுமைப் பெண்கள்தான் இவர்கள் போலும். பெண் என்பவள் ஆணின் விளையாட்டுப் பொருள் அல்ல என்பது நன்றாகவே நிரூபிக்கப்பட்டுள்ளது. இது நியாயமா அநியாயமா நீங்களே சொல்லுங்கள்.

## உட் புக முடியாத உணவுகள்

ஒருவருக்கு அமிர்தம் இன்னொருவருக்கு விஷமாக இருக்கும் என்று சொல்லப்படுவதுண்டு. சீனாவில் பாம்பை ருசித்து சாப்பிடுகின்றார்கள். எம்மால் அது முடிகின்றதா?

இது ஒருபுறம் இருக்க, சில குறிப்பிட்ட உணவுகளை தமது நாட்டிற்குள் எடுத்து வர அரசு தடைவிதித்துள்ளது.

நீங்கள் ஒருவேளை நம்ப மறுக்கலாம். காய்ச்சப்படாத பச்சைப் பாலை தன் நாட்டிற்குள் எடுத்துவர கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகள் அனுமதிப்பதில்லை. ஆனால் இதை ஐரோப்பிய நாடுகளோ, ஆசிய நாடுகளோ அல்லது ஆபிரிக்க நாடுகளோ தடை செய்வதில்லை.

நாம் பலரும் அறிந்த, விரும்பிச் சாப்பிடுகின்ற சமோசாவை ஒரு நாடு தடை செய்கின்றது என்ற தகவல் உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். சோமாலியாவின் தீவிரவாத அமைப்பொன்று, தன் கட்டுப்பாட்டிலுள்ள பிராந்தியங்களில் 'சமோசா' நுழைவதைத் தடுத்துள்ளது. என்ன கோபமோ தெரியவில்லை.

வாய்க்குள் மெல்கின்ற சுயிங்கம்மை நீங்கள் எந்த நாட்டிற்குள்ளும் கொண்டு செல்லலாம் என்று நினைத்தால் அது தவறு. சிங்கப்பூர் இதற்கு உங்களை அனுமதிக்கப் போவதில்லை. 2004இலிருந்து இதன் இறக்குமதிக்கு அந் நாட்டு அரசு தடைவிதித்து விட்டது. விமானநிலையத்தில் பயணிகள் கொண்டு செல்லவும் தடை. குதிரை இறைச்சியை உலக நாடுகள் எல்லாமே அனுமதித்தாலும், அமெரிக்காவின் கலிபோர்னியா, இலினொயிஸ் மாவட்டங்கள் அனுமதிக்கத் தயாராக இல்லை. ஒருவருக்குப் பிடித்தது இன்னொருவருக்குப் பிடிப்பதில்லை. இதுதான் உலக நியதி.




## ஆண்டவர் மாண்டார்

இவரை அந்த நாட்டின் தெய்வம் என்றுதான் போற்றினார்கள். எனவே ஆண்டவர் என்று இரு பொருள்பட, மாண்டவரான தாய்லாந்தின் மன்னர் BhumibolAdulyadej என்பவர் 70 வருட காலம் ஆட்சிப் பீடத்திலிருந்து உலக சாதனை படைத்தவர்.

நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்த இவர் கடந்த வியாழனன்று மரணமாகியபோது முழு தாய்லாந்துமே அழுதது. அந்த அளவு மக்களால் நேசிக்கப்பட்டவர் இந்த 88 வயது மன்னர். இவரைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் தவறாகப் பேசினால் ஜெயில் என்று சொல்லும்போது, இந்த மன்னர் தாய்லாந்தில் எவ்வளவு உச்சத்தில் வைக்கப்பட்டிருந்தார் என்பது உங்களுக்கு நன்றாகவே புலனாகி விடும்.

இனி அடுத்த மன்னராக 63 வயதான முடிக்குரிய இளவரசரான Maha Vajiralongkorn என்பவர்தான் நியமிக்கப்படவுள்ளார். ஆனால் தனது வாழ்வின் பெரும்பகுதியை ஜெர்மன் நாட்டிலேயே கழித்த இவர் மக்களால் அதிகம் அறியப்படாதவர் என்கிறார்கள். மன்னரின் மரணத்தையொட்டி துக்க அனுஷ்டிப்பு ஒரு வருட காலம் வரை தொடரும் என்று சொல்லப்படும்போது மக்கள் மனதில் மன்னருக்குரிய உயர்ந்த இடம் எப்படியானது என்பது தெளிவாகவே தெரிகின்றது. தாய்லாந்தின் மன்னரது மரணத்தை அடுத்து 63 வருடங்களுக்கு மேலாக இங்கிலாந்தின் மகாராணியாக ஆட்சியிலிருக்கும் இரண்டாவது எலிஸபெத் மிக நீண்ட காலம் ஆட்சியில் இருப்பவர் என்ற பெருமையைப் பெறுகின்றார். 1953ம் ஆண்டு ஜூன் 2 இல் முடிசூட்டப்பட்டவர் இவர். இங்கிலாந்தில் மிக நீண்ட காலம் ஆட்சிப் பீடத்தில் இருக்கும் மகாராணியும் இவர்தான்.



## என்ன கொடுமை இது?

11,000 பிள்ளைகளில் ஒரு பிள்ளைக்குத்தான் இந்தக் குறைபாடு வருமாம். பாவப்பட்ட அந்தப் பெற்றோர்களுக்கு இப்படியொரு பிள்ளைதான் பிறந்தது. நன்கு வளர்ந்த ஒருவருக்குள்ள நாக்களவு இந்தச் சிசுக்கும் இருந்துள்ளது.

பாவம் வாயை மூடிக்கொண்டிருக்கும் நாக்கால் குழந்தை எப்படி சுவாசிக்க முடியும்? அமெரிக்காவின் தென் டகோற்றா மாவட்டத்தில் பைஸ்லி-மொரிஸன் தம்பதிகளுக்கு பிறந்த இந்தக் குழந்தையின் சிரிப்பைக் காண பல மாதங்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. 6 மாத காலம் குழந்தைக்கு உணவு குழாய் மூலமே செலுத்தப்பட்டு வந்தது.

இரண்டாவது தடவையாக 4 அங்குல நீளத்தை துண்டித்து (மொத்தத்தில் 6 அங்குலம்)16 மாதக் குழந்தையை முதற் தடவையாக சிரிக்க வைத்துள்ளார்கள் மருத்துவர்கள்.

மருத்துவர்கள் தெய்வங்கள்தான்.



## 300 டொலருக்கு வீட்டில் குவா குவா சத்தம்

முன்பெல்லாம் குறைந்தது ஆறு பிள்ளைகளாவது வீட்டில் இருக்கும். பெற்றோருக்கு இவர்கள் சுமையாக இருந்ததில்லை. கஞ்சியோ கூழோ இருப்பதைப் பகிர்ந்து நிறைவோடு வாழ இந்தப் பெரிய குடும்பங்கள் பழகியிருந்தன. காலவெள்ளத்தில் இதெல்லாம் அடிபட்டுப் போய் ஆசைக்கொன்று ஆஸ்திக் கொன்றாகி இப்பொழுது பல குடும்பங்களில் பிள்ளைகளே இல்லை என்ற நிலையும் வந்திருக்கின்றது. குறிப்பாக ஜப்பானில் திருமணத்தை தள்ளிப்போடும் பெண்கள் அதிகம். இங்கே வயதானவர்களுக்கு விளையாட ஒரு குழந்தை இல்லை, பெண்களுக்கும் எந்தத் துணையும் இல்லை.

இந்தத் தனிமையைப் போக்க ரொயோட்டா கார் உற்பத்தி நிறுவனம், குரோபோமினி என்ற பெயரில் குழந்தை வடிவிலான றோபோ ஒன்றை அறிமுகப்படுத்த உள்ளது. மான்களின் கண்களைப் போன்று கண்களைக் கொண்டுள்ள இந்த 4 அங்குல உயரமான றோபோவால் குழந்தைக் குரலில் பேச முடியும். சந்தை விலை 300 டொலராக நிர்ணயித்துள்ளார்கள்.

பிள்ளைகள் பிறக்கும் விகிதம் படு வேகமாகக் குறைந்து கொண்டு வரும் ஜப்பானில் ஒரு குழந்தை வீட்டில் இல்லாத குறையைப் பூர்த்தி செய்யும் என்கிறார்கள் உற்பத்தியாளர்கள்.

அதனைப் பார்த்துப் பேசினால் அதுவும் பேசுமாம். தற்போதைக்கு ஜப்பானில் மட்டுந்தான் இந்த றோபோ வியாபாரம் என்கிறார்கள். 300 டொலருக்கு வீட்டில் குவாகுவாச் சத்தம். அட கடவுளே விஞ்ஞானம் செய்யும் விந்தை கண்டீரோ?

(04 ஆம் பக்க தொடர்ச்சி...)

# காவல்... காலன்...



## இருமுனைத் துப்பாக்கிப் பிரயோகம்?

மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்த்தப்பட்ட இடம் எதுவென ஆரம்பத்தில் தெரிந்திருக்கவில்லை. ஏனெனில் தடயங்கள் யாவும் இரவோடு இரவாக அழிக்கப்பட்டிருந்தன. எனினும் சம்பவம் நிகழ்ந்து ஆறாம் நாள் கடந்த புதன் கிழமை (26.10.2016) குற்றம் சாட்டப்பட்டபொலிஸார் ஒருவரை விலங்கிடப்பட்ட நிலையில் ஏற்றிக் கொண்டு தடயவியல் நிபுணர்களைக் கொண்ட பொலிஸ் அணி ஒன்று சம்பவ இடத்தில் வந்திறங்கியது. துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்ட பொலிஸார் காட்டிய இடங்களில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது கொக்குவில் சந்தைக்கு எதிர்ப்புறமாக உள்ள வீட்டின் மதிற்கரையோரமாக ஒரு வெற்றுத்தோட்டா மீட்கப்பட்டது. ஆனால் சந்தைப்பக்கமாகவும் தேடுதல் நடத்தப் பட்டது. அதாவது வீதியின் இருமருங்கிலும் வெற்றுத் துப்பாக்கி ரவைகளை பொலிஸ் குழு தேடியது. ஆகவே இருபுறத்திலிருந்தும் மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எதற்கு இரு பக்கமும் தேடுதல்?

இதைவிட இன்னொரு விடயமும் இரு பக்கங்களில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. கொல் லப்பட்ட பல்கலைக் கழக மாணவன் சுலக்சனின் உடலில் சன்னங்கள் வலப் பக்கமாகப் பாய்ந்துள்ளன. எனவே அவர் மீது வலப்பக்கத்தில் இருந்து (வெற்றுத் துப்பாக்கி ரவையை மீட்ட இடத்தில் இருந்து) துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

ஆனால் மாணவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கி யின் இடதுபுறத்தில் ஒரு துப்பாக்கிச் சூட்டு அடையாளம் காணப்படுகிறது. வலப் பக்கமாக இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டால் அது தாங்கியின் இடப்பக்கமாகத் தாக்கியிருக்க வாய்ப்பு இல்லை. ஆகவே இடப்பக்கத்தில் இருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதையே பெற்றோல் தாங்கியில் உள்ள துப்பாக்கிச் சூட்டு அடையாளம் உறுதிப்படுத்துகிறது.

எனவே மாணவர்கள் இருவரும் தப்பித்துப் போகக்கூடாது என்பதில் பொலிஸார் குறியாக இருந்திருக்கிறார்கள். அதனால்தான் இருபக்கமும் நிலையெடுத்து குறி பிசகாமல் சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள்.

## பின்பக்கமாக இருந்து சுட்டார்களா?

பொலிஸாரின் கூற்றுப்படி பின்பக்கமாக இருந்தே மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அதாவது மாணவர்கள் தங்களைத் தாண்டி தப்பித்துச் செல்லும் போது அவர்களைத் தடுப்பதற்காக பொலிஸார் சூடு நடத்தினார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியானால் துப்பாக்கிச் சன்னங்கள் மோட்டார் சைக்கிளை ஓட்டிய சுலக்சனைத் தாக்காமல் பின்னால் இருந்த கஜன் மீது தான் பாய்ந்திருக்க வேண்டும். ஆனால் இங்கு முன்னால் இருந்த சுலக்சன் மீதும், பெற்றோல் தாங்கியின் மீதுமே சூடுகள் பட்டுள்ளன. ஆகவே பின்னால் இருந்து சுட்டார்கள் என்பதோ அல்லது மேல்வெடி வைக்கும்போது தவறுதலாகப் பட்டதென்பதோ பொருத்தமற்ற கூற்று. மாணவர்கள் மீது முன்னால் நின்று அதுவும் பக்கவாட்டாக நின்றே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. இதனை மாணவர் களின் உடலில் பாய்ந்துள்ள சன்னங்களும் பெற்றோல் தாங்கியில் ஏற்பட்டுள்ள அடையாளமும் தெளிவாக வெளிப்படுத்து கின்றன.

## சுட்டது எந்த துப்பாக்கி?

கொலைக்குப் பயன்படுத்தப்பட்டது எந்த ரகத் துப்பாக்கி என்பது இதுவரை வெளியிடப்படாத தகவலாக இருக்கிறது. பிஸ்டல் ரக கைத்துப்பாக்கி மூலமே சூடு நிகழ்த்தப்பட்டதாக பரவலாகக் கதைகள் அடிபட்டன. ஆயினும் கடந்த புதன்கிழமை கொக்குவிலில் மீட்கப்பட்ட



பெற்றோல் தாங்கியில் துப்பாக்கிச் சூடு

வெற்றுத் துப்பாக்கி ரவையில் இருந்தும், பொலிஸ் தரப்பில் இருந்து கிடைத்த இரகசிய தகவலில் இருந்தும் இந்த இரட்டைக் கொலைக்கு ரி - 56 ரக துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டுள்ளமை புலனாகி உள்ளது. அதனால்தான் மிகக் குறுகிய நேரத்தில் நாலைந்து சூடுகள் நிகழ்த்தப்படக்கூடியதாக இருந்திருக்கிறது.

## குறைந்தது 4 வேட்டுகள்

சுலக்சனின் உடலில் மூன்று இடங்களில் துப்பாக்கி ரவைகள் பாய்ந்துள்ளன. அத்துடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியிலும் ஒரு குண்டு பாய்ந்துள்ளது. எனவே சம்பவத்தின் போது ஆகக்குறைந்தது 4 வேட்டுகளாவது தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தேடுதலின்போது ஒரு ரவையின் வெற்றுக்கோது மாத்திரமே மீட்கப்பட்டுள்ளது. கவுண்டமணி - செந்திலின் வாழைப்பழப் பகிடி போல "ஒன்று இங்கே இருக்கிறது, மிச்சம் மூன்றும் எங்கே" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. அப்படியானால் எஞ்சிய ரவைகளின் வெற்றுக்கோதுகளை ஏன் மீட்க முடியவில்லை?. அவை இரவோடு இரவாக சம்பவம் நடந்த அன்றே தேடி பொறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

## மற(றை)க்கப்பட்ட நடைமுறைகள்

பொலிஸாரால் எவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டால் அது குறித்து துப்பாக்கிச் சூட்டை நிகழ்த்திய பொலிஸ் உத்தியோகத்தர் தன்னுடைய பிரத்தியேக குறிப்புப் புத்தகத்தில் சம்பவத்தைப் பதிவு செய்ய வேண்டும். பின்னர் அதனை தன்னுடைய பொறுப்பு அதிகாரிக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் தெரியப்படுத்த வேண்டும். பொலிஸ் நிலையத்தில் உள்ள பதிவேட்டில் சம்பவம் பதிவு செய்யப்படுவதோடு சூட்டை நிகழ்த்திய துப்பாக்கியும் எஞ்சிய ரவைகளும் பாரப்படுத்தப்படும்.

ஆனால் இந்த நடைமுறைகள் எவையுமே மாணவர்கள் கொலை விவகாரத்தில் பின்பற்றப்படவில்லை. குறித்த சம்பவம் வியாழக்கிழமை இரவு 11.40 க்கும் 11.45 இக்கும் இடைப்பட்ட நேரத்தில் நிகழ்ந்துள்ளது. பின்னர் மாணவர்களின் உடலங்கள் அங்கிருந்து அவசரமாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இதில் சுலக்சன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார். விபத்து ஒன்றின்போது யாரேனும் கொல்லப்பட்டால் நீதிபதி ஒருவரின் பிரசன்னத்தின் பின்னரே அந்த உடல் சம்பவ இடத்தில் இருந்து அப்புறப் படுத்தப்பட வேண்டும். ஆனால் அந்த நடைமுறையும் இங்கே பின்பற்றப்பட வில்லை. எப்படியேனும் மாணவர்களின் உடல்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி னால் போதும் என்ற மனோநிலையே பொலிஸாரிடம் இருந்தது.

## நள்ளிரவுத் தேடுதல்

சூட்டுச் சம்பவம் நிகழ்ந்த பின்னர் தான் பொலிஸார் அப்பாவிகள் இருவரைக் கொன்றுவிட்டோம் என்ற உண்மையைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். எனவே தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் துரிதமாகச் செயற்பட்டார்கள். நடந்தது கொலையல்ல விபத்து என்று பார்ப்போர் நம்பும் வண்ணம் அவர்களது காரியங்கள் இருந்தன. மழைக்கால இரவு என்பதால் ஆள் நடமாட்டம் குறைவு. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி துப்பாக்கிப் பிரயோகத்தால் ஏற்பட்ட சாவை விபத்தால் ஏற்பட்ட உயிரிழப்பாக மாற்றிக்காட்ட அவர்கள் முனைந்தார்கள்.

நள்ளிரவைத் தாண்டிய பின்னர் குளப் பிட்டிச் சந்தியை அண்மித்த பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு வெற்று ரவைகளைத் தேடி எடுத்தார்கள். ஐந்து பொலிஸார் மாத்திரமே இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்று கூறப்பட்டாலும் குறைந்த பட்சம் 10க்கும் மேற்பட்ட பொலிஸார் வெற்று ரவைகளை இரவிரவாகத் தேடினார்கள். ஆக மொத்தத்தில் அவர்களும் கைதுசெய்யப்பட வேண்டிய வர்களே.

இங்கே இன்னொரு விடயமும் கவனத் தில் கொள்ளப்பட வேண்டும். தமக்குரிய கடமையை விடுத்து வெற்று ரவைகளை இரவிரவாகத் தேடும்போது அது குறித்து தமது பொறுப்பதிகாரிக்கும் பொலிஸ் நிலையத்திற்கும் பொலிஸார் தெரியப்ப டுத்தி அனுமதி பெறவேண்டும். தன்னிச் சையாக இத்தகை நடவடிக்கைகளில் இறங்க முடியாது. ஆகவே பொலிஸ் பொறுப்பதிகாரியின் ஒப்புதலோடுதான் கொலையின் தடயங்களை அழிக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டிருக்கி றார்கள்.

## சுட்டுக்கொலை என்று எப்படித் தெரிந்தது?

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்ட இடத்திற்கு அண்மையாக உள்ள நிறுவனம் ஒன்றில் பொருத்தப்பட்ட இரகசியக் கமராவில் சில காட்சிகள் பதிவாகி உள்ளன. மாணவர்கள் வருவதற்கு முன்னர் கறுப்பு மழையங்கியோடு அந்தப் பகுதியில் ஒருவர் நிற்கிறார். அவர்கையில் ஒரு நீண்ட பயணப்பை. நேரம் 11.40 ஐ நெருங்கும் சமயத்தில் அவர் மருதனார்மடம் சந்திப்பக்கமாக நடந்து செல்கிறார். சில செக்கனில் பின்னால் திரும்பிப் பார்த்தபடி சுலக்சனும் கஜனும் அந்த இடத்தைக் கடக்கிறார்கள். (அதற்கு சில மில்லி செக்கன்கள் முன்னதாகவே சுலக்சனுக்கு சூடு விழுந்திருக்க வேண்டும்.) இரண்டு நிமிடங்கள் கழித்து மழை அங்கி அணிந்த நான்கைந்து பொலிஸார் அவ்விடத்தை நோக்கி வருகிறார்கள். அதே நேரம் சுலக்ச னும் கஜனும் சென்ற அதே பக்கமாக பிரகாசமான ஒளித்தெறிப்புகள் தென்படு கின்றன. (அனேகமாக சக்திவாய்ந்த ரோச் லைட் அந்தப் பக்கமாக இருந்து அடிக்கப் பட்டிருக்க வேண்டும்) இதுவே அந்தக் கமராவில் பதிவாகி உள்ள காட்சி.

இந்தக் காட்சியின் படி, நடந்து சென்ற மனிதர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்ட தால் தான் அந்த இடத்தில் எதிர்ப்பக்கமாக நடந்து சென்றிருக்க வேண்டும். அதே நேரம் சூடு வாங்கியபடி வந்த சுலக்சன் மோட்டார் சைக்கிளில் அவரைக் கடந்த பின்னர்தான் நிலை தடுமாறி ஆச்சி கடைச் சுவரோடு மோதியிருக்க வேண்டும். ஆகவே கறுப்பு உடை அணிந்த அந்த மனிதருக்கு நடந்த சம்பவம் மிகச் சரியாகத் தெரிந்திருக்க வாய்ப்புக்கள் மிக மிக அதிகம். ஆனால் அவர் யார் என இன்னும் இனங் காணப்படவில்லை. அன்றைக்கு இடி முழக்கம் அதிகமாக இருந்த போதும் சுட்ட துப்பாக்கி வேட்டொலிகள் பலமாகக் கேட்கவே செய்துள்ளன. இதனை சம்பவ இடத்தில் வசிப்பவர்கள் உறுதிப்படுத்து கிறார்கள்.

இந்த நிலையில் மாணவர்கள் மருத்துவ மனையில் நின்றிருந்தபோது விடிகாலை 5 மணியளவில் அங்கு வந்த ஒரு வயதானவரும் இளைஞரும் அவர்களோடு உரையாடியுள் ளார்கள். தங்களைப் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டாம் எனச் சொன்ன அவர்கள் "சுலக்சனும், கஜனும் பொலிஸாரால் சுடப்பட்டே இறந்தார்கள்" என்ற தகவலை தெரியப்படுத்தியுள்ளார்கள். அதுவரை சுலக்சனும் கஜனும் விபத்தில் தான் கொல்லப்பட்டார்கள் என்றே பல்கலை கழக மாணவர்கள் எண்ணிக்கொண்டிருந் தார்கள். அந்த வயதானவர் உண்மையை சொன்ன பின்னர்தான் தங்களது சக மாணவ சுட்டுக்கொல்லப்பட்ட விடயம் தெரிய வந்து உண்மையை அறிய போராடத் தொடங்கினார்கள்.

## மாணவர்களின் போராட்டம்

மாணவர்கள் தமது சகாக்கள் பொலி ஸாரின் சூட்டிலேயே பலியானார்கள் என்று கூறியபோதும் அதனைப் பொலிஸ் தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. அது விபத்து மட்டுமே என்று பொலிஸார் அடித்துக் கூறினார்கள். ஆனால் மாணவர்கள் விடவில்லை. தமது நிலையில் விடாப் பிடியாக இருந்தார்கள். பிரேதப் பரிசோ னையில் ஏதாவது தில்லுமுல்லுச் செய் பொலிஸார் தாம் கூறியதுபோல இதனை விபத்தாகவே மாற்றிவிடுவார்களோ என மாணவர்கள் சந்தேகப்பட்டார்கள். இதனா சகல பீடங்களைச் சேர்ந்த மாணவர்களு வைத்தியசாலைக்கு உடனடியாக விரை தார்கள்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)





# பூதத்தீவுப் புதிர்கள்




காலை மலர்ந்தது. ஒன்பது பேர் தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள். வசந்தன், ரகு, அரவிந்தன், சீலன், மாலா ஆகியோரும் வேடன், கமக்காரன், கோபுரந்தாங்கி என்போரும் அக்கூட்டத்தில் இருந்தனர்.

சத்திரத்தில் இருந்து வடக்கு நோக்கி அவர்கள் பயணப்பட்டனர்.

சற்றுத்தூரம் சென்றதுமே பயங்கரக்காடு குறுக்கிட்டது. வானை அளாவி மரங்கள் வளர்ந்திருந்தன. காலை வேளையிலும் இருள் கவிந்திருந்தது. ஆங்காங்கு அடர்ந்த மரக்கிளைகளுக்கூடாகச் சூரிய ஒளி பொட்டுப் பொட்டாக நிலத்தில் படிந்திருந்தது. வேடன் வழிகாட்டிச் சென்றான்.

அவன் தன் கரத்தில் வில்லையும், அம்புகளையும் தயாராக ஏந்தியிருந்தான். அவர்கள் வரும் வாடையை உணர்ந்த விலங்குகள், மெதுவாக மறைவிடங்களில் பதுங்கிக் கொள்ளும் சரசரப்பினைத் தவிர, காடு அமைதியாக இருந்தது.

"வசந்தன்" என்றது கோபுரந்தாங்கி.

"என்ன?"

"பயப்பட ஒன்றுமில்லை. விலங்குகள் எதுவும் நான் வரும்போது கிட்ட நெருங்கா. ஆனால், அறிவாளிகள் எதிர்ப்பட்டால் தான் நான் பயப்படுவேன்.."

"அதை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம்" என்றான் வசந்தன்.

"என்ன விசித்திரமான தீவு.." என்றான் சீலன்.

"எல்லாரும் பக்குவமாகத் தீரும்பிவிடுவோமா?" என்று மாலா வினாவினாள். அவள் குரலில் சோகம் இழையோடியது.

"அதில் என்ன சந்தேகம்" என்றான் ஆறுதலாக வசந்தன்.

அவர்கள் ஓரளவு அடர்த்தி குறைந்த காட்டினுள் இப்பொழுது நடந்தார்கள். குரங்குகள் கிளை தாவின. கூட்டங்கூட்டமாக அவை மரக்கிளைகளில் காணப்பட்டன. பழுப்பு நிற நரிகள் புதர்களுள் மறைந்திருந்து அவர்களைப் பார்த்தன. வரிப்புலிகள் அவர்களின் வருகையை உணர்ந்து விலகிச் சென்றன.

முன்னால் நடந்து வழி காட்டி வந்த வேடன் திடீரென வீரிட்டு அலறினான். பெரியதொரு மரத்தில் பதுங்கியிருந்த கரடி யொன்று, வேடனைத் தாக்கியது. ஓங்கி ஓர் அறை அறைந்தது. வேடனால் வில்லில் அம்பினைப் பூட்ட முடியவில்லை. நிலத்தில் அப்படியே சரிந்து விழுந்தான். கரடியின் பெரிய உருவத்தினைப் பார்த்த மாலாவும், சசியும் பயந்து அலறியபடி ஓடப்பார்த்தனர். அதற்குள் கோபுரந்தாங்கி பாய்ந்து பாய்ந்து முன்னே வந்தது. வேடனைத் தாக்க முயன்ற கரடியை அப்படியே ஒரு கரத்தால் அலேக்காகத் தூக்கித் தூர வீசிவிட்டது.

பொத்தென விழுந்த கரடி அலறியடித்தபடி காட்டிற்குள் ஓடி மறைவதை அவர்கள் பயம் நீங்கியவர்களாகக் கண்டனர்.

வேடனின் உடலில் சில சிறு காயங்கள் காணப்பட்டன. அவனை கோபுரந்தாங்கி தூக்கிவிட்டது.

"நீயெல்லாம் ஒரு வேடன்" என்று ஏளனம் செய்தது.

"எதிலும் அவதானம் தேவை.." என்றான் கமக்காரன்.

அவர்கள் பரந்த வெளி ஒன்றினை அடைந்தனர். அந்த வெளியின் மத்தியில் தாமரைப் பூக்கள் மலர்ந்திருக்கும், தடாகம் ஒன்று காணப்பட்டது. நீர்ப் பறவைகள் அக்குளத்தில் காணப்பட்டன.

குளத்தைக் கண்ட கமக்காரன் நீர் அருந்துவதற்காக அதனை நோக்கிச் சென்றான். அவனைப் பின் தொடர்ந்த சீலனையும் சசியையும் கோபுரந்தாங்கி செல்ல வேண்டாமென மறித்தது.

"ஏன்?" என சீலன் கேட்க. "மச்சான் அகப்படப் போறார் பார்" என்றது பூதம்.

கமக்காரன் குளத்தை நெருங்கி அதனுள் இறங்க முயன்றான்.

"நில்! அப்படியே நில்!" என்று ஒரு குரல் எழுந்தது. குளக்கரையில் ஒரு மனிதன் அமர்ந்திருப்பது தெரிந்தது. கமக்காரன் சற்றுத் திகிலுடன் அந்த மனிதனைப் பார்த்தான். அவன் உடல் சிலையாக விருந்தது. உதடுகள் மட்டும் அசைந்தன.

"என்னை மறிக்க நீ யார்? நீர் என் சொத்து" என்றான் கமக்காரன்.

"முதலில் என் கேள்விக்குச் சரியாகப் பதில் சொல் பிழையாகச் சொன்னால்..."

"உன்னிடத்தில் நான் அமர்ந்துகொள்ள வேண்டும். அவ்வளவுதானே?"

"உனக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது.." என்றான் குளக்கரை மனிதன்.

"என்னை மினக்கெடுத்தாது. உன் கேள்வியைக் கேள்.." என்றான் கமக்காரன் எரிச்சலுடன்.

குளக்கரை மனிதன் சற்றுத் தயங்குவது போலப் பட்டது. "ஏன் தயக்கம்?" எனக்கமக்காரன் கேட்டான்.

"இல்லை. உன் உசாரைப் பார்த்தால் நான் உன்னிடம் தோற்று விடுவேன் போலப்படுகிறது. தோற்றால் நான் இப்படியே இன்னமும் எத்தனை வருடங்களுக்குக் காத்திருப்பது? கமக்காரா, நீ திரும்பிப் போய் அங்கிருப்பவர்களில் புத்திசாலியல்லாத ஒருவரை அனுப்பி எனக்கு உதவி செய்துவிடு" என்று கெஞ்சியது.

"கமக்காரன் பேச்சால் அவனைப் பேய்க்காட்டிவிட்டான். குளக்கரை மனிதன் கேள்வி கேட்டிருந்தால். அவனுக்குப் பதில் தெரிந்திருக்காது. மச்சான் அவ்விடத்தில் அமர்ந்திருப்பார். இங்க திரும்பி வருகிறார்" என்றது கோபுரந்தாங்கி. கமக்காரன் அவர்கள் நின்றிருந்தவிடத்திற்கு வந்தான்.

"என்னவாம்?" என வசந்தன் கேட்டான்.

"எங்களில் யார் மகா புத்திசாலி என அந்தக் குளக்கரை மனிதன் கேட்டான். கோபுரந்தாங்கிப் பூதம் தான் எங்களில் மகா புத்திசாலி என்றேன். அவரை அனுப்பிவைக்கும்படி கூறினான்" என்றான் கமக்காரன்.

"சரியாகச் சொன்னாய்" என்றபடி கோபுரந்தாங்கி குளக்கரையை நோக்கிப் புறப்பட்டது. "என்ன பெரிய கேள்வி கேட்கப்போகிறார்"

"நில் கோபுரந்தாங்கி, நானும் கூட வருகிறேன். குளக்கரை மனிதன் கேட்கின்ற வினாவுக்கு விடை தெரியாவிட்டால் மெதுவாக என்னைப் பார். நான் சைகையால் தெரியப்படுத்த முயல்கின்றேன்"

"சீச்சீ அது கூடாது.."

"நீ அவ்விடத்தில் சிலையாக அமர்ந்துவிட்டால் எங்கள் இலட்சியம் என்ன ஆவது?" என்றான் வசந்தன் கவலையுடன்.

"கவலைப்படாதே. அதில் உட்கார்ந்திருப்பவர் அவ்வளவு புத்திசாலியாகத் தெரியவில்லை. இல்லாவிட்டால் கமக்காரன் ஏமாற்ற விட்டிருப்பாரா? அவரிடமே விடை தெரிந்து அவருக்கே பதில் கூறிவிடுவோம் வா"

அவர்கள் இருவரும் குளக்கரைக்கு வந்து குளத்தில் இறங்க முயன்றனர்.

"நில்! அப்படியே நில்!" என்றான் அதட்டல் குரலில் குளக்கரை மனிதன்.

"நின்றோம்.. நீ கேள்வியைக் கேள்" என்றது பூதம். குளக்கரை மனிதன் விழிகளை உயர்த்தி கோபுரந் தாங்கியைப் பார்த்தான்.

(புதிர்கள் நீளும்)

# தண்ணீர் ஊற்றிய குரங்குகள்

அது ஒரு அழகிய கிராமம். அந்தக் கிராமத்தில் தோட்டக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் தோட்டத்தில் உள்ள செடி, கொடிகளுக்கு தண்ணீர் ஊற்றி வந்தான். அவன் தண்ணீர் ஊற்றும் போதெல்லாம் அங்கு சில குரங்குகள் வந்து விளையாடும்.

பல வருடங்கள் அங்கேயே இருந்ததனால், தோட்டக்காரனும், குரங்குகளும் நண்பர்களாக மாறியிருந்தனர். தோட்டக்காரன் செய்யும் காரியங்களைப் பார்த்து பார்த்து குரங்குகளும் அப்படியே செய்து வந்தன.

ஒருமுறை தோட்டக்காரன் பக்கத்து ஊருக்கு ஒரு அலுவலாகப் போக வேண்டியிருந்தது. ஆனால் அப்படிச் சென்றால், செடி கொடிகளுக்கு தண்ணீர் ஊற்ற முடியாமல் போய்விடும். தண்ணீர் ஊற்றாவிட்டால், அவை வாடிவிடும். எனவே என்ன செய்யலாம் என யோசித்தான். அப்போதுதான் அவனுக்கு குரங்குகள் தான் செய்யும் வேலைகளை அப்படியே திருப்பிச் செய்யும் காரியம் நினைவுக்கு வந்தது.

அன்று மாலை வழக்கமாக அவன் செடிகளுக்கு தண்ணீர் விடும் போது, குரங்குகள் விளையாட வந்தன. அவற்றிடம் தான் பக்கத்து ஊருக்குச் செல்லப்போவதையும், இரு தினங்களுக்கு செடிகளுக்கு தண்ணீர் ஊற்ற முடியுமா என்றும் தோட்டக்காரன் கேட்டான்.

இதைக் கேட்ட குரங்களுக்கு ஒரே சந்தோஷம், தோட்டக்காரன் இவ்வளவு பெரிய வேலையை தங்களிடம் ஒப்படைக்கிறானே என்று. எனினும் அவற்றுக்கு ஒரு சந்தேகம்.

"எல்லாம் சரிதான், ஆனால் எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவதென்று எங்களுக்கு தெரியாதே" என்றன குரங்குகள்.

அதற்கு "அதொன்றும் பிரச்சினையில்லை. எந்தச் செடியின் வேர் பெரிதாக இருக்கிறதோ அதற்கு நிறையத் தண்ணீரும், சிறிய வேர் உள்ள செடிக்கு குறைவான தண்ணீரும் ஊற்றினால் போதும்" என்றான். குரங்குகளும் சரியென்று தலையாட்டின. தோட்டக்காரன் நிம்மதியாக வெளியூர்ப் பயணத்தை முடித்துக் கொண்டு தோட்டத்துக்குத் திரும்பினான். வந்தவனுக்குத் தோட்டத்தைப் பார்த்ததும் அதிர்ச்சி. அங்கே எல்லாச் செடி கொடிகளும் பிடுங்கி எறியப்பட்டிருந்தன. அவன் குரங்குகளிடம் "யார் இப்படி செய்தது?" என்று கேட்டான்.

அதற்கு குரங்குகள் "நாங்கள்தான். தண்ணீர் ஊற்றும் போது செடிகளின் வேர் வெளியே தெரியவில்லை. அதனால் எந்தச் செடிக்கு வேர் பெரிது, எதற்கு சிறிது என்று அறிய எல்லாச் செடிகளையும் பிடுங்கிப் பார்த்தோம்" என்று பெருமையோடு கூறின. அதைக்கேட்ட தோட்டக்காரன் அழுவதா? சிரிப்பதா? என்று தெரியாமல் கல்லாய் சமைந்து நின்றான்.



## குட்டீஸ் பரிசுப் போதி - 16

✱ யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனான சங்கிலியனின் சமாதி எங்கே உள்ளது?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி, கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்போதி - 16

முடிவுத்திகதி: 05.11.2016


## குட்டீஸ் பரிசுப் போதி - 14 முடிவுகள்

✱ அன்டோனியோ குட்டரெஸ்

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டவர்.

✱ ஸ்ரீஸ்கந்தராஜா லக்ஷன் / தரம் - 09

யாழ் மத்திய கல்லூரி



# அலம்பல் ஆச்சி

செல்வி

கண்கெட்ட கடவுளே.. உன்ரை இரத்தப் பசிக்கு எங்கடை பிள்ளையின்ரை இரத்தமே தேவைப்படுது? காலங்காலமா வடக்கிலையும் கிழக்கிலையும் எடுத்த பலியெடுப்புக்கள் காணாதே? அதுதானே முள்ளிவாய்க்கால்லை இரத்த ஆறு ஓடிச்சுதே. எட பிள்ளையள்.. அறுக்கையா இருங்கோ அறுக்கையா இருங்கோ எண்டு தொண்ட வறள புறுபுறுத்தேனே.. வேலி இல்லாட்டி வெளியிலை இருந்து மட்டுமில்லையடா உள்ளையிருக்கிற களைகள் கூட எங்களை களையறுக்கும்.. என்ரை கடவுளே, உந்த சண்டையளுக்கை எல்லாம் தப்பி வந்த பெடியள் உந்த அறுவானுகளிட்டை மாட்டுப்பட்டு அநியாயமா தங்கட உயிரை குடுத்துப்போட்டுதுகள். உன்னானை சொல்லுறன் எங்கடை கடவுள்களுக்கு கண்கெட்டுப்போச்சு. கட்டையிலை போற வயசிலை எல்லா கிழடுகளும் கதிரையிலை இருக்க, கதிரையிலை இருக்க வேண்டியதுகள் இரத்தம் சிந்துதுகள். கடவுள்களையும் சொல்லி குற்றமில்லை. மெத்தப் படிச்ச மேதாவியள் விலங்குகளை கொல்லுறது பாவம் எண்டு பலியிடுதலை தடுத்திருக்கினம். இஞ்சை விலங்குகளை கொல்லுறது தான் சட்டப்படி குற்றம். தமிழன்ரை உயிர் சரியான மலிவு. கொலை செஞ்சுபோட்டு விபத்தெண்டு சொல்லுற கூத்தும் எங்கடை நாட்டிலை மட்டும் தான் நடக்கும். உதிலை ஆகப்பெரிய பகிடி என்னெண்டா மேல்வெடி வைக்கேக்கை தான் நெஞ்சிலை குண்டுபட்டுட்டாம் என்டு பாராளுமன்றத்திலை ஒரு கதிரை சொல்லிச்சிதாம். என்ரை கடவுளே எங்கடை ஓராம் ஆண்டு பிள்ளை கூட தண்ணி துவக்கிலை வடிவா சுடும். எல்லாம் எங்கடை விதி.

வடக்கிலை இராணுவம் வேண்டாம் எண்டு சொல்லிக்கொண்டிருந்தம். இப்ப பொலிசும் வேண்டாம் எண்டு சேர்த்து சொல்லுறதே? சிங்களவன் நாட்டை தூக்கி தருவான் எண்டு பார்த்துக்கொண்டிருந்தா, ஒவ்வொருத்தராய் பலி கொடுத்துட்டு நிலத்தையும் தாரைவார்த்து குடுத்திட்டு, கடைசியிலை ஒண்டுக்கிருக்கிற கோடி கூட இல்லாமை நிக்கப்போறம். இவ்வளவு நடந்தும் உந்த நல்லிணக்கவாதியள் அசைஞ்சாங்களில்லை பாருங்கோவன். இன்னும் சில விண்ணனுகள் வீதி ஒழுங்குகள் பற்றி வகுப்பெடுக்கிறாங்கள். திருப்பியும் ஒருக்கா அவங்கடை வீட்டு வாசலை துவக்கு சேங்கு தட்டினாதான் உந்த வகுப்பெடுக்கிற வியாதி போகும் போலை கிடக்கு.. இல்லாட்டி பிக்குகளை கொண்டு வேப்பங்குழையாலை அடிக்க வேணும் போலை தான் இருக்கு. அந்தக்காலம் தொடக்கம் இண்டைக்கு வரை எங்களுக்கு பேரணியும், போராட்டமும், ஊரடங்குச் சட்டமும், கடையடைப்பும் தான் மிஞ்சிக் கிடக்கு. அமைதியான முறையிலை எதிர்ப்பை பதிவுசெஞ்சிங்கள். ஆனா உந்த தொடர் போராட்டத்திலை எனக்கு கொஞ்சம் உடன்பாடில்லை கண்டியளோ! திருப்பியும் பாதிக்கப்படப்போறது நாங்கள் தான். பாதிப்பை அரசாங்கத்துக்கு தான் குடுக்கோணும். அமைதியாலையும், அகிம்சையாலையும் அரசாங்கத்தின்ரை ஒண்டையும் எடுக்கப்போறதில்லை. என்னத்தையெண்டாலும் செய்யுங்கோ. இதிலை ஆகப்பெரிய பகிடி என்னெண்டா, சிங்களவன் இதை தன்ரை அரசியலுக்கு சாதகமா எடுத்திருக்கிறது தான். தமிழர் பகுதிகளிலை கொந்தளிப்பு இருந்தாத்தான் தெற்கிலை உலை அவியும் போலை தான் கிடக்கிது.

இரண்டு பெடியனையும் நினைக்க, நினைக்க தேகமெல்லாம் பதறுது. எத்தினை கனவுகளோடை இருந்திருக்குங்கள். உங்கடை அதிகாரத்தின்ரை ஆட்டங்களுக்கு நாங்களே கிடைச்சனாங்கள்? பல்கலை மாணவர்களாக இல்லாவிட்டால் விபத்தெண்டு சொல்லி விசயத்தை முடிச்சுப்போட்டு, கதிரை, சோடா எண்டு செத்தவீட்டு செலவெல்லாம் பாத்துவிடுவினை. எடபெடியள், ஆச்சியிட்டை சீட்டு எடுத்த கொஞ்சக் காசு கிடக்கு. உந்த பொலிஸ், ஆமியளுக்கு யாழ்ப்பாணத்திலை விபத்து நடந்தா சொல்லுங்கோ. அவையின்ரை செத்தவீட்டு செலவை பார்க்கலாம். உவையின்ரை கதாநாயகத்தனத்தையும் வில்லத்தனத்தையும் சொந்த ஊரிலை காட்டச் சொல்லுங்கோ பாப்பம். அவையின்ரை ஊரிலை அவியாத பருப்பை கொண்டு இஞ்சை வாறது. அதிலை வாள்வெட்டு எண்டு ஒரு இடைச்செருகல். நல்ல வேளையடாப்பா. புலி இருந்திருந்தா, புலியை சுட்டம் எண்டு வலு கெதியா நீதியை வளைச்சிருப்பினம். இப்ப வளைக்கேலாது என்டு சொல்லவரேல்லை. உந்த போராட்டங்கள் எல்லாம் முடிய, அந்த குஞ்சுகளை சனம் மறக்கத்தொடங்க, ஒருமாதிரி நீதியை வளைச்சுப் போடுவாங்கள்.

இதிலை முசுப்பாத்தி என்னெண்டா, மாத்தையா தான். ஆள் சொல்லியிருக்கிது குற்றவாளிகள் விசாரிக்கப்பட்டுத் தண்டனை குடுக்கப்படவேணும் எண்டு. ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுதிச்சுதாம். நடந்த இனவழிப்புக்கே விசாரிக்க விடுறியள் இல்லை. சரி விடுங்கோ. உதுகளை கதைச்சு என்ன பலன். என்னெண்டாலும் அந்த குடும்பங்களின்ரை பொறுப்பு பல்கலை சமூகத்திட்டைத்தான் இருக்கு. வீடுகளிலை அம்மாமாரின்ரை வீட்டடங்கு சட்டம் அமுலுக்கு வந்திட்டுது. வீதியாலை இராணுவம் போனா குலைக்கிற நாய்கள், பொலிஸ் போனாலும் குரைக்கத் தொடங்கிட்டுது. மனிதர்கள் மட்டும் தான் மென்னகையுடன் கடந்துபோயினம்.

(08 ஆம் பக்க தொடர்ச்சி...)

## போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்...

### ஒன்றித்த சேவைக்கு வலியுறுத்தல்

*வன்னியில் யுத்தம் நிலவிய மிகவும் நெருக்கடியான 2007 - 2009 காலப் பகுதியில் கடமையாற்றிய போது பெற்றுக் கொண்ட அறிவு நெருக்கடிகளுக்கு மத்தியில் வளப்பற்றாக்குறைகளுடன் எவ்வாறு செயற்படுதல் என்ற அனுபவ பாடத்தைத் தந்ததாகக் குறிப்படும் இவர் அனைவரும் குழாமாகச் செயற்படுதல் இன்றியமையாதது என்பதை வலியுறுத்தி வருகின்றார். குழாமாகச் செயற்படும் (Team work) போது ஒருவருக்கொருவர் புரிந்துணர்வும் மற்றவரில் அக்கறையும் கொண்டிருப்பார் என்கின்றார்.*

*வைத்தியசாலையில் கடந்த ஆண்டு 36000 இற்கும் மேற்பட்ட சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. சத்திர சிகிச்சையை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள் முதலான பலர் நேரடியாக இணைந்து மேற்கொண்டாலும், ஏதோவொரு வகையில் வைத்தியசாலை ஊழியர்கள் அனைவரும் அதில் பங்களித்திருப்பர். சத்திரசிகிச்சை உபகரணத்தை கொள்வனவு செய்வதில் காரியாலய கணக்காளர், ஊழியர்கள் என்று பலருடைய பங்கு இருக்கும்.*

*வைத்தியசாலை என்பது ஒரு குழாம். அங்கு பணிபுரியும் பாதுகாப்பு உத்தியோகத்தர், சுத்தகரிப்புப் பணியில் ஈடுபடும் ஊழியர்கள் முதலான ஒவ்வொரு ஊழியரும் முக்கியமானவர்களே. வைத்திய சாலையில் பணிபுரியும் ஒவ்வொரு உத்தியோகத்தரதும் பங்களிப்புடனே வைத்தியசேவையானது நல்ல முறையில் நடைபெறுகிறது.*

*“நான் வைத்தியசாலையில் பணிப்பாளராகப் பதவியேற்று ஒரு வருடம் ஆகின்றது. நான் எதிர்பார்க்கும் மாற்றத்தை வைத்தியசாலையில் ஏற்படுத்துவதற்கு 2 ஆண்டுகளாவது தேவை. வைத்திய சாலையில் ஏற்படும் மாற்றமென்பது ஆரோக்கியமான சூழலில் மிகச்சிறந்த வைத்திய சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதாகும். இதனை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து ஊழியர்களின் ஒத்துழைப்புடனேயே நிறைவேற்ற முடியும். கடந்த ஒரு வருடத்தில் வைத்தியசேவையில், பொது மக்களுடனான தொடர்பாடலில் கணிசமான மாற்றம் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பின் அதற்கு வைத்திய சாலையில் பணிபுரிகின்ற அனைவருமே காரணமானவர்கள் ஆவர்.*

*வைத்தியசாலையினைப் பொறுப் பேற்றதில் இருந்து பல்வேறு சவால்கள் அச்சுறுத்தல்கள் வந்தன. இவை எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். நாம் உண்மையாகவும் நேர்மையாகவும் கடவுளுக்கு விசுவாசமாகவும் செயற்படும்போது எமது பணியை சுதந்திரமாக எவ்வித அச்சமும் இன்றி நிறைவேற்ற முடியும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்”*

**- பணிப்பாளர்**

### தடைகள் நடுவே பயணம்

*உயர் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அவர்களைப் போன்று வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்களும் யாழ்ப்பாணத்திற்குக் கிடைத்த ஒரு வரப் பிரசாதம்.*

வடபகுதி மக்களுக்குக் கிடைத்த கடவுளின் நற்கருணையாகிய பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்களை வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப் பல்வேறு வேலை நிறுத்தங்களும், சதிகளும் நடந்தன.

அதையும் தாண்டி இவரது சேவை போதனா வைத்தியசாலைக்கும், யாழ் மக்களுக்கும் பல்லாண்டுகள் கிடைக்க வேண்டும் என்பதே எல்லோரினதும் பேரவா.

## தவறிச்சுடும் சன்னம்

*நிலைதவறிய நாளொன்றின் பின்*
*ஒரு காலை விடிந்திருந்தது.*
*முதல்நாளின் சோகம் இன்னும்*
*தீர்ந்துபோய்விடவில்லை.*
*குருதி தோய்ந்துபோனமண்ணின்*
*ஈரம் இன்னும் காய்ந்திருக்கவில்லை.*


*தெருக்களில் வழமைபோல*
*சனநடமாட்டம்.*
*இயல்பானதாய் கண்களுக்கு*
*தெரியவில்லை.*
*(அ)சாதாரண ரோந்து வாகனங்களும்*
*அந்த தெருக்களில் கலந்திருந்தது.*
*சல்லடையாய் உறுத்தும் பல கண்கள்*
*அங்கு நிறைந்தே இருந்தன.*

*பட்டப்பகல்தான்.*
*உந்துருளியில் செல்கையில்*
*முதுகுவழி மயிர்கூச்சல்*
*எங்கெங்கு சன்னங்கள்*
*குறிவைக்கப்பட்டிருக்குமோ.*

*அந்த*
*கொன்வேய்க்காலம்*
*ஆண்பிள்ளைகளோடு யாரேனுமொரு*
*பெண்பிள்ளையை,*
*பாதுகாக்க அனுப்பிவைப்பார்கள்.*
*அப்போதெல்லாம் வீதிவழி*
*செல்கையில்*
*துடைக்கப்பட்ட துப்பாக்கி*
*முனைகளின் குறி*
*முதுகை நோக்கியதாய்*
*குவிந்தேயிருக்கும்.*

*இன்று அந்த சிந்தனைதான்*
*இழையோடிப்போயிருந்தது.*
*தாவடி தாண்டி குளப்பிட்டி*
*கடக்கையில்*
*ஏதோ ஓர் பதற்றம் ஒட்டிக்கொண்டது.*
*அவர்கள் சுருண்டுகொண்ட ‘அந்த’*
*இடத்தை பார்த்தபடி*
*தாண்டிச்செல்கிறது இந்த பயணம்.*
*இனிவரும் பயணங்களும்*
*இப்படித்தான்.*
*இந்தக்காலை மீண்டும்*
*இருண்டுகொண்டது மற்றுமோர்*
*நாளின் ஆதிக்காய்.*

**கி.பிறைநிலா**




# நீங்களும் எழுதுங்கள்!

‘புதுவிதி’ வாரசஞ்சிகையில் உங்கள் படைப்புக்களும் இடம்பெற வேண்டுமென்று விரும்புகிறீர்களா? தயக்கம் வேண்டாம். சிறுகதை, கவிதை, கட்டுரை, பத்தி எழுத்து, நிகழ்வுக் குறிப்பு எதுவாயினும் எழுதி அனுப்புங்கள். தரமான படைப்புகளுக்கு புதுவிதியில் பிரசுரமாக களம் அமைத்துக் கொடுக்கப்படும். படைப்புகளை தபால்/மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

(03 ஆம் பக்கதொடர்ச்சி...)

# பாலியாறு...

1968 பிறகு இந்தப் பாலியாற்றை வைத்தே நிலாந்தனும் வன்னி மான்மியத்தை எழுதினார். அப்போது நிலாந்தனும் மல்லாவியில்தானிருந்தார். ஏறக்குறைய சந்திரிகாவின் படைகள் வன்னியைக் கைப்பற்றுவதற்காகப் போர் செய்து கொண்டிருந்த 1996, 97, 98, 99 ஆம் ஆண்டுகளில். அங்கிருந்தே "யாழ்ப்பாணமே 'ஓ' எனது யாழ்ப்பாணமே", "வன்னி மான்மியம்" இரண்டும் வெளியாகின. நிலாந்தனுடைய பிள்ளையார் ஓவியங்களும் மல்லாவியில்தான் உருவாகின. அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு, வளவை வளவன் போன்றவர்களும் மல்லாவியில் தானிருந்தனர். அது மல்லாவியின் செழிப்பான காலம். வாழ்வும், வளமும் செழிப்பில்லாதிருந்தாலும் சனப் புழக்கத்தால் ஊர் விளங்கியது.

மல்லாவி புதிய குடியேற்றம் தான், ஆனால், மல்லாவியைச் சுற்றியிருக்கும் பனங்காமம், பாண்டியன்குளம் மாந்தை, தென்னியன்குளம், நட்டான் கண்டல், வலைஞன்கட்டு எல்லாம் பழைய குடியிருப்புகள். அதிலும் பனங்காமம் தனியொரு ராஜ்ஜியப் பிரிவாகவே இருந்திருக்கிறது. கைலைவன்னியன் கடைசியாக ஆண்ட இடம் என்பார்கள். இன்னும் அங்கே பழைய தொல் எச்சங்கள் அங்குமிங்குமாக உள்ளன. தவபாலனும் நானும் இந்தத் தொல்லடையாளங்களைத் தேடி, காடுகளுக்குள்ளால் நடந்திருக்கிறோம். கருங்கற் தூண்களும் சிதைந்த கட்டடங்களின் அடித் தளங்களுமாக, புராதனக் காட்சிகளை மனதில் விரிக்கும். காட்டு வழியே தென்மேற்கில் நடந்தால், மடு. மேற்கே மாந்தை. பனங்காமத்தைப்போலத்தான் தென்னியன்குளமும். தென்னியன் என்ற மன்னனால் கட்டப்பட்ட குளத்தை மையமாகக் கொண்டே அங்குள்ள குடியிருப்பு உள்ளதென்பது ஐதீகம்.

எங்கள் ஊரில் இருந்து சாமிநாதன் என்றொருவர் துணுக்காயில் காணி கிடைத்துப் போயிருந்தார். அவரிடம் போனபோதே மல்லாவி எனக்கு அறிமுகம். பிறகு, தில்லையண்ணை என்கிற தில்லைநாதன் அறிமுகமானார். அவரிடம் போகத்தொடங்கி, அப்பிடியே பலரோடும் பழகி, மல்லாவியும் பழகியது. தில்லையண்ணை ஒரு போராளியாக இருந்தார்.


அது 1980 கள். அதற்குப்பிறகு அவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் சில காலம் இருந்தார். தமிழ்ச் சனங்களுக்கு எதிராக கொழும்பின் தீர்மானங்கள் நீடிக்க, தன்னுடைய சகாக்களோடு தில்லைநாதனும் இணைந்து பதவியைத் துறந்தார். போராளி என்றால் எதையும் இழக்கவும் துயரங்களையும் இழப்புகளையும் ஏற்கவும் தயாராக இருக்க வேணும் என்பார் தில்லையண்ணை. அவர் சொன்ன மாதிரியே, ஒரு நாள் அவரை ஈ.என்.எல்.எவ்:டி இயக்கத்தின் ஆட்கள் கிளிநொச்சியில் வைத்துக் கொல்ல முயன்றனர். படுகாயமடைந்த நிலையில் உயிருக்காகப் போராடி, மிக அபூர்வமாக மீண்டார் தில்லையண்ணை. ஆனாலும் அவருடைய நினைவுகள் எளிதில் மீளவில்லை. அதற்கு நீண்டகாலம் சென்றது.

இதே மல்லாவியில்தான் இப்போது கனடாவில் இருக்கும் பிரதீபா, தான்யா, கற்சுறா என்ற கவிஞர்களும் பிறந்து வளர்ந்தார்கள். கற்சுறாவின் பெரும்பாலான கவிதைகள் மல்லாவியை மையமாகக் கொண்டவையே. அதிலும் கற்சுறாவின் அல்லது யேசுவில் அறையப்பட்ட சிலுவை என்ற கவிதைத் தொகுதியை அவர் சமர்ப்பணம் செய்திருந்தது.

1989 இல் மல்லாவியில் கொலையுண்ட பாடசாலை மாணாவி யமுனா பாக்கிய நாதனுக்கே. கற்சுறா மட்டுமல்ல, கணன் சுவாமியும் மல்லாவிப் பேர்வழிதான். இன்னுமொரு வரையும் இங்கே சொல்ல வேணும். இப்போது திரைக் கலைஞனாக எழுந்து வரும் மதிசுதாவும் மல்லாவியில் ஒரு காலம் இருந்தவரே.

எல்லாவற்றுக்கும் அப்பால் எனக்கு மல்லாவில் இருக்கிற ஒரு உற்ற உறவு, சந்திரன்தான். ஆயிரம் மாடுகளின் அரசன். ஆயிரம் நாமமுடைய அகிலாண்டேஸ்வரி இந்த உலகத்தை அருள் பாலிக்கிறாளோ இல்லையோ. ஆயிரம் மாடுகளை வைத்திருக்கும் சந்திரனால் இந்த உலகம் உய்கிறது என்று சொல்வேன். காடும், மாடும், வேட்டையும், வேளாண்மையும், களிப்பும் கொண்டாட்டமுமான உலகம் அது.





# மலன்

த.அஜந்தகுமார்

அ)

என்னிடம் இருந்த அந்தக் குட்டிச்சைக்கிள் எனக்கு முருகனின் மயில் போன்றது. ஐந்தாம் ஆண்டில் படிக்கும் அந்தச் சைக்கிள் என்னிடம் இருந்தது ஒரு பெரிய கௌரவம் போல் இருந்தது. என்னோட படிச்ச பெடியளில் பெரும்பாலும் நடந்துதான் வாறவங்கள். எனக்கும் நடக்க விருப்பம். கந்தப்பு வீட்டுக் கள்ளு என்னைச் சுவரோட மோதச் சொல்லுது எண்டு சொல்லிக்கொண்டு 'புறும் புறும்' என்று கையை நீட்டி முறுக்கிக்கொண்டு வேலியோட மோதி கறையானைத் தட்டிக்கொண்டு பிறகு நேராய் ஓடியும் நடந்தும் இளைச்சும் பிறகு வெட்டைக்கு வந்து புளியம் பூவை ஆய்ஞ்சும்... கல்லால விழுத்தியும் தின்டிட்டு வீட்ட போறதில ஒரு புளுகம் இருக்கும். சைக்கிள்ளதான் அன்றைக்குப் பள்ளிக்கூடம் போனனான். திரும்பிவரேக்க குமார் நிண்டான்.

"எடேய் நான் சைக்கிள் ஓடட்டே" எண்டான். அவனுக்குச் சைக்கிள் ஓட விருப்பம். அவனுக்குச் சைக்கிள் ஓடவும் தெரியும். மாட்டன் எண்டு சொல்லமுடியாமல் தடுமாறினேன். அவன் ஓடத் தொடங்கினான். என்னைவிட அவன் கட்டை எண்டதால அரைஞ்சு அரைஞ்சு ஓடினான். என்ன அவசரத்துக்கு இண்டைக்கு இவர் என்னோடே வாறார் எண்டு யோசிச்சுக் கொண்டு முழங்கால் இடிபட "கான்ரில்ல" இருந்தன். வெட்டைக்குக் கிட்டப் போக ஏதோ சரியா மணக்கத் தொடங்கியது.

இதென்னெடா மணம் எண்டு மூக்கு முறிஞ்சு போச்சு. இவர் ஏதும் பிலாக்கொட்டை திண்டிட்டு வந்து நசுக்கிப் போட்டாரோ எண்டு நினைச்சன். வெட்டையடியில சைக்கிள நிப்பாட்டினான் குமார், சைக்கிளால இறங்கி விறுவிறுவென்று நடந்து போனான். இதென்னடா அவன்போன பிறகும் மணக்குது எண்டிட்டு சைக்கிளப் பாத்தன். சிவத்தச் சீற்றில தண்ணியப் பூசி மஞ்சள் அரைச்சமாதிரி கிடந்தது. எனக்குக் குமட்டிக்கொண்டு வந்தது. அவன் கண்ணில இருந்து மறைஞ்சான்.

ஆ)

இண்டைக்கு ஏ.எல் சோதினை தொடங்குது எண்டதே காலமை எழும்பும்போதே பெரிய ஆரவாரத்தை ஏற்படுத்தியது. மத்தியானம்தான் சோதினை என்பது கொப்பியை இன்னும் ஒருக்காத் திறந்து பார்க்கலாம் என்ற ஊக்கத்தைத் தந்தது. எல்லாம் படிச்சு முடிஞ்சிது மாதிரியும், முடியாத மாதிரியும் இருந்தது. காலைமையில மெல்லிய இருட்டோட இருக்கிற வெளிச்சம் மாதிரி இருந்தது. அம்மா காலைமையே குசினிக்க ஆரவாரமா இருந்தா. எனக்குச் சோதினை எண்டா அந்த மனிசிக்கும் நித்திரை வராது. எழும்பிக் கொஞ்சத்தாலயே தேத்தண்ணியைத் தந்தா. பல்லுத் தீட்டுற யோசினையே இல்லாமல் குடிச்சன். கொஞ்சத்தால சாப்பாட்டக் கொண்டந்து வைச்சா. பாக்க நாவூறிச்சுது. பால்புட்டு. எனக்குச் சின்னனிலே இருந்தே பால்புட்டு எண்டா சரியான விருப்பம். இண்டைக்கு விருப்பமாச் சாப்பிடட்டும் எண்டு தந்திருக்கிறா. நான் சாப்பிடத் தொடங்கினன்.

குசினிக் கதவோட நிண்டு அம்மா என்னைப் பார்த்துக்கொண்டு நிக்கிறது தெரிஞ்சது. சோக்காத் தான் இருந்தது. எல்லா இடமும் இனிக்கிறமாதிரி இருந்தது. சாப்பிட்டுக் கொஞ்சத்தால எனக்கு வயித்தை முறுக்கத்தொடங்கியது. ஒருக்கா இல்லை நாலும் தரம் எழும்பிப் போய் வந்திட்டன். எனக்கு அம்மாவில கோபம் கோபமா வந்திது. "சுத்துகிறார் அத்தான் சுழலுகிறார் சுப்பற்ற கொல்லயுக்கை" எண்டது மாதிரி நான் சுத்திச் சுழன்றுகொண்டு நிண்டன். கோப்பி போட்டுத் தந்தா. சரிவரயில்ல. மத்தியானம் சோதினைக்குப் போன மாதிரித்தான் எண்ட நினைப்பே இன்னும் வயித்தைக் குலுக்கத் தொடங்கியது. அத்தை சொன்னா அரோட்டுமா எண்டால் நல்லது எண்டு. நானே சைக்கிள எடுத்துக்கொண்டு கிளினன். அரோட்டு மா எல்லா வாசலிலயும் அடைப்பை ஏற்படுத்தி இருக்கோணும். பிறகு ஒரு மூச்சும் இல்ல. சந்தோசமா சோதினைக்குப் போனன். வீட்டில தொடங்கின சோதினை கலக்கிறதில தொடங்கினது. கலக்குவதற்கான நல்ல ஆரம்பமாக அமைந்தது.

இ)

"பெஸ்ற் இயரின்ரை செக்கன்ற் செமிஸ்ரர் எக்ஸாம்" தொடங்கிட்டுது. காலைமை எழுதிப் போட்டு றூமுக்க வந்திருக்கேக்க, போனில வந்த செய்தி தலையைச் சுத்த வைச்சது. மூன்று பேருக்கும் என்ன செய்யிறத எண்டு தெரியேல்ல. சாரங்கன் ஒரு கிறுங்கன். அவன் மட்டும் பல்லக் காட்டிக்கொண்டு நிண்டான். பின்னேரம் இன்னொரு எக்ஸாம் இருக்கிறதாம். "எங்கயடா வாய் பாத்தனாங்கள்" எண்டு நினைக்கவே தலை சுத்திச்சுது. ஒருவரும் ஒண்டும் கதைக்கேல்ல. படிச்ச விசயங்கள் தானே எண்டு மனசைத் தேற்றத் தெரியேல்ல. எனக்கு வயித்தைக் கலக்கிச்சுது. போய் இருந்தன். வாளித் தண்ணியை எடுத்துத் தகரத்திலே எறிஞ்சன். ஒவ்வொரு துளியும் ஒரு சித்திரத்தைக் கீறத் தொடங்கிச்சுது. உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது ஆறுதலாய் இருந்தது. குதிரை மாதிரிக் கிடந்தது. பிறகு குதிரைக்குப் பக்கத்தில சிறகு கிடக்கிற மாதிரியும் கிடந்தது. அந்தச் சிறகு ஒரு பறவையாய் மாறி பல பறவைகளாய் மாறத் தொடங்கியது. ஆக்கள் எல்லாம் மூட்டை முடிச்சுகளோட இடம்பெயர்ந்து போறது மாதிரியும் கிடக்குது. திடீரென்று மழை பெய்யத் தொடங்கியது. என்னடா இது வில்லங்கம் எண்டு பாத்தாத் தகரம் எல்லாம் தண்ணி ஊறி வழிஞ்சு சித்திரங்கள் முழுமையாகக் கரையத் தொடங்கியது. மனம் ஒரு மாதிரிப் போய்விட்டது. மழையுக்க நனைஞ்சுகொண்டு "நேரம் போகுது" எண்டு றூமுக்க ஓடினன்.

ஈ)

இதை எழுதும் போது பெருமாள்முருகனின் 'பீக்கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதி ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்கமுடியவில்லை. மனதிற்கும் உடலிற்கும் இடையில் தீராத முடிச்சுகள் இருந்து கொண்டே இருக்கின்றன. மனம் உடலிலும், உடல் மனதிலும் விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றன. எனினும் சில நெருக்கடிகளில் பாறைக்குள் இருந்து பசிய இலை தலைகாட்டுகின்றன. சமயங்கள் "மலம் அற்றவனாக இரு" என்கின்றன. இறைவனை நிர்மலன் என்றே சொல்கின்றோம். மனிதர்கள் மலனாக இருந்தே ஆகவேண்டும். எனது எமது என்ற உணர்வு முக்கியமானது. அந்த உணர்வு இல்லாததனாலேயே பல இழப்புகளைச் சாதாரணமாகக் கண்டு கொண்டு வருகின்றோம். எல்லாவற்றையும் 'நான்' என்பதுடன் முடிச்சுப்போட்டால் விழிப்பும் எழுகையும் சாதாரணமாக வந்துவிடும். சாதாரணமாகக் கடந்துபோகும் சாத்தானை எம்முடன் அழித்து நான் என்பதில் இருந்து விழிப்புக் காணத் தொடங்கினால் எல்லாவற்றிலும் அக்கறை தொடங்கி விடும். அர்த்தமும் நீண்டிடும்.



# என்று தணியும் கொலைகளின் தாகம்

நோக்கன்

இரவு நேரம் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த இரு இளைஞர்கள், ரோந்துச் சேவையில் ஈடுபட்ட பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ள சம்பவம், வடக்கில் தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. விலை மதிக்க முடியாத மனித உயிர்கள் இரண்டு விலைமதிப்பற்றுப் போயிருப்பது ஒரு சாதாரண விடயமல்ல. இவர்கள் இருவரும் பல்துறை சார்ந்தவர்கள். பல்கலைக்கழக மாணவர்கள். சமூக அடித்தளத்திலிருந்து தமது முயற்சியால் பல்கலைக்கழகம் வரை வந்தவர்கள். இவர்களின் இறப்பு சில துப்பாக்கி ரவைகளினால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது .இந்தக் கொடூரச் சம்பவமானது, தமிழ்பேசும் மக்கள் மத்தியில் மிகவும் உளவியல் ரீதியான ஒரு இறுக்கத்தை ஏற்படுத்தியிருப்பதோடு மட்டுமல்லாது, அவர்கள் தொடர்பான பாதுகாப்பை மென்மேலும் கேள்விக்குறியாக்கியிருக்கிறது.

## சந்தேகங்களின் காலம்

மக்களின் பாதுகாப்பாளர்கள் என்று கருதப்பட்ட பொலிஸாரின் நிலைதொடர்பாக பல ஐயுறவுகளும், சந்தேகங்களும் மக்கள் மத்தியில் ஏற்படத் தொடங்கிய காலகட்டத்தில், இது நடந்திருக்கிறது. இந்தச் சம்பவத்திற்கு ஆயிரம் காரணங்கள், ஆயிரம் விளக்கங்கள், ஒவ்வொரு தரப்பிலிருந்தும் சொல்லப் படுகின்றன. அதுவல்ல முக்கியம். அதற்கப்பால் நின்று கொண்டு, இந்தச் சம்பவத்தை மிகவும் ஆழமாகவும், நிதானமாகவும், ஒரு தொலை நோக்குச் சிந்தனையோடும் பார்க்கவேண்டிய தேவை, நமது மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நாட்டின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரி பால சிறிசேன, பக்கச்சார்பற்றதாக இதற்குரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி இருக்கிறார். அவரின் இத்தகைய கருத்தானது, இதற்கு முன்பாக நடத்தப்பட்ட அத்தனை விசாரணைகளும் பக்கச் சார்புடனேயே நடத்தப்பட்டதாகவே அர்த்தப்படுத்தப்படுகின்றது. அத்துடன் இதனை ஒரு சாதாரண விடயமாகக் கருதி, கடந்து செல்லுமாறும் அறிவுரையை வழங்கியிருக்கின்றனர், சில தென்னிலங்கை அரசியல்வாதிகள். பொலிஸ்தரப்பிலிருந்து பொறுப்புவாய்ந்த பதவிகளிலுள்ளவர்கள் பலர், இச்சம்பவம் தொடர்பாகத் தான்தோன்றித்தனமான கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றனர். இதைக் கடந்த ஞாயிறு தமிழ்பரப்பிலிருந்து வெளியான பத்திரிகைகள் வெளிப்படுத்தியிருந்தன. அவற்றுள் சில பத்திரிகைகள் மிகவும் பொறுப்பற்ற முறையில் தலையங்கங்களைத் தீட்டியுமிருக்கின்றன. அவர்களின் இத்தகைய போக்கிற்கு எமது பலவீனமே காரணமாயிருக்கிறது. சகல மட்டங்களிலும் நாம் பலவீனப்படுத்தப்பட்டிருக்கிறோம். புலனாய்விலும், அரசியல் மதிநுட்பத்திலும் நாம் தோற்கடிக்கப்பட்டுள்ளோம்.

## விலை பேசப்படும் கொலைகள்

வெறியிலை சுட்டுட்டாங்கள் போல, நஷ்டஈடு ,வேலை எல்லாம் தாறம். எங்களை மன்னித்து விடுங்கள். குற்றத்தை மறைக்கப் பொலிஸ் முயற்சி. என்ற தலைப்பில் கடந்த ஞாயிறன்று வெளியான செய்தியின்படி பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்ற பொலிஸ் தரப்பானது, உயிரிழந்த மாணவனின் தாயாரிடமும் மற்றும் குடும்ப அங்கத்தவரிடமும் பல வேண்டுகோளை விடுத்ததோடு மட்டுமல்லாது, உயிர்ப்பலிக்குப் பதிலாகப் பல பேரங்கள் பேசப்பட்ட விபரங்களையும் பத்திரிகையில் காணக் கூடியதாக இருக்கின்றது. எனவே மனித உயிர்களை மலினமாக எண்ணுகின்ற இத்தகைய பொலிஸ் பாதுகாப்பானது எந்த வகையில் மக்களின் பாதுகாவலர்களாகவும், நம்பிக்கைக்குரியதாகவும்இருக்கமுடியும். கடந்தகாலத்தில் நடைபெற்ற இது போன்ற சம்பவங்கள் காவல்துறை மீதும், நீதித்துறை மீதும் ஏராளமான சந்தேகங்களை மக்கள்மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. இத்தகையபோக்கானது வட கிழக்குப் பகுதிமக்களுக்கு மட்டுமல்ல தென்னிலங்கை மக்களுக்கும் ஒரே வித அனுபவத்தை தந்திருக்கின்றது. ஒரு நாட்டில் காவல்துறையும், நீதித்துறையும் அரசாங்கத்தினது கைப்பொம்மைகளாக இயங்கு மேயானால் அதைவிடக் கொடுமை மிக்க சமூக விரோதச் செயல் வேறொன்றும் கிடையாது.

## தாமதிக்கப்படும் நீதி

காணாமல் போனவர்களுக்கான விசாரணைகளிலும், அதன் இறுதி நடவடிக்கைகளிலும், இது போலவே அரசு பேரம் பேசியிருக்கிறதேயொழிய அதற்குரிய சரியான தீர்வை முன்வைப்பதில் எந்தவித அக்கறையும் காட்டவில்லையென்பது எமது கடந்தகால அனுபவம். வடபுலத்தில் முன்னைய காலங்களில் நிகழ்ந்த ஊடகவியலாளர் கொலை தொட்டு அண்மையில் நடைபெற்ற வித்யா கொலை வரைக்கும் விசாரணைகளில் இழுத்தடிப்பும், காலதாமதமுமே ஏற்பட்டு வருகின்றன. இத்தகைய விசாரணைகளில் குற்றத்தை மறைக்கக்கூடிய விதத்தில், நுட்பமான தந்திரோபாயங்களைச் செய்கின்றனரேயொழிய அவற்றில் மக்கள் திருப்திப்படுகின்றவகையில் எந்தவித நேர்மைமிக்க நீதியும் வழங்கப்படவில்லை. இழுத்தடிப்பும் கால தாமதமும் எதிரிபலம் பெறவும், தடயங்கள் சிதைவடையவும், நிரபராதி தண்டனைபெறவும், நீதிமன்றத் தீர்ப்பில் மக்கள் அவநம்பிக்கை கொள்ளவும் வழிவகுக்கும் என்பது பொதுவான கருத்து. தொடர்கதையாயிருக்கின்ற நீதி விசாரணைகள் தாமதிக்கப்படுகின்றன. தாமதிக்கப்படுகின்ற நீதி ஒவ்வொன்றும், மறுக்கப்படுகின்ற நீதியாகவே கருதப்படும். இத்தகைய சம்பவங்களும், அதுதொடர்பான அதிகாரிகளின் பொறுப்பற்ற பேச்சும், அரசுசார்பான அரசியல் வாதிகளின் நடவடிக்கைகளும், பொறுப்பற்ற ஊடகங்களின் செய்தித் திரிபுகளும் தொடர்ந்து மக்கள் மத்தியில் சமாதானத்தை பற்றி அவநம்பிக்கையை ஏற்படுத்துவதோடு நல்லிணக்கம் பற்றிய முன்னெடுப்பினைக் கேள்விக்குறியாக்குவதாகவும் இருக்கும். மக்கள் தமது பாதுகாப்பென்பது கேள்விக்குறியாகலாம் என்று எண்ணுகின்ற பட்சத்தில் அவர்களின் மாற்று நடவடிக்கையென்பது மிகவும் பாரதூரமானதாக மாறிவிடும் அபாயமும் உண்டு.

## இழுத்தடிப்பும் அதிருப்தியும்

ஈனத்திலிருந்து இன்னும் முற்றாக வெளிவராத சமூகத்தில், இத்தகைய தொடர் நிகழ்ச்சிகள் எந்தவித நல்லிணக்கப் பாட்டையும் ஏற்படுத்தப் போவதில்லை. நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்ற நல்லாட்சி அரசானது, கொடுத்த உறுதி மொழிகளை நடைமுறைப்படுத்தாது இழுத்தடிப்புச் செய்வதென்பது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. இதில் முக்கியமானதொன்று பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னமும் தொடர்வது. போர் முடிவடைந்து பல வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், நல்லாட்சி அரசு சொன்னதற்கு மாறாக இன்னும் அந்தச் சட்டத்தை வைத்திருப்பதன் காரணம் அச்சத்திற்குரியதே. இதை வைத்து ஏதோ ஒன்றை அரசு சாதிக்க விரும்புவதாக எண்ணத் தோன்றகிறது. இத்தகைய அரசாங்கத்தின் போக்கிற்கு ஆதரவு தருகின்ற அல்லது துணை போகின்ற தமிழ்தரப்பு அரசியல்வாதிகள் ஒட்டு மொத்தமாக ஒடுக்கப்படுகின்ற மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளை உடையவர்கள். தங்கள், தங்கள் அரசியல் லாபத்தைப் பேணுவதற்காக இவ்வித போக்கைக் கடைப்பிடிப்பவர்களை, அரசுக்கான அனுசரணையாளர்களாகவே மக்கள் அடையாளப்படுத்துகிறார்கள். இதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. இதற்குரிய விளக்கத்தை மக்கள் இவர்களிடமிருந்து எதிர்பார்க்கவுமில்லை. மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பு என்னவெனில் அமைதியான வாழ்க்கை மட்டுமே. அதற்குரிய முன்னேற்பாடாக தமிழ்ப் பகுதியில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும். தமிழர்கள் முன் வைத்துள்ள அரசியல் தீர்வுக் கோரிக்கை தொடர்பாக அரசு பக்கத்திலிருந்து எழுகின்ற மறுப்பும் அது தொடர்பான எதிர்கருத்துகளும் நிறுத்தப்பட வேண்டும். தீர்வைத் தட்டிக் கழிக்கின்றதைப் போன்ற மறைமுகச் சிந்தனைகளில் அரசாங்கம் நம்பிக்கை வைக்காது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக மாற வேண்டும். அப்போது மட்டுமே நல்லிணக்கத்திற்குரிய ஆரம்பம் ஏற்படலாம்.

## ஆயுதம் மட்டுமல்ல ஒற்றுமையும் பலம் தான்

தமிழ் மக்களின் பாதுகாவலர்களெனச் சொல்லிக் கொள்கின்ற அரசியல்வாதிகளினது பலவீனமும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. எங்களுடைய தலைமை பலம் பெற்றிருந்த காலங்களில் எதிரியின் நடவடிக்கை எத்தகையதொன்றாக இருந்திருக்கின்றதென்பதைச் சற்று சிந்திப்போமானால் நிகழ்காலம் எமக்கு நன்கு தெளிவாகும். ஆயுதத்தால் மாத்திரமே எதிரியை அச்சுறுத்தச் செய்யலாமென்பதைவிட, பலமான இன ஒற்றுமையாலும் அதனைச் சாதிக்கலாம் என்பது இன்னும் நமக்குப் புரியாத விடயமாகவே இருக்கிறது. அயல் அரசியலுக்கும், சுயலாபத்திற்கும் விலை போகாத, மக்கள் காப்பாளர்களாக அரசியல்வாதிகள் மாற வேண்டும். தமிழ் மக்கள் நலன்களில் அக்கறையுள்ள, பலமுள்ள தலைமைகளால் மாத்திரமே இத்தகைய தொடர் நிகழ்ச்சிகளாக நடைபெறும் பொதுமக்களைக் காவு கொள்ளும் நடவடிக்கைகளை நிறுத்தி, நிரந்தரத் தீர்வொன்றையும் பெற்றுத்தர முடியும் என்று தமிழ்தரப்பு நம்புகிறது.





# கவிதைகளும் நானும்

## 'கலாபம்' கவிதைத் தொகுதியின் நூலாசிரியர் மகேந்திரன் கலையரசியுடனான நேர்காணல்

நேர்காணல்: லுணுகலை-ஸ்ரீ

**கேள்வி:** 'கலாபம்' தொகுதி பற்றி கூறுங்கள்?

**பதில்:** 'கலாபம்' என்னுடைய முதல் பிரசவம். நான்கு வருட இலக்கிய தவத்தில் நான் பெற்ற வரம், நாற்பத்து நான்கு கவிதைகளை உள்ளடக்கி ஜனனித்திருக்கிறது. கலாபப் பக்கங்களை முடிந்த வரை நிரப்பியிருக்கிறேன். எல்லாவற்றையுமல்ல, சமூக நலன் கருதுகிற எல்லை வரை திரையை விலக்கியிருக்கிறேன். மலையக இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் தவழும் குழந்தை நான். என் கன்னி முயற்சியில் மலர்ந்த இக்கலாபம் "வாசகர் மனதைச் சென்றடைந்துவிடும்" என்ற நம்பிக்கையின் வீரியத்தோடு எனது பயணம் இனியும் தொடரும்...

**கேள்வி:** இலக்கியத்தில் எப்போது ஈடுபாடு ஏற்பட்டது?

**பதில்:** சிறுவயது முதலே தமிழ்மொழியில் நிறைய ஆர்வம் இருந்தது. அதற்குக் காரணம் எனக்குக் கிடைத்த என்னுடைய தமிழ் பாட ஆசிரியர்கள் தான். நினைவு தெரிந்த வரை தரம் 6 - 11 வரை திரு.சாம்பசிவ மூர்த்தி ஐயா அவர்கள். தமிழ்ப் பாடம் கற்பித்தார். அவருடைய கற்பித்தல் முறைதான் என்னுடைய தமிழார்வத்திற்கு முதற்காரணம். நான் என்னுடைய பதினறாவது வயதிலேயே இலக்கியம் படைக்கத் தொடங்கிவிட்டேன்.

அதன் பிறகு க.பொ.த உயர் தரத்தில் கலைப்பிரிவை தேர்ந்தெடுத்தேன் இது என்னுடைய இலக்கியப்பணிக்கு கைகொடுத்தது. உயர் தரத்தில் என்னுடைய தமிழ்ப்பாட ஆசிரியராக இருந்தவர் திருமதி.அருள்மொழி செல்வன் ஆசிரியை, தற்போது ஆசிரிய ஆலோசகராக செயற்படுகின்றார். என்னுடைய கவித்திறனைக் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்த பெருமை அவரையே சாரும். 2009 ஆம் ஆண்டு செனன் பாடசாலை அதிபராக திரு.பரமநாதன் ஐயா அவர்கள் கடமையாற்றிய போது என்னுடைய கவிதை சாகித்திய விழாவில் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தைப்பெற்றது. 2011 ஆம் ஆண்டு செனன் பாடசாலை அதிபர் திரு.சண்முக நாதன் ஐயா அவர்களின் காலத்தில் என்னுடைய கவிதை தமிழ்தின போட்டியில் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தை பெற்றுக்கொண்டது. இவ்வாறு போட்டிகளில் என்னுடைய கவிதை இடம் பிடித்த போதுதான், அதன் மீதான ஆர்வம் அதிகமாகியது. தொடர்ந்தும் எழுத வேண்டும் என்ற அவாவும் என்னுள் குடிகொண்டது. என்னுடைய ஒவ்வொரு வெற்றியிலும் எனது அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் தொடர்ந்து உற்சாகப் படுத்தினார்கள். என்னையும் என் திறமையையும் வளர்த்து விட்ட எனது பாடசாலைக்கு இச் சந்தர்ப்பத்தில் சிரம் தாழ்த்தி நன்றி நவில்கிறேன்.

**கேள்வி:** எதற்காக கவிதை எழுதுகிறீர்கள்?

**பதில்:** ஆரம்பத்தில் போட்டிகளுக்காக எழுதினேன். பிறகு பயிற்சிக்காகவும், பொழுது போக்கிற்காகவும் எழுதினேன். எழுதிய கவிதைகளை இணையத்தளத்தில் பதிவு செய்தேன். இணையத்தில் எனது கவிதைகளுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. வலைத்தள நண்பர்கள் என்னுடைய கவிதை பற்றிய அவர்களுடைய கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். தமிழ் வளர்க்க, இலக்கியம் வடிக்க நிறைய ஆர்வலர்கள் இருப்பதை உணர்ந்து என்னால் முடிந்ததை என் எழுத்தின் மூலம் என் மலையகச் சமூகத்திற்குச் சொல்ல நினைத்தேன் எழுதத் துணிந்தேன்.

**கேள்வி:** மலையக பேச்சு வழக்கு சொற்களை அதிகமாக கையாள்கிறீர்கள் அதற்கான விசேட காரணம் ஏதுமுண்டா?

**பதில்:** மலையகப் பெண் என்ற ரீதியில் மலையகம் மீதான பற்று என்னிடம் அதிகமாக உண்டு. மற்றும் மண் வாசனை மிகுந்த கவிதை வடிப்பதில் எனக்கு நிறைய ஆர்வமுண்டு. எழுதும் போது கூடத் தடுமாற்றம் ஏதுமின்றி மலையகப் பேச்சு வழக்குச் சொற்கள் என் பேனை முனை வழி தாளில் விளையாடும். கற்றோர் மட்டுமன்றி, கல்லாதோரும் கவி இரசிக்க வேண்டுமென்ற எனது அபிலாசையும் இதற்கொரு காரணமாகச் சொல்லலாம்.

**கேள்வி:** இந்தத் தொகுதி வெளிவர உங்களுக்கு உறுதுணையாய் இருந்தவர்கள், அமைப்புகள் பற்றி சொல்லுங்கள்?

**பதில்:** இந்தத் தொகுதியின் வரவிற்கு எத்தனையோ நல்லுள்ளங்கள் என்னுடன் சேர்ந்து பயணித்தன. செனன் பாடசாலை, பொஸ்கோ பாடசாலை, வெப் ஸ்டார் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் என்னுடைய இத்தொகுதி வெளியீட்டு விழாவிற்குப் பெரும் பங்காற்றினர்.

இந்நூலின் உருவாக்கத்திற்கு உறுதுணையாய் நின்றவர்கள் என்று பார்த்தால் பட்டியல் மிக நீளமானது..

திரு.திருமதி.அருள்மொழி செல்வன் ஆசிரிய ஆலோசகர், எழுத்தாளர் லுணுகலை ஸ்ரீ, பெருவிரல் இயக்கத் தலைவர் சுதர்ம மகாராஜன், எழுத்தாளர் சிவனு மனோகரன், ஆசிரியர் பிரேம் குமார், ராஜசேகர், ஞூபாகரன், செந்தில் குமரன், ஜெலுஷன், சுரேஸ்குமார், கென்னடி, ராம், நெவில் இன்னும் பெயர் குறிப்பிடாத பல நல்லுள்ளங்கள் மற்றும் எனது பெற்றோர் சகோதர, சகோதரிகள், நண்பர்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் உறுதுணையாய் இருந்தது.

**கேள்வி:** உங்களின் நிச்சயதார்த்த நிகழ்வன்றே 'கலாபம்' நூலையும் வெளியிட்டீர்கள் இதில் நீங்கள் சந்தித்த சவாலாக எதை கூறுவீர்கள்?

**பதில்:** இல்லறமா? இலக்கியமா? என்று வருகையில் அன்றைய தினம் எனக்கு இரண்டுமே பெரும் சவாலாக இருந்தது. அன்றைய தினம் எனக்குக் கண் அறுவை சிகிச்சை செய்வது போன்றதோர் உணர்வு... நூல் வெளியீட்டிற்கு முன்பதாகவே, நிச்சயதார்த்தம் முடிந்தது பெரும் உற்சாகமளித்தது.. என்னுடைய கணவர் மற்றும் குடும்பத்தினர் எனக்காக நேரத்தை ஒதுக்கிக் கடைசி வரையில் ஒத்துழைப்பு வழங்கினர். அதேவேளை மண்டப ஆயத்த வேலைகளை ஆசிரியர்கள், நண்பர்கள் செய்து ஒழுங்குபடுத்தினர். எல்லோருடைய ஒத்துழைப்பிலும் அன்றைய தினம் வெற்றிகரமாக முடிந்தது.. ஒரு பெண்ணாக ஒரே நாளில் இரு சவால்களை எதிர்த்து வெற்றி கண்டதில் பெருமிதம் அடைகிறேன்.

**கேள்வி:** கவிதை தவிர்ந்த ஏனைய கலை இலக்கிய துறையில் ஈடுபாடு உண்டா? அது குறித்து கூறுங்கள்?

**பதில்:** கவிதை தவிர்ந்த இலக்கிய மென்றால் சிறுகதை, கட்டுரைகளில் ஆர்வமுண்டு. பல கட்டுரைப்போட்டிகளில் சான்றிதழ் பெற்றுள்ளேன். என்னுடைய முதல் சிறுகதை என் தோழியை அழச் செய்துவிட்டது. சாவித்திரி எனும் தலைப்பில் கணவனை இழந்த மனைவி மற்றும் மகள் இச்சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிக்கூறி நகர்ந்து செல்வதாய் அமைந்திருந்தது. ஓவியம், சுவரோவியம் வரைவதில் பிரியமுண்டு. நடனம், பாடுதல், நிகழ்ச்சி தொகுத்து வழங்குதல். இன்னும் பல துறைகளில் ஈடுபாடு உண்டு. அதற்கான பட்டியலை கூறினால் தற்பெருமையாகிவிடும் என்பதால் அதனைத் தவிர்க்கிறேன்.

**கேள்வி:** தங்களைப் போல் கவிதை எழுதுபவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:** அன்பு நண்பர்களே....! எழுதிக் கொண்டேயிருங்கள் உண்மையை உரக்க, உடைத்துச் சொல்லுங்கள். இலைமறை காய்களாய் உங்கள் எழுத்துக்களை மறைத்திடாதீர்கள்.. வெளி உலகிற்கும் உங்கள் எண்ணங்களை திரை விலக்கி காட்டுங்கள். உங்கள் திறமைகளை வெளிக்கொணர நிறைய ஆர்வலர்கள் இருக்கிறார்கள். உங்களை இம் மண்ணிற்கு அடையாளப்படுத்துங்கள். மலை இலக்கியம் வளர்ப்பதில் இனியும் தாமதம் வேண்டாம்....



## மாயாவின் டயரி

களைத்துப்போன விழிகளோடு மரத்துப்போன இந்த இரவுகளை வரவேற்றுக் கொண்டிருக்கிறேன். எம் வழியெங்கும் வலிகளைக் கொட்டி வைத்த காலம் அறியுமா எம் கண்ணீரை? அச்சத்தின் போர்வை போர்த்திய எங்கள் தெருவெங்கும் எங்கள் காலடித் தடங்களை அழித்துக் கொண்டிருக்கின்றது.

இந்தப் பொல்லாத மழை. ஆவியிழந்து போன எம் மானுடத்தின் உடல்களைச் சூழ இருப்பதென்னவோ அதிகார அரண்கள் தான். எதை நினைத்தழுவதென்று தெரியவில்லை.

ஒரு புறம் நாம் தெரிந்தே அழிந்து கொண்டிருக்க மற்றொருபுறம் நம்மையறியாமலே நம் வாழ்க்கை அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நாம் ஒரே நேரத்தில் ஆதிக்கவாதிகளாகவும் அடக்குமுறைக்கு உட்படுபவர்களாகவும் இருந்து கொண்டிருக்கின்றோம். இத்தகைய நகைமுரண் நிலைதான் நாம் மேலெழ முடியாமல் எம்மைப் படுகுழியில் தள்ளிக் கொண்டிருக்கின்றது. இது இவ்வாறு இருக்க நம்மிடையே எத்தனை பேர் சமூகநலனில் அக்கறை கொண்டு நடக்கின்றோம். குன்றுந்த பட்சம் சமூகவிடயங்கள், அன்றாடச் செய்திகள், அரசியல் நிலைமைகள் இவற்றையெல்லாம் சமையலறை தொடங்கி படுக்கை அறை வரை பெண்களாகிய நாம் விவாதிக்கவோ அல்லது அதைப் பற்றி பேசவோ முனைப்பிருந்தாலன்றி சமத்துவம், சம உரிமை, பற்றி கதைப்பதற்கு அருகதையற்றவர்கள் ஆகிவிடுகின்றோம்.

எங்கள் தெருவிலே, எம் அன்னையின் புதல்வர்கள் இருவர் மரித்துக் கிடக்கின்றனர். அவர்களின் பயங்கரமான மரணத்தை எண்ணி, ஒரு புறம் அனைவரும் கதறியழுதாலும் மறுபுறம் தொலைக்காட்சித் தொடர்களில் வரும் கதாநாயகிகளுக்காகக் கண்ணீர் வடித்துக் கொண்டு சமூகத்தின் நிலையறியாது இருக்கின்ற பெண்களும் நம்மில் பலர் இருக்கின்றோம் என்பது மறுக்க முடியாது.

நம் எதிர்காலம் நம் முன்னே பட்டுப் போய்க்கொண்டிருக்கின்றது. நாம் சூனிய வளையத்துக்குள் சென்று கொண்டிருக்கின்றோம். நம் இருப்பென்பது கேள்விக் குறியாகிக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் நாம் தொலைக்காட்சித் தொடர்களுக்குள் தான் மூழ்கிக் கொண்டு இருக்கின்றோம். வெளியே வாருங்கள் சகோதரிகளே! நேற்றுத் தொலை தெருவில் நிகழ்ந்தது நாளை நம் தெருவில் நம் சகோதரர்களுக்கும் நிகழக் கூடும். அதற்காகவேனும் நாம் குரல் கொடுக்க வேண்டும். சமத்துவம் என்பது தடைகளிலும், தேர்வுகளிலும், சுதந்திரத்திலும் மட்டுமல்ல போராட்டத்திலும் இருக்க வேண்டும் சகோதரிகளே.

போராட்டம் என்பதை பெண்கள் நாம் அறியாதவர்களா? மனிதத்தை தாங்கி நிற்கும் பெரும் தூண்கள். நாம் வெளியில் வந்து குரல் எழுப்பாதவரை நம் குரல்கள் தொலைக்காட்சித் தொடர்களுக்குள்ளும் விளம்பரப் படங்களுக்குள்ளும் புதைந்து போய்விடக் கூடும். அதற்காகவேனும் நாம் நமக்கென நம் சமுதாயத்துக் கென குரல் கொடுக்கத் துணிவு கொள்வோம்.

ஓலமிட்டுக் கொண்டிருந்த மழை ஓய்ந்து போய்க் கொண்டிருக்கின்றது. மீண்டும் ஒரு இடி மின்னல் இந்த விருட்சங்களை அச்சுறுத்தக்கூடும் இருப்பினும் நாம் நம்பிக்கையை கைவிடாதிருப்போமாக.

இந்த இரவுகள் கழியும்
காலையொன்றொன்று புலரும் இருளின்
நடமாட்டத்தை மீறி துலங்கும் நம் விடியல்

# கடகம்



[illegible]

[illegible]

[illegible]


# வில்லுப்பாட்டு



எம்முடைய நாட்டுப்புறக் கலைகளில் மிகச் சிறந்தது வில்லுப்பாட்டு.வில்லுப்பாட்டில் குறைந்தது ஐந்துபேர் இருப்பர். வில்லுப்பாட்டில் கதைப் பாடல்களைப் பாடிக் காட்டுவார்கள். தலைவர் ஒருவர் கதையைப் பாட்டாகக் கூறிச் செல்லும் போது விளக்க வேண்டிய இடத்தில் விளக்கி உரை நடையாக கூறுவார்கள். தெய்வங்களின் வரலாறு, தெய்வ நிலை பெற்ற வீரர்களின் வரலாறு, அரசர்களின் வரலாறு இவற்றை மக்களுக்கு எடுத்துக் கூறவே வில்லுப்பாட்டு பயன்பட்டது.

விழாக்களில் பாடப்பட்ட வில்லுப்பாட்டு கடந்த தசாப்தங்களில் இலக்கியத்திற்கும் அரசியலுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சமுதாயச் செய்திகளை உரையாட வில்லுப்பாட்டை கையாளும் வழக்கமும் இருக்கின்றது. அரசியல் சமுதாயத் தலைவர்களின் வரலாறுகள் வில்லுப் பாட்டில் இடம் பெறுகின்றன. முன்பு வில்லுப்பாட்டு என்பது சமூகக் கொண்டாட்டமாக இருந்தது இன்று நவீன கலைகளின், வெளிநாட்டு கலைகளின் வருகை வில்லுப் பாட்டை மக்களிடமிருந்து தூரமாக்கியுள்ளது. சின்னமணி போன்ற உலகின் மிகச் சிறந்த வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் இலங்கையில் இருந்துள்ளனர். அவர்களின் பின் அடுத்த தலைமுறையில் கணிசமான அளவிலான இவ் வில்லுப்பாட்டின் அழகியலையும் நுட்பத்தையும் உணர்ந்து வில்லுப்பாட்டு ஆற்றுகைகளை மேற்கொண்டுள்ளனர்.

# தாக்கத்தி



எம்முடைய விவசாயப் பண்பாட்டில் கண்டறியப்பட்ட கருவிகள் கடந்தகால மரபுரச் சொத்துகளாக கருதப்படக்கூடியன. இன்று இயந்திரங்களின் வருகையைத்தொடர்ந்து எம்முடைய மக்கள், புதிய இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர்.

கால மாற்றத்திற்கு அமைவாக மாறினாலும், கடந்த காலத்தின் பண்பாட்டை மறத்தல் ஆரோக்கியமானதன்று. அவ்வகையில் இன்றும் சிறுபான்மையளவில் பண்டைய கருவிகளை பயன்படுத்துவோர் உள்ளனர்.

குறிப்பாகத் தாக்கத்தி, அல்லது அருவி வெட்டும் கத்தி என்று அழைக்கப்படும் அறுவடைக்கான கருவி முக்கியமானது. நெல், சணல் முதலிய பயிர்களை அறுவடை செய்ய விசேடமாக இலகு கையாள்கைக்காக வடிவமைக்கப்பட்டவை இவ்வகைக் கத்திகள். பழைய அறுவடை நாட்டார் பாடல்களில் இவ்வகைக் கத்திகள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

# களையோடை அம்மன்



யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் நவாலி எனும் ஊரில் களையோடை பிட்டியம்மன் கோவில் உள்ளது, கண்ணகியின் தொன்மக் கதையுடன் தொடர்புபட்ட இவ் அம்மன் கோவில் வயல் வெளியொன்றில் உள்ள மணல் பிட்டியில் அமைந்துள்ளது. கண்ணகி களைப்போடு அவ்விடத்திற்கு வந்த போது அவள்தாகம் தீர்க்க தன் காலை ஊன்றி நீரூற்றொன்றை உருவாக்கியதாகவும் அவ் நீருற்று இப்போதும் ஒரு கிணற்று வடிவில் பாதுகாப்பதாகவும் அக்கோவிலின் கதைகள் குறிப்பிடுகின்றன. இவ் அம்மன் கோவிலின் அருகில் வழுக்கியாறும், கேணிகளும் ஆவுரஞ்சிக் கற்களும் உள்ளன. இவ் மருத நிலக்கோவில் அப்பிரதேசத்தின் வழிபாட்டு தலமாக மட்டுமன்றி மரபுச் சொத்தாகவும் காணப்படுகின்றது.

(15 ஆம் பக்க தொடர்ச்சி...)

# சூடு!! அவிழத்தொடங்கும் மர்ம முடிச்சுக்கள்



## முற்றுகைக்குள் பிரேத பரிசோதனை அறை

உயிரிழந்த மாணவர்களின் உடல்கள் மீது உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்போது தமது பிரதிநிதிகள் இருவர் அந்த இடத்தில் பிரசன்னமாகி இருக்க வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். எனினும் மருத்துவமனை நிர்வாகம் இதற்கு சம்மதிக்க வில்லை. ஆயினும் மாணவர்களும் விடுவதாக இல்லை. வெறுமனே பார்வையாளர்களாக தங்களை உடற்கூற்றியல் பரிசோதனை செய்யும் சமயத்தில் அனுமதிப்பதில் என்ன பிரச்சினை வந்துவிடப்போகிறது என்று அவர்கள் கேட்டார்கள். நீண்ட நேர இழுபறிக்குப் பின்னர் இரண்டு மாணவர்கள் பிரேத பரிசோதனை செய்யும் இடத்தில் இருப்பதற்கு மருத்துவ் மனை நிர்வாகம் சம்மதித்தது. ஆயினும் பிரேத பரிசோதனை செய்யும் நிபுணர்கள் அந்த அறைக்குள் சென்றதும் கதவுகள் பூட்டப்பட்டதால் மாணவர்கள் மத்தியில் குழப்ப நிலை தோன்றியது. தம்மை வெளியேற்றிவிட்டு உடற்கூற்றுப்பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றதோ என மாணவர்கள் சந்தேகப்பட்டார்கள். எனவே பிரேத பரிசோதனை செய்யப்படும் அறையின் கதவுகளைத் தட்டத் தொடங்கினார்கள்.

## எட்டிப் பார்க்காத துணைவேந்தர் கலைந்து போக சொன்னார்

மாணவர்கள் கதவைத் தட்டத் தொடங்கியதால் மருத்துவர்கள் நிலமை மோசமாகுமோ என்று அஞ்சினார்கள். எனவே உடனடியாக அவர்கள் பல்கலைக் கழகத் துணை வேந்தரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள்.

இதுவரை நேரமும் மாணவர்களின் கொலை குறித்தோ அல்லது அது சம்பந்தமாக ஏனைய மாணவர்கள் வைத்தியசாலை வளாகத்தில் கொட்டும் மழைக்குள்ளும் போராட்டம் நடத்துவது குறித்தோ எந்தவித அக்கறையும் காட்டாது இருந்தார் துணை வேந்தர் திருமதி வசந்தி அரசரட்ணம். "ஒருவேளை சிங்கள மாணவர்களுக்கு காலில் ஏதும் முள்ளுக் குத்தியிருந்தால் அவர் ஓடோடி வந்திருப்பார்" என்று மாணவர்கள் வெறுப்பாகப் பேசிக் கொண்டார்கள். அப்படிப்பட்ட துணைவேந்தர் மருத்துவர்கள் நிலமையைச் சொன்ன போது மாணவர்களைக் கலைந்து போகுமாறு தான் அறிவித்ததாகச் சொல்லச் சொன்னார்.

ஆனால் மாணவர்கள் அதற்கு உடன்படவில்லை. இறுதியில் பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் இரு மாணவர்களும் இறந்தவர்களின் பெற்றோரும் உள்ளே சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டார்கள்.




## ஓரே நேரத்தில் வெளிவந்த மரணவிசாரணை அறிக்கையும், பொலிஸ் அறிக்கையும்

மிக நீண்ட நேரத்தின் பின்னர் எல்லோரும் எதிர்பார்த்திருந்த மரண விசாரணை அறிக்கை வெளிவந்த அதே நேரத்தில் பொலிஸ் தலைமையகத்தில் இருந்தும் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. இரண்டு அறிக்கைகளும் மாணவர்கள் பொலிஸாரின் சூட்டுக்கு இரையாகியே பலியானார்கள் என்று உறுதிப்படுத்தின. அதுவரை நேரமும் விபத்திலேயே மாணவர்கள் உயிரிழந்தார்கள் என்று சொல்லிக்கொண்டிருந்த பொலிஸ் தரப்பு மருத்துவ அறிக்கை வெளிவர முன்னரேயே எப்படி திடீரென தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது? எப்படியும் மரண விசாரணை நீதியாக மேற்கொள்ளப்பட்டால் துப்பாக்கிச் சூட்டால் மாணவர்கள் உயிரிழந்த விவகாரம் பட்டவர்த்தனமாகி விடும். எனவேதான் முந்திக்கொண்டு விசாரணை அறிக்கை வெளிவருவதற்கு சில நிமிடங்கள் முன்னதாகவே மாணவர்களைச் சுட்டுக்கொன்ற 5 பொலிஸாரையும் கைதுசெய்துவிட்டதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

இதன் மூலம் ஒருவிடயம் தெளிவாகப் புலனாகின்றது. அதாவது மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட உடனேயே அது குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் உடனடியாக மேலதிக பொலிஸார் அனுப்பப்பட்டு தடயங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் சில தடயங்களை பொலிஸாரால் அழிக்கமுடியாது போய் விட்டது. கடந்த புதன்கிழமை மீட்கப்பட்ட வெற்று ரவைக்கோதும், சுலக்சனின் உடலில் பாய்ந்திருந்த சன்னங்களும் பொலிஸாருக்கு எதிரான வலுவான சாட்சியங்களாக மாறின. எனவே பின்னர் வேறு வழியின்றி பொலிஸ் தலைமையகத்திற்கும் இரவோடு இரவாக மாணவர்கள் கொல்லப்பட்ட செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் ஏதாவது செய்து மரண விசாரணை அறிக்கையை மாற்றி விடலாம் என்ற நம்பிக்கையோடுதான் யாழ்.பொலிஸ் தலைமையகம் மாணவர்களின் கொலையை விபத்து என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தது. எனினும் மாணவர்களின் போராட்டத்தால் எந்தவித மோசடி வேலையையும் செய்ய முடியாது போனமையால் நல்ல பிள்ளைகள் போல பொலிஸ் தலைமையகம், மாணவர்களைச் சுட்டுக்கொன்ற பொலிஸாரைக் கைதுசெய்துவிட்டதாக அறிவித்தது. உண்மையில் குறித்த ஐந்து பொலிஸாருக்கு மாத்திரமே மாணவர்களைச் சுட்டுக்கொன்ற விவகாரம் தெரிந்திருக்கும் என்றால் யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி வரிந்துகட்டிக்கொண்டு அது விபத்துத்தான் என்று சொல்லியிருக்க மாட்டார். மாறாக அது குறித்து விசாரணை செய்யவே முனைந்திருப்பார். அவ்வாறில்லாமல் எடுத்த எடுப்பிலேயே அது விபத்துத்தான் என்று அவர் கூறியதில் இருந்தே கொலைகளை மறைப்பதில் அவருக்கும் முக்கியமான பங்கு இருப்பதை உணர்த்தி விட்டார்.

## சுட்டது தமிழ் பொலிஸா?

மாணவர்களைச் சுட்டதாக கைது செய்யப்பட்ட பொலிஸாரில் நான்கு பேர் சிங்களப் பொலிஸார் ஒருவர் தமிழர். அவரும் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர். எனினும் அவரது பெற்றோரில் ஒருவர் பெரும்பான்மை இனத்தவர். இந்த நிலையில் மாணவர்களைச் சுட்டது தமிழ்ப் பொலிஸ்தான் என்றும் ஒருகதை உலாவுகின்றது. ஆனால் பொலிஸாரிடம் பெற்ற உள்ளகத் தகவல்களின் படி சிங்களப் பொலிஸாரே இந்தச் சூட்டுச் சம்பவத்தோடு நேரடியாகத் தொடர்பு பட்டுள்ளார்கள்.


## குடிபோதையில் சுட்டார்களா?

"இதேவேளை பொலிஸார் வெறியில் சுட்டுவிட்டார்கள்" என்று இன்னொரு பொலிஸ் அதிகாரி உயிரிழந்த மாணவன் ஒருவரின் குடும்பத்துக்குச் சொல்லியிருக்கிறார். இந்தக் கூற்றும் ஆராயப்பட வேண்டிய ஒன்றே. வழக்கமாக இரவு நேர ரோந்தில் ஈடுபடும் பொலிஸார் உரிய ஆவணங்கள் இன்றி பயணிக்கும் பலரிடம் பணம் மாத்திரம் அல்லாது மதுபான வகைகளையும் கேட்டு வாங்குவது வழமை. அப்படிக் கையூட்டாகப் பெறப்படும் மதுபான வகைகளை தமது கடமை முடிந்து பொலிஸ் நிலையத்துக்குச் செல்ல முன்னர் குடித்துவிட்டுப் போவார்கள் என்று பொதுமக்கள் சொல்வதுண்டு. அப்படித்தான் அன்றைக்கும் அவர்கள் மதுபோதையில் நின்றிருக்கலாம். அதனால் தான் காலுக்கும், கழுத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருக்கலாம். என்னதான் சொன்னாலும் மாணவர்களின் கொலை தற்செயல் நிகழ்வல்ல. அது திட்டமிட்ட கொலை என்பதே உண்மை.

இந்த இரட்டைக் கொலைக்கு நீதி தேடி பல்கலைக் கழக மாணவர்களும் மக்களும் போராடத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் நீதி கிடைக்குமா என்பதில்தான் நிச்சயமின்மை நிலவுகின்றது. கடந்த கால வரலாறுகள் எமக்கு அதிகம் தந்துவிட்டுச் சென்றது அவநம்பிக்கைகளே. அது சுலக்சன், கஜன் விடயத்திலும் தொடரக்கூடாது.

முனைவர் ஜெ.அரங்கராஜ்

# பௌத்தமும் ஈழமும்



ஆனால், தமிழரின் தாயகங்களில் இருந்து பௌத்தம் தங்களுக்கு வந்தது என்று சொல்வதைச் சிறுமையாகக் கருதிய சிங்களவர்கள் புத்தர் ஆகாயமார்க்கமாக வந்தார். மகிந்தர் பாடலிபுத்திரத்திலி ருந்து வானமார்க்கமாக வந்தார் என்பனவாக எழுதிவிட்டனர் என்று மயிலை. சீனி. வேங்கட சாமி குறிப்பிடுவார்.

பௌத்தத் தமிழர்கள் எழுதிய தமிழ் நூல்களைச் சிங்களவர் படித்தார்கள் என்பதற்கும், அவற்றைச் சிங்களமயப் படுத்திக் கொண்டமைக்கும் சான்றும் உண்டு. கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலே தோன்றிய தமிழ் இலக்கண நூல் வீரசோழியம். இந் நூலினைச் சோழ நாட்டின் பொன்பற்றி எனும் ஊரினையாண்ட குறுநில மன்னனான புத்தமித்திரன் என்பவர் இயற்றினார். இவர் பௌத்த சமயத்தினைப் பின்பற்றிய தமிழர். இதனை,

*மிக்கவன் போதியின் மேதக் கிருந்தவன் மெய்தவத்தால்*

*தொக்கவன் யார்க்குந் தொடரவொண் ணாதவன் தூயனெனத்*

*தக்கவன் பாதந்தலைமேற் புனைந்து தமிழுரைக்கப்*

*புக்கவன் பைம்பொழிற் பொன்பற்றி மன்புத்தமித்திரனே*

\- வீரசோழியப் பாயிரம்

எனும் அடிகளால் அறியலாம். மேலும், இந்நூலினை இயற்றும்படி ஊக்குவித்தவன் சோழப் பேரரசனான வீரசோழன். இதனால் அச்சோழன் பெயரையே அந் நூலுக்குப் புத்தமித்திரர் சூட்டினார். இதனை,

*தேமேவிய தொங்கற் றேர்வீர சோழன் றிருப்பெயரால்*

*பூமே லுரைப்பன்*

\- வீரசோழிய பாயிரம்

எனும் பாயிரவடிகளின் வழி அறியலாம். இலக்கண நூலினை அப்படியே தழுவி கி.பி.13- ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழியின் முதல் இலக்கணநூலாகிய ஷித்தசங்கராவை வடிவமைத்துக் கொண்டார்கள் என்பதின்னை அறியலாம். இது குறித்து அறிஞர் பலர் ஆய்ந்துள்ளனர்.

மேலும் மணிமேகலையில் காணக் கிடைக்கும் அரிய பௌத்த மெய்யியல் கலைச்சொற்களின் வழித் தமிழ்மரபில் பௌத்தம் வேரூன்றிநின்ற பாங்கினை உணரலாம். தமிழர்களில் ஈழநாட்டுத் தமிழர்களே இறுதியாகப் பௌத்தத்தைக் கை விட்டவராவர். அதனால், தமிழகத் தமிழர்களிடம் காணப் படாத பல பௌத்தக் கூறுபாடுகள் இன்றளவும் அவர்களிடம் காணப்படுகின்றமையைக் காணலாம். அவற்றை மிகுத்துக் கூறின் விரியும் சிலவற்றை மாத்திரம் சுட்டிச் செல்வோம்.

உணவினை உண்ணும் முறைமையால் பல் வகை உணவுகளினையும் ஒன்றன்பின் ஒன்றான படிநிலை வரிசையில் (சான்றாக, முப்பழம், பணி யாரம், பருப்பு, குழம்பு, மிளகுச்சாறு, பாயசம், தயிர் என்பனவாக) ஒன்றன் பின் ஒன்றாகப் பரிமாறி உண்பதே பண்டைத் தமிழர்மரபு. ஆனால் பௌத்த மரபில் பரிமாறுதல் என்பது குறைவு. ஒரே முறையிலேயே உணவு வகைகள் அனைத்தும் உண்கலத்தில் வழங்கப்பட்டு விடும். இதனை இன்றும் பர்மியர், தாய்லாந்தியர், கம்போடியர், சிங்களர் முதலாய மக்களிடம் காணலாம். இவை பௌத்த மடங்களில் இருந்து இம்மக்களிடம் பரப்பப்பட்ட பண்பாடு. இவ்வாறு உணவு வகைகளை ஒன்றாக வைத்து உண்ணும் பௌத்தமரபு இன்றும் ஈழத்தமிழரிடம் உண்டு.

கல்வியில் புகழில் உயர்ந்தவர் எக்குலத்தாராகிலும் எந் நாட்டினராயினும் அவர்களைத் தங்கள் சமூக அமைப்பில் உயர்நிலையில் வைத்துப் போற்றுவது பௌத்தமரபு. இப்பண்பும் ஈழத் தமிழர்களிடம் இன்றும் வழக்கில் உள்ள பண்பாடாகும். இவை போன்று பல் வகைப் பண்பாட்டுக் கூறுபாடுகளைக் கூறிச் செல்லாம்.

பௌத்தம் இலங்கையில் பரவுவதற்குச் சற்று முற்பட்ட காலத்திலேயே ஆசிவக மதம் ஈழம் முழுவதும் பரவிவிட்டது. இதற்கு ஈழமண்டலம் முழுவதும் காணப்படும் ஐயனார் வழிபாடே சான்று. பௌத்தம் மணிபல்லவத்தை மையமாகக் கொண்டமை போல், ஆசிவகம் இன்றைய அனலைதீவை மையமாகக் கொண்டிருந்தது. அனலைதீவே ஆசிவகத்தின் தலைமைப் பீடமாக விளங்கியது. ஆசிவத்தின் முதன்மைக்கொள்கை அதன் அணுவியற் கொள்கையே. அதனடிப்படையில் எழுந்த அணுழைதீவே அனலைதீவாயிற்றெனலாம். பௌத்தம் ஈழத்தில் பெரும் அலையாக எழுந்த போது ஆசிவகம் தம் இருப்பைத் தக்கவைக்கப் பெரிதும் போராடி வீழ்ந்ததெனலாம்.

ஈழத்தில் தமிழர்கள் பௌத்தத்தை விட்டுச் சைவநெறியினைக் கைக்கொள்ளத் தொடங்கிய வரலாற்றினை இனி ஆய்வோம். தமிழ்ச் சமூகத்தில் சங்ககாலத்திற்கு முன்பு தொடங்கி, இன்றளவும் சமயமாறுதல் களும் பொருந்துதல்களும் சமயத் தக்க வைப்புகளும் தொடர் நிகழ்வுகளாகின்றன. ஆசீவகம், பௌத்தம், சமணம், வைதீகம், இசுலாம், கிறித்தவம் முதலாய பல சமயங்கள் தமிழர் மீதும் தமிழ் மொழியின் மீதும் சாலத்தாக்கங்களை எற்படுத்தியுள்ளன. பண்டைத் தமிழ்ச் சமுதாய அமைவில் தமிழர்களின் மீது புறச்சமயங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்தும் பொருந்துதல்கள் குறித்தும் சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, நீலகேசி, யசோதரகாவியம், சூளாமணி மேருமந்திரபுராணம், திருநூற்றந்தாதி, தேவாரம், பெரியபுராணம், திருவாசகம், சிவஞானசித்தியார் பரபக்கம், நீலகேசித் திரட்டுரை, சிவஞானசித்தியார் பரபக்கத் திற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் எழுதியவுரை முதலான நூல்களில் உள்ள சமயப் பொருந்துதல்கள் வழி அறியலாம். பண்டைத் தமிழரின் சமய மோதல்கள் குறித்தும் சமய மாறுதல்கள் குறித்தும் தெரிவிப்பனவாக இவை அமைகின்றன. மகேந்திரவர்மன் கூன்பாண்டியன் முதலாய மன்னர்களும், நாவுக்கரசர் முதலான துறவியரும் தங்களைச் சமயமாறுதலுக்கு உட்படுத்திக் கொண்டவர்களே. தமிழகத்தில் சமயமாறுதல்கள் மூன்றாம் நூற்றாண்டில் ஆசிவகம் பௌத்தம் முதலானவற்றிலிருந்து சமணத்தை நோக்கியதாகப் பெரிதும் இருந்தது. ஆனால், ஐந்தாம் நூற்றாண்டிற்கு பிறகு பக்தி இயக்க வளர்ச்சியால் மாறுதல்கள் வைதீகத்தினை நோக்கியதாக அமைந்தன. தொண்டை நாட்டிலே நாவுக்கரசர் முதலானோரும், பாண்டிய நாட்டில் ஞானசம்பந்தரும் சமணரை நீக்கி வைதிகத்தினை மேம் படுத்தினர். குலசேகர ஆழ்வார் போன்றோர் பௌத்த கோயில்களில் கொள்ளையிட்டும் வைணவத்தை மேம்படுத்தினர். ஆனால், ஈழத்தினைப் பொறுத்தவரை, கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை தமிழரிடம் பௌத்தநெறி மேலோங்கியே இருந்தது.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டளவில் ஈழத்திலும், தமிழகத்திலும் சமண, பௌத்த வைதிகத்திற்கெதிராகத் தங்களது தமிழ் மரபின் வழிபட்டதாகிய தென்புலத்தார் வணக்கம், தாய்த் தெய்வ வழிபாடு முதலிய வற்றினை அடிப்படையாகக் கொண்ட தமிழிய வழிபாட்டுச் சடங்கியலைக் கொண்டதாகிய கட்டமைப்பினைப் பரவலாக்கும் முயற்சியாகக் கண்ணகி வழிபாட்டுப் பரவலாக்கத்தினைக் குறிப்பிடலாம். உலக மன்னவன் என்று சிலப்பதிகாரத்தால் குறிப்பிடப்படும் செங்குட்டுவச் சேரனால் இப்பெருமுயற்சி செய்யப்பட்டுப் பல நாடுகளைச் சேர்ந்த மன்னர் களும் அழைக்கப்பட்டு ஒரு மாநாடு போல் கண்ணகி வழிபாட்டுப் பரவல் குறித்த நிகழ்வு நிகழ்த்தியமையை,

*உலக மன்னவ னின்றோன் முன்னர்*
*அருஞ்சிறை நீங்கிய வாரிய மன்னரும்*
*பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்*
*குடகக் கொங்கரு மாளுவ வேந்தரும்*
*கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்*

சிலம்பு. 30: 156-160

எனும் மேற்கண்ட அடிகளில் பயிலும் கயவாகு தமிழ் மன்னனே, (அவன் சிங்கள மன்னன் அல்ல வென்பதினை விரிவஞ்சி பிரிதோர் இடத்தில் காண்போம்.) அவன் தமிழகம் முழுதும் கண்ணகி வழிபாட்டு மரபு ஏற்பட்டமையை ஈழத்திலும் பரவ லாக்க முயற்சித்து வென்றவன். பல சமய நுழைவுகள் ஈழத்தமிழரிடம் ஏற்பட்ட போதும் பௌத்தப் பெரும் அலையில் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் சிதையாமல் காத்தவன் இவனே பௌத்தத்தின் உச்ச காலமாகிய கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் தென்புலத்தார் வணக்கத்தின் மரபு வழிப்பட்ட கண்ணகி வழிபாட்டைக் கையிலெடுத்துக் கண்ணகிக்குக் கோயில் எடுத்து ஆடித்திங்கள் பெருவிழா எடுத்துக் கொண்டாடியமையை,

*அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்ட முந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித்திங்க ளகவையின் ஆங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறையெடுப்ப மழைவீற்றிருந்து வளம்பல பெருக்கிப் பிழையா விளையுள் நாடாயிற்று.*

எனும் சிலப்பதிகார உரைப்பெறு கட்டுரைவழி அறியலாம். ஈழத்தில் பௌத்தம் மிகச் செழித்தோங்கிய போது இக் கண்ணகி வழிபாட்டுத் தமிழ் மரபினை அதனால் அழிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி.எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகே தமிழர்கள் பௌத்தத்தைக் கைவிட்டுச் சைவ சமயத்தைக் கைக் கொள்ளத் தொடங்கினர்.

இவை குறித்த தரவுகளை இங்கு ஆய்வோம். இலங்கையில் சமய மாறுதல்கள் குறித்த செய்திகள் திருவாதவூரடிகள் எனும் மாணிக்கவாசகரின் வரலாற்றினைக் கூறும் நூல்களிலேயே காணக் கிடைக்கின்றன. இவற்றில் உ.வே. சாமிநாதையரால் பதிப்பிக்கப்பட்ட செல்லிநகர்ப் பெரும் பற்றப் புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம். (கி.பி.13. நூற்.), பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணம் (கி.பி.17), கடவுள் மாமுனிவர் பாடிய திருவாதவூரடிகள் புராணம் (17-ம் நூற்றாண்டு), திருவுத்தர கோசமங்கை புராணம் (18-ஆம் நூற்றாண்டு) கல்லாடம் என்பன நமக்குக் கிடைக்கும் சான்றுகளாகின்றன. இவற்றில் ஈழத்தில் பௌத்தர்கள் சைவர் களாக மாறிய கதைகளின் அமைவைக் காண்போம்.

சிவனடியார் ஒருவர் தமிழக சிவதலங்களை வழிபட்டு வருகையில் பொன்னம்பலத்தில் உறையும் கூத்தனை வழிபட்டுவிட்டு ஈழநாட்டை அடைந்தார். இவர் செல்லுமிடந்தோறும் பொன்னம்பலம் எனக் கூறுதலினை வழமையாகக் கொண்டிருந்தார். இதனைப் பொறாத ஈழப் பௌத்தர்கள் தம் மன்னனிடம் முறையிட்டனர். ஈழமன்னனும் அவ்வடியாரை அழைத்து வரப் பணித்தான். அரசன் முன்னிலையில் அழைக்கப்பெற்ற அவ்வடியார் பொன்னம்பலம் எனக்கூறி அமர்ந்தார். அச்சொல்கேட்ட மன்னன் பொன்னம் பலத்தின் விளக்கத்தைக் கேட்டான். தில்லைச்சிற்றம்பலத்தின் சிறப்பையும் ஒருமுறை பொன்னம்பலமெனில் ஐந்தெழுத்து மந்திரத்தை இருபத் தோராயிரத்து அறுநூறு முறை ஓதிய பயன்கிடைக்கும் என்பனவாகக் கூறிமுடித்தார்.

அது கேட்ட அரசவைப் புத்தகுரு வெகுண்டு "திரிபீடகத்தைத் திருவருள் செய்த புத்ததேவர் அல்லது வேறொரு தெய்வமும் உண்டோ? நான் தில்லையை அடைந்து சைவர்களை வாதில் வென்று பொன்னம் பலத்தைப் புத்தவிகாரமாக மாற்றுவேன்" எனச் சூளுரைத்துச் சிற்றம்பலத்தை நோக்கித்தமது புத்தகுழு புடைசூழ புறப்பட்டான். ஈழமன்னனும் தனது ஊமை மகளை அழைத்துக் கொண்டு தில்லை நோக்கி ஏகினான். தில்லையை அடைந்த பௌத்த குரு திருப்புலீச்சரத் திருக்கோயிலிலே தங்கினான். தில்லை மக்கள் புறச்சமயர்களைத் தில்லையை விட்டு அகலுமாறு கூறினர்.


ஆனால், புத்தகுரு "உங்கள் சோழ மன்னனுக்குகெதிரில் சைவம் பொய்ச் சமயமெனச்சாற்றி புத்ததேவனே மெய்யான கடவுள் என்பதை மெய்ப்பித் தாலன்றி இவ்விடத்தை விட்டகலேன்" என்றனன். பௌத்தரை வாதில் வென்று அகற்றுதலே சிறந்ததென உணர்ந்த தில்லைவாழந்தணர், சோழமன்னருக்கும், சிவனடியார் களுக்கும், அறிஞர்களுக்கும் ஓலை எழுதியனுப்பினர். அன்றைய இரவின் வைகறைப் பொழுதிலே நகரமக்கள் அனைவரின் கனவிலும் தோன்றிய சிவபெருமான் "ஊரெல்லையில் தங்கியுள்ள வாதவூரன் தர்க்க சாஸ்திர முறைக்குப் பொருத்தமான வகையில் புத்தர்களை வாதில் வெல்வான் அழைப்பீராக" வெனக்கூறி மறைந்தார்.

பொழுது புலர்ந்ததும் இச்செய்தியை மக்கள் வாதவூரருக்குத் தெரிவித்தனர். அதுகேட்டு எழுந்த வாதவூரார் பௌத்தர்கள் மண்டபத்தினை அடைந்து சிவனோடு இயையாத அவர்களைத்தான் காணல் தகாதென இடையில் திரையிடுவித்தமர்ந்தார்.

( அடுத்த வாரமும்...)




தொகுப்பு:
சி. விமலன்



# விஸ்வரூபம்

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கையை 48 ஆக உயர்த்தும் யோசனையைச் சர்வதேச உதை பந்தாட்ட சங்கங்களின் சம்மேளனத் தலைவர் ஜியானி இன்பான்டினோ முன்வைத் துள்ளார். தற்போது இது குறித்த சிறந்த யோசனைகள் இருப்பதாகவும், அது தொடர்பாக விவாதித்து இறுதி முடிவை 2017 ஜனவரி மாதம் எடுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது உலகக் கிண்ணத்தில் 32 நாடுகள் பங்கு பற்றினாலும், போட்டியை நடத்துகின்ற நாடும், இறுதியாக நடைபெற்ற உலகக் கிண் ணத்தில் சம்பியனான நாடும் நேரடியாகவே தகுதி பெற்று விடுவதனால், தகுதிச் சுற்றுப் போட்டிகளில் விளையாடி முன்னிலை வகிக்கும் ஏனைய 30 நாடுகளுக்கே வாய்ப்புக் கிடைக்கின்றன.

ஆனாலும் போட்டியை நடத்தும் நாட்டையும் சம்பியனான நாட்டையும் நேரடியாகச் சேர்த்துக் கொள்வதில் சில விமர்சனங்கள் இருக்கவே செய்கின்றன. உலகக்கிண்ணப் போட்டிகள் 4 வருடங்களுக்கு ஒரு முறை நடப்பதனால் அணிகளின் நிலைமை மோசமாக மாறுவதற்கும் வாய்ப்புள்ளது. உதாரணமாக 2010 உலகக் கிண்ணச் சம்பியனான ஸ்பெயின், 2014 உலகக் கிண்ணத்தில் முதற் சுற்றுடனேயே வெளியேறியது. ஒரு சம்பியன் அணிக்கு வழங்கப்படும் உயர்ந்த பட்ச கௌரவமாக நேரடித் தகுதியைக் கருதினாலும், சுமார் 200 நாடுகள் தகுதிச்சுற்றில் விளையாடி அவற்றில் 32 நாடுகளே தெரிவாகும் நிலையில் நேரடித்தகுதிகள் குறித்த மாற்றுப் பார்வையும் அவசியமானதா கவே தோன்றுகின்றது.

அதுபோல 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற போட்டியில் தென்னாபிரிக்கா முதற் சுற்றுடனேயே வெளியேறி இருந்தது. தென்னாபிரிக்கா அதுவரை ஆபிரிக்கக் கண்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி உலகக் கிண்ணத்தில் விளையாடாத போதிலும், அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டமை சரிதானா? என்ற கேள்வியை இது எழுப்பி இருந்தது. விளையாட்டில் வெற்றி தோல்விகளை விடப் பங்குபற்றுதலே முக்கியம் என்றாலும் இவ்வாறான நேரடி வாய்ப் புக்கள் திறமையான இரண்டு அணிக ளின் வாய்ப்பை இல்லாமல் செய்து விடுகின்றன என்பதே நிதர்சனமாக உள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகள், ஒரு மாதகாலத்தினுள் முடிவடைந்து விடுவது அதன் சிறப்புக்களில் ஒன்று. அணிகளை அதிகரிக்கும் போது, போட்டி நடைபெறும் நாட்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போகின்றார்களா? அல்லது ஒரு நாளில் நடைபெறும் போட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போகின்றார்களா? என்ற எதிர்பார்ப் பையும் இது ஏற்படுத்துகின்றது.

அணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது ஒப்பீட்டளவில் உதை பந்தாட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஐரோப்பிய நாடுகளுக்கே வரப்பிரசாத மாக அமையும் எனத் தோன்றுகின்றது. ஒரு வகையில் அதுவே தரமான போட்டிகளை உலகக் கிண்ணத்தில் பார்வையிடுவதற்கான வாய்ப்பையும் தக்கவைக்கலாம்.



# தட்டிக்கழிக்க முடியாது!

அடுத்த ஆண்டு அவுஸ்ரேலிய அணி விளையாடவுள்ள போட்டி அட்டவணையின் பிரகாரம், அவுஸ்ரேலிய டெஸ்ட் அணி 16 மணித்தியாலங்களுக்குள் அவுஸ்ரேலியாவில் இருந்து இந்தியாவுக்கு வருகை தரவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. அடுத்த வருடம் இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் மூன்று போட்டிகளைக் கொண்ட இருபதுக்கிருபது போட்டித் தொடரின் இறுதிப் போட்டி பெப்ரவரி 22 ஆம் திகதி, அடிலெயிட் மைதானத்தில் நடைபெறு கின்றது. அடுத்த நாள் 23 ஆம் திகதி இந்தியா வுடனான டெஸ்ட் போட்டி புனேயில் தொடங்குகின்றது.

ஸ்ரீபன் ஸ்மித், டேவிட் வோணர், உஸ்மான் கவாயா, மிட்செல் ஸ்ராக் போன்ற வீரர்கள் டெஸ்ட் போட்டிகளிலும் இருபதுக் கிருபது போட்டிகளிலும் பங்குபற்றுவதனால் இவர்களுக்கே நெருக்கடி நிலை ஏற்பட்டுள் ளது. இருப்பினும் இலங்கை உடனான இருப துக்கிருபது தொடரிலோ அல்லது இறுதிப் போட்டி யிலோ இவர்களுக்கு ஓய்வளிக்கப் பட்டு அதற்குரிய மாற்று ஒழுங்குகள் செய்யப்படலாம் என்றே தோன்றுகிறது.

அவ்வாறு நடைபெறும் பட்சத்தில் சிம்பாப்வே, பங்களாதேஷ் போன்ற அணிகளுடன் விளை யாடும் போது பாதுகாப்புக் காரணங்கள் தவிர்த்து முதற்தர அணிகள் பங்குபற்றுவதையே ஐசிசி விரும்புகின்றது. ஆனாலும் மேற்படி நெருக்கமான போட்டி அட்டவணைகளை அமைப்பது கூட இரண்டாந்தர அணிகளுடன் விளையாடுவதற்கான நிலையை மறை முகமாக ஊக்குவிப்பதைப் போலவே உள்ளது.

ஏற்கனவே ஆசிய நாடுகளில் டெஸ்ட் தொடர்களில் படுதோல்வி அடைந்துவரும் அவுஸ்ரேலிய அணி இந்தியத் தொடரிலும் தோல்வி அடைந்தால் காரணம் கூறுவதற்கு இவ்வாறான ஒரு அட்டவணை வாய்த் திருக்கிறது. 2017 ஏப்ரலில் தொடங்கவுள்ள ஐபிஎல் போட்டி அட்டவணைக்கு எந்தவித இடையூறும் வராத வகையிலேயே அவுஸ்ரேலியத் தொடர் நெருக்கடி மிகுந்ததாக அமைக்கப்பட்டிருப்பது புலனாகின்றது.

போட்டிகள் அதிகரித்தால் ஓரிரு தொடர்களில் இருந்து வீரர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்றாலும் ஒவ்வொரு நாட்டு கிரிக்கெட் சபையும் வீரர்களை நம்பியே இருக்கின்றது. அதுபோல ஐசிசி ஒவ்வொரு நாட்டு கிரிக்கெட் சபையுடனும் தொடர்பை வைத்திருக்கிறன. அந்தவகையில் வீரர்களின் உடல் நிலையையும், மனோநிலையையும் கருத்திற்கொண்டு; தேவையேற்படின் போட்டி அட்டவணையை மறுசீரமைக்க வேண்டிய கடப்பாடு ஐசிசிக்கும் உள்ளது.

# கனவே கலையாதே!

சீனாவைப் பொறுத்தவரை ஒக்ரோபர் முதல்வாரம் தேசிய விடுமுறை வாரமாகக் கருதப்பட்டாலும் சீன ரென்னிஸ் ரசிகர்களுக்கு அது ஒரு பொன்னான வாரமாகும். ஏனென்றால் இந்தவாரத்திலேயே சீன ஓபன் தொடர் தேசிய ரென்னிஸ் நிலையத் தில் நடைபெறுவது வழக்கம். சீனாவில் ரென்னிஸ் போட்டிகளுக்கான வரவேற்பு சிறிது காலத்திற்கு முன்னர் வரை சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை என்பதே உண்மையாக இருந்தது. சீனா சார்பில் முன்னாள் ரென்னிஸ் வீராங்க னையான லீநாவே 2011 பிரெஞ்ச் கிராண்ட்ஸிலாமையும் 2014 அவுஸ்ரேலியன் கிராண்ட்ஸிலாமையும் வென்றிருந்தார். இதுவே ஆசிய மகளிர் சார்பில் பெற்ற அதி உச்ச சாதனையுமாகும்.

ஆனாலும் தற்போது ரென்னிஸ் கலாசாரத்தை சீனா சுய அடையாளத்துடன் மேற்கொண்டு வருவது புலனாகின்றது. சீன ஓபன் தொடரின் இயக்குநர் ஜூங்குய் இது குறித்துக் கூறுகையில் சென்ற வருடம் நடைபெற்ற சீன ஓபன் தொடர் 244,557 சீன மக்களைக் கவர்ந்துள்ளதாக ஒரு கருத்துக் கணிப்புக் கூறுகின்றது. இது ஏனைய கிராண்ட் ஸிலாம் போட்டிகளோடு ஒப்பிடுகையில் குறைவு தான் என்றாலும் சீன ஓபன் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பார்க்கும் போது இது ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியாகவே காணப்படுகின்றது. இந்த வருடம் சீனாவில் நடைபெறவுள்ள ATP மற்றும் WTA போட்டிகளின் எண்ணிக் கையும் இதற்குச் சான்று என்கிறார்

அத்தோடு சீனாவில் வாழும் மத்தியதர வர்க்கத்தினிடையேயும் ரென்னிஸ் குறித்த ஆர்வம் ஏற்பட்டுள்ளதாகவும், ரென்னிஸ் போட்டிகளின் வரலாறு மற்றும் விளையாட்டு முறைகள் பற்றி அவர்கள் அறிந்து வருவதோடு தேசிய விடுமுறை காலத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளை சீன ஓபன் தொடருக்கு அழைத்து வருகின்றமையும் அதிகரித்துள்ளது என்கிறார்.

சர்வதேச ரென்னிஸ் போட்டிகளைப் பொறுத்தவரையில் கிராண்ட் ஸ்லாம் போட்டிகள் என்று அவுஸ்ரேலியன் ஓபன் தொடர், பிரெஞ்ச் ஓபன் தொடர், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் தொடர் ஆகிய நான்குமே அழைக்கப்படுகின்றன. தற்போது ஆசியா சார்பில் நடைபெறுகின்ற மிகப்பெரிய தொடராக சீன ஓபன் தொடர் விளங்குவதனால், கிராண்ட்ஸிலாம் வரிசையில் சீன ஓபன் தொடரும் இடம் பெற வேண்டும் என்ற கனவை நோக்கியே தாம் செயற்படுவதாக ஜூங்குய் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளார்.



இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 29.10.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.